

கல்கி

KALKI 28.3.93

ரூ. 3.00

புதிய கூட்டணி!

ஒன்றும் மாறவில்லை



பெயரைத் தவிர

வோல்ஃப்ரூட் ஜுஸ் கான்செண்ட்ரேட் இப்போது வோல்ஃபார்ம் என அழைக்கப்படுகிறது. மற்றவை அனைத்தும் முன்பு இருந்த மாதிரியே. உதாரணமாக, பறித்தெடுத்த பழங்களே அதன் தயாரிப்பில் உபயோகப்படுத்தப் படுகிறது மற்றும் அது வழங்கும் தெவிட்டாத சுவை.

Vólfarm
JUICE CONCENTRATE

சிறந்த சுவை இப்போது ஒரு புதிய பெயரிலே.

SPEER 113 93 TAM

பூக்கள் தந்த விடுமுறை





நெரிசல்
இறுக்கிப் பிழிந்த
இடியர்ப்ப இமையாய்ப்
பேருந்தில் இடம்பிடித்தேன்
என்
தோளில் தொட்டிலாடிய பைக்கும்
இடம்பிடித்தேன்.

அலுவலகத்தில் அதிகாரி பரிமாறிய
கசப்பை எடுத்து
வீதியில் வீசவும் முடியவில்லை.

மாமனார் காரியத்திற்குக்
கடன் தந்த
மாரிமுத்து நட்பு
நாற்பது ரூபாயில் நொறுங்கி உதிரச்
சில்லுகள் - நெஞ்சில்
முள்ளு முள்ளுகளாய்...





ஓய்வுபெறும்
தலைமைக் கணக்கர்க்கு
நினைவுப் பொருள்...
இருபது ரூபாய் கேட்டு வந்த
அறிக்கையில் இட்ட
கையெழுத்து
இதயச் சுவரோரம்
நெளியும்
பாம்பாய்...



சின்னப் பையனுக்கு
''வரைகணிதக் கருவிப் பெட்டி
கிடைக்கவில்லை!''
அக்கா ஆனந்திக்கு
அவள் கேட்ட
''கபில்தேவ் ஸ்டிக்கர்
கிடைக்கவில்லை!''
தயாரித்த இந்தப் பொய்கள்
தலையில் பம்பரம் விட்டன

''இப்படியே இருந்தா எப்படி?
குந்தறதுக்கு நமக்கின்னு ஒரு
கூரை வேண்டாமா?
வீட்டுக்காரி கேள்வி
பேருந்துச் சக்கரங்கள் அடியில்
தூக்கிப் போட்டது என்னை.

நிறுத்தம்,
பசையற்ற - மனிதச்
சக்கையாய்த் தெருவில்
பிதுக்கித் தள்ள, - நான்
கிடைக்காத பதில்களோடு
வீடு நோக்கினேன்.

வாசலில்
பச்சைச் செடி எனக்கெனச்
சித்திரித்து வைத்திருந்த
பூக்கள்
ஒரே தாவாகத் தாவி
என் நெஞ்சின் கவலைகளைத் தம்
கைகளில்
ஏந்திக் கொண்டன

கனங்களிலிருந்து - அந்தக்
கணத்தில் எனக்கு ஒரு
விடுமுறை.





தமிழின்பன்

புதிய கூட்டணி!

'நம்மிடம் கழுத்து இருக்கிறது. நரசிம்மராவிடம் கத்தி இருக்கிறது!' என்று அமைச்சர் ஜி. விசுவநாதன் சொன்னதாகவும், 'பதவி இல்லாமல் நம்மால் இருக்க முடியாதா என்ன?' என்று முதல்வர் பதிலளித்ததாகவும் கூட ஒரு செய்தி! எப்போது நடந்தது இந்த உரையாடல்?

சேலம் - தர்மபுரி சுற்றுப்பயணம் முடிந்து, பிற்பகல் சென்னை திரும்பிய உடனே, தமது போயஸ் தோட்ட வீட்டில் அமைச்சர்களைக் கூட்டி, மூன்று மணி நேரம் பேசினாரே முதல்வர், அப்போது தான்! கூட்டம் முடிந்தவுடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். காங்கிரசுடன் உறவு முறிந்து விட்டது என்றும், நாடாளுமன்றத்தில் நரசிம்மராவ் அமைச்சரவைக்கு இது வரை தமது கட்சி கொடுத்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளுவதாகவும் குறிப்பிட்டிருந்தார் ஜெ. தொடர்ந்து, பழனி நாடாளுமன்றத்துக்கும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும் அ.இ.அ.தி.மு.க தனித்தே போட்டியிடும் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறி விட்டார்.

இதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது : வாழப்பாடி ராமமூர்த்தி, ஜெயலலிதா அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப் போவதாகவும், அ.இ.அ.தி.மு.க அரசைப் பதவியிலிருந்து இறக்கி விசாரணை கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டும் என்றும் நிறைவேற்றிய தீர்மானம்.

* மையம் கொண்ட புயல் எத்திசையில் வீசும்?

இதற்கு முன்பாகவே படிப்படியாக காங்கிரஸ் அ.தி.மு.க உறவுகள் சீர்குலைந்து வந்தது அனைவருக்கும் தெரிந்த கதை ஆதலால் ஜெ. இறுதியாகக் கூறிய இந்தக் காரணம் ஏற்கக்கூடியதே. என்றாலும் இதுவே முழு காரணம் இல்லை என்பதும் நிச்சயம். ஜி. விசுவநாதன் கூறியது போல் இந்த அமைச்சரவை டிஸ்மிஸ் ஆனாலும் கூட அடுத்த ஆறாவது மாதம் தாமே பதவிக்கு வந்து விடுவோம் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியாதது அல்ல. ஏற்கெனவே அவருக்கு உள்ள பாபுலாரிட்டி போதாக்குறைக்கு அனுதாப அலையும் சேர, பெரிய அளவில் வெற்றி பெறுவது சாத்தியமே.

ஆக, ஜெயலலிதா உண்மையில் பயப்படுவது வாழப்பாடியாருக்கோ அவரது மிரட்டல்களுக்கோ அல்ல. அவரது கவலையெல்லாம் சு. சுவாமியின் விஷமங்களைப் பற்றித்தான். மற்றவர்கள் எல்லாம் ஊழல் குற்றச்சாட்டு, விசாரணை கமிஷன், ஆட்சிக் கலைப்பு என்று பேசுகையில் சு. சுவாமி குறுக்கு வழியில் பாய்ந்து டான்ஸி - ஜெயா பப்ளிகேஷன்ஸ் விவகாரத்தில் கவர்னரிடம் மனு சமர்ப்பித்து, அதை அவர் தேர்தல் கமிஷனுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். தேர்தல் கமிஷனர் சேஷனிடம் மனு போய்ச்



> தொண்டர்கள் ஏற்கெனவே 'ஜெ'யை ஆதிபராசக்தியாகப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அயோத்தியில் கோயில் கட்ட முனைந்துள்ள பி.ஜே.பி.யுடன் அவர் இணை சேர்வது இயல்பாகவே அவர்களுக்குத் தோன்றும்.

முறையான கொள்கைகள், கொள்கைகளின் அடிப்படையில் கூட்டணி என்பதெல்லாம் இன்றைய அரசியலில் பழங்கதையாகி விட்டன. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு, தகாத கூட்டணிகளை அமைத்தேனும் ஆட்சியைப் பிடிப்பது ஒன்றே நோக்கமாகி விட்டது.

சேர்ந்தால் அவர் எப்படி நடந்து கொள்வார் என்பது யாராலும் கணிக்க முடியாது. சேஷன் அப்படிப்பட்ட மனிதர். அவர் பாட்டுக்கு 'ஜெ' தேர்தலில் நிற்க ஆறேழு ஆண்டுகள் தடைவிதித்து விட்டால் அப்புறம் அ.தி.மு.க.வே அம்பேல்தான்!

அதனால்தான் ''சு. சுவாமியைக் கட்டுப் படுத்துங்கள்'' என்று சொல்கிறார் ஜெ. ஏதோ சு. சுவாமி என்ற குதிரையின் லகான் பிரதமரிடம் இருப்பது போலவும், அதை இழுத்துப் பிடித்தால் சு. சுவாமி அடங்கி விடுவார் என்றும் கருதுகிறார். இது நடக்காத போது அவருக்கு மைய அரசு மீதும் பிரதமர் மீதும் கோபம் கோபமாக வருகிறது. சு. சுவாமிக்குத் தம்மைப் பற்றிய விவரங்களை ரகசியமாக மைய அரசு தந்து உதவுவதாகக் கருதி கொதிக்கிறார்.



✱ கூட்டணி பிச்சை

ஆனால் ஒரு ஜனநாயகத்தில் ஜனதா கட்சித் தலைவர் என்ற முறையில் சு. சுவாமியின் செயல்பாடுகளை மைய அரசு எப்படி, எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்? இது சாத்தியமில்லை என்பதைப் புரிந்து கொள்ள 'ஜெ' மறுப்பதால்தான் அவர் கோபம் அதிகரிக்கிறது. காங்கிரஸ் மீது பழி வாங்கும் உணர்ச்சி, அதிகரிக்க, 'என் எதிரியின் எதிரி எனக்கு நண்பன்' என்ற நீதியில் பி.ஜே.பி. பக்கம் அவர் கனிவான பார்வை திரும்புகிறது.

சு. சுவாமியின் மனு மீதான சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு (மீண்டும் வழக்கு ஒத்திப் போடப்பட்டாலொழிய) இந்த இதழ் வெளிவரும் போது அளிக்கப்பட்டிருக்கலாம். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் அரசியல் போக்குகள் திசை மாறவும் வாய்ப்புண்டு. ஆனால் இன்றைய நிலையில் மழை, பி.ஜே.பி. காட்டிலே தான்!

உமாபாரதி என்ற பா.ஜ.க. சந்நியாசினி காரணமாக தெற்கே குடிபெயர்ந்த கட்சியின் செயலர்களில் ஒருவரான கோவிந்தாச்சார்யா இங்கு அடியெடுத்து வைத்த நேரம் நல்ல நேரம் போலும். கூட்டணி பிச்சை கோரி அத்வானி முதல் கோவிந்தாச்சார்யா வரை அனைவரும் கையேந்தி நிற்க, அம்மையாரின் அருட்பார்வையும் இவர்கள் பக்கம் திரும்பியிருக்கிறது.

'பி.ஜே.பியுடன் கூட்டணி' என்று 'ஜெ' வாய் திறந்து இன்னும் கூறவில்லை என்றாலும் நெடுஞ்செழியன், ''கூட்டணி அமைப்போம்; மத்திய மந்திரி சபையிலும் இடம் பெறுவோம்'' என்றெல்லாம் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இதே நேரத்தில் அரங்கநாயகமோ ''இங்கே பாரதீய ஜனதா கட்சியே கிடையாது அப்புறம் ஏது கூட்டணி?'' என்று கேட்டிருக்கிறார். ஆக, இறுதி முடிவு தம்மிடம்தான் உள்ளது; மதில் மேல் பூனை எந்தப் பக்கமும் பாயும் என்று 'ஜெ' கூறாமல்



✱ கடைசி முயற்சி



✱ உறுமீன் வருமளவும்

கூறி, விஷயத்தை சஸ்பென்ஸிலேயே வைத்திருக்கிறார். திருச்சிக்கு யாகத்துக்காக வந்த மு. மனோகர் ஜோஷி சஸ்பென்ஸை உடைக்க முயன்று பெரிதாக வெற்றி ஒன்றும் கண்டதாகத் தெரியவில்லை. இருந்தாலும் பி.ஜே.பி. நம்பிக்கையையும் கைவிடவில்லை. இந்த நம்பிக்கைக்கு உரம் சேர்ப்பது காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணி முறிவைத் தடுக்க கடைசி கட்ட முயற்சியாக மார்கரெட் ஆல்வா வந்து 'ஜெ'யுடன் இரண்டு மணி நேரம் பேசிய பேச்சுக்கள் பயன் அளிக்கவில்லை என்பதே.


இன்று அ.தி.மு.க.வின் கூட்டணி பி.ஜே.பிக்கு இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. முறையான கொள்கைகள், கொள்கைகளின் அடிப்படையில் கூட்டணி என்பதெல்லாம் இன்றைய அரசியலில் பழங்கதையாகி விட்டன. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு, தகாத கூட்டணிகளை அமைத்தேனும் ஆட்சியைப் பிடிப்பது ஒன்றே நோக்கமாகி விட்டது. தில்லியில் ஆட்சியைப் பிடிப்பதற்காக மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, தமிழகத்தைக் காங்கிரஸ் கைவிட்டது எனில், பி.ஜே.பியோ, தில்லியில் ஆட்சியைப் பிடிக்கும்போதே தமிழகத்திலும் கால் ஊன்றிக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறது! காங்கிரஸுக்கு ஒரு பக்கம் லாபம் மறுபக்கம் நஷ்டம். பி.ஜே.பிக்கோ இருதரப்பிலும் (டில்லி, தமிழகம் இரண்டிலும்) லாபம் தான்! இதற்காகவே மார்ச் 21 பேரணியை ரத்து செய்து, ஜெயலலிதாவுக்குத் தொல்லை தராமல் நல்ல பெயர் வாங்கிக் கொண்டது.

உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கின் நிலைதான் பி.ஜே.பி. நிலை எனில், அ.தி.மு.க. நிலை என்ன?

"பேண்ட்டையும் போட்டுக்கிட்டு அது மேலே வேஷ்டியையும் கட்டியிருக்கீங்களே, ஏன்...?"

"ஹி... ஹி... ரெண்டுலே ஒண்ணு வீட்டிலே இருந்தா அதை என் மனைவி பாத்திரத்துக்குப் போட்டுடுவாளோங்கிற பயம்தான்!"

- விஜயம்



திராவிடப் பாரம்பரியம் பற்றியும், பெரியார் - அண்ணா கொள்கைகள் பற்றியும் பேசி வரும் அ.இ.அ.தி.மு.க., இந்தி ஆதரவும், மதவாதமுமே அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்ட பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டணி உறவு கொள்ளுவது எந்தவிதத்தில் நியாயப்படுத்தப்படும் என்ற விவாதம், இந்த இரு கட்சிகளைத் தவிர்த்துப் பிற கட்சித் தொண்டர்களிடையேயும், பத்திரிகைகளிலும் மட்டுமே அடிபடும். 'மக்கள் என் பக்கம்!' என்று எப்படி ஜெ. நம்பிக்கையுடன் முழக்கம் செய்கிறாரோ, அதே போல அ.இ.அ.தி.மு.க.விலிருந்து விலகினால் நம் கதி அதோ கதி என்று அமைச்சர்களும், கட்சி உறுப்பினர்களும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு விட்டதாகவே தெரிகிறது.

அண்ணாவையும் பெரியாரையும் எண்ணிப் பார்க்கக்கூடிய மனச்சாட்சியுள்ள சிலர் அ.தி.மு.க.வை விட்டு வெளியேறலாம். ஆனால் அவர்களைப் பற்றி 'ஜெ'க்குக் கவலை இல்லை. அடிமட்டத் தொண்டர்கள் கருத்து ஏதும் தெரிவிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் ஏற்கெனவே 'ஜெ'யை ஆதிபராசக்தியாகப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அயோத்தியில் கோவில் கட்ட முனைந்துள்ள பி.ஜே.பி.யுடன் அவர் இணை சேர்வது இயல்பாகவே அவர்களுக்குத் தோன்றும்.

ஆனால் ஒன்று. எம்.ஜி.ஆர். மாதிரி அரவணைத்துக் கொண்டு போகாமல், முணுக்கென்றால் கோபித்துக் கொண்டு சாட்டையடி வீசும் ஜெ.யின் அணுகுமுறையை எத்தனை தூரம் பா.ஜ.க. அனுசரித்துப் போக முடியும் என்பதுதான் புதிய கூட்டணி என்பதையொட்டியுள்ள ஆச்சரியக் குறியைக் கேள்விக்குறியாகவும் மாற்ற வல்லது.

"எல்லாம் நன்மைக்கே" என்ற சித்தாந்தத்தை ஏற்பவர்கள் இந்தப் புதிய அநாசார அரசியலிலும் ஒரு நல்லதைக் காண முடியுமென்றால் அது பிளவுபட்டிருந்த தமிழக காங்கிரஸ் இனி இணைந்து செயலாற்ற முடியும் என்பதுதான். இப்போது ஏற்பட்டுள்ள கருத்து ஒற்றுமை இரு தரப்பிலும் மனஒற்றுமையாகவும் வளர்ந்து, நன்கு உழைத்தால் காங்கிரஸ் இங்கு ஆட்சிக்கு வருவது ஒத்திப் போடப்பட்டாலும் ஒரு சிறந்த எதிர்க்கட்சியாகவாவது இயங்க வாய்ப்புண்டு. அத்தகைய எதிர்க்கட்சி ஆளுங்கட்சியை மெத்தனம் கொள்ள விடாமல் மக்கள் நலன் குறித்துச் சிந்திக்க வைத்தால் தமிழகத்தின் அரசியல் களமும் சரி ஆட்சிக் களமும் சரி ஆரோக்கியமான மாறுதல்களுக்கு உள்ளாகும்.

- சாருகேசி

அட்டை வண்ணப்படங்கள் :
டி. ராமமூர்த்தி



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ்

பெனிபிட் பண்ட் லிமிடெட்

221, சத்தியமூர்த்தி சாலை, இராம்நகர்,
கோயமுத்தூர் - 641 009. ☎ 37463

50 ஆண்டுகளுக்கு மேலான அரிய சேவை

டெபாசிட் திட்டங்கள்

திட்டம்	குறுகிய கால டெபாசிட்			பிக்சட் டெபாசிட் திட்டம்			
காலம்	1 நாள் முதல் 3 மாதங்கள்	3 மாதங்கள் முதல் 6 மாதங்கள்	6 மாதங்கள் முதல் 12 மாதங்கள்	25 மாதங்களுக்கு	36 மாதங்களுக்கு	48 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு
வட்டி விகிதம் ஆண்டுக்கு	15%	16%	17%	18.5%	19%	19.5%	20%
வாடிக்கையாளர் வசதிக்கேற்ப 1 மாதம், 3 மாதம் மற்றும் 6 மாத கால இடைவெளிகளிலும் வட்டி விகிதம் வழங்கப்படும்.		வழங்கும் வட்டி விகிதங்கள்	ஆண்டுக்கு ஒருமுறை	18.5%	19%	19.5%	20%
			6 மாதத்திற்கு ஒருமுறை	17.5%	18%	18.5%	19%
			3 மாதம் அல்லது மாதத்திற்கு ஒருமுறை	16.5%	17%	17.5%	18%

குமுலேடிவ் டெபாசிட் திட்டம்

- 45 மாதங்களில் இரு மடங்கு
- 68 மாதங்களில் மூன்று மடங்கு
- 90 மாதங்களில் நான்கு மடங்கு

டெபாசிட் தொகை ரூ.	முதிர்வு அடையும்போது பெறும் தொகை		
	45 மாதங்கள்	68 மாதங்கள்	90 மாதங்கள்
1000	2000	3000	4000
5000	10000	15000	20000
7500	15000	22500	30000
10000	20000	30000	40000

சுபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- = ரூ. 21,000/- (45 மாதங்களில்)

இத்திட்டத்தில் ரு.10,000/- செலுத்தி 45 மாதங்களில் ரு.21,000/- பெறுவீர்!

உங்களுக்கு கிடைப்பதோ இரட்டிப்பு ஆதயாத்துடன் ஓர் ஆயிரம்!

இத்திட்டத்தில் ரு.10,000/-ம் அதன் மடங்கில் பணம் செலுத்துவோர் மட்டுமே பங்கு பெற முடியும்.

ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத தவணைத் தொகை ரூ.	காலக்கெடுவில் பெறவுள்ள முதிர்வுத் தொகை				
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
100	1320	2880	4720	6480	10040
250	3300	7200	11800	16200	25100
500	6600	14400	23600	32400	50200

ரூ.5 செலுத்தி உறுப்பினராகி பயன் பெறுவீர்! செழுமை தரும் சேமிப்புத் திட்டங்கள்!

ஐஸ்வர்யத்தின் அட்சயபாத்திரம் ஐசிஎஸ்!



‘தீயினுல் சுட்டபுண் ஆறும்’

“எனக்கு பொம்மைகளென்றால் ரொம்ப ஆசை. ஆனுல் எங்க வீட்டு எஜமானியம்மா எதை தொட்டாலும் அடிப்பாங்க, எதிர்த்து பேசினு சூடு போட்டுடுவாங்க...!”

விஜி — வயது 10

விஜிக்கு உலகம் தெரியாது. கொத்தடிமையாய் ஒரு வீட்டிற்கு விற்கப் பட்டவள், நாயைவிட கேவலமாக நடத்தப்பட்டாள். “உதவும் கரங்கள்” காப்பாற்றிய போது அவள் உடம்பில் ஏழு தீ புண்கள் இருந்தன. இன்னும் வடுக்கள் மாறவில்லை, அவள் உடலிலும், உள்ளத்திலும்.

இப்படி ஆதரவின்றி அனாதையாய் துயருறும் சுமார் 400 பேர் — குழந்தைகள், பெண்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், சாகிடக் கும் முதியோர், ஆகியோரை “உதவும் கரங்கள்” உணர்ந்து, உணவு, உடை, உறைவிடம் அளித்து காப்பாற்றி வருகிறது.

இவர்களுக்கு உங்கள் உதவியாய்... ■ பழைய துணிகள், புத்தகங்கள், மீதமான உணவு, மருந்துகள் ஆகியவை அளித்து உதவலாம் ■ செக்/டி.டி./எம்.ஓ./மூலம் பணம் அனுப்பலாம்.

எஸ். வித்யாகர்

உதவும் கரங்கள்

460, என்.எஸ்.கே. நகர், சென்னை-600 106. Ph: 426141, 4830321

• நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

EXELADS • UK 099 • 92

“நேரம் இன்னும் கனியவில்லை!”

புதிய கூட்டணி உருவாகும் வாய்ப்புகள் பற்றி பா.ஜ.க. பொதுச் செயலாளர் கோவிந்தாசார்யா ‘கல்கி’க்கு அளித்த பேட்டி:




● அ.இ.அ.தி.மு.க - இ.காங்கிரஸ் கூட்டணி முறிந்துவிட்ட நிலையில், பாரதிய ஜனதா கட்சி அ.இ.அ.தி.மு.க வுடன் கூட்டுச் சேரலாம் என்ற ஊகங்கள் பற்றி?

●● நிலைமை இன்னும் தெளிவாகவில்லை. கூட்டணி பற்றிக் கருத்துக் கூறும் அளவுக்கு நேரம் இன்னும் கனியவில்லை. சில பிரச்னைகளில் இரு கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து இருந்தாலும், சில பிரச்னைகளை மனம் விட்டு விவாதிக்க வேண்டியிருக்கிறது. அரசியலில் பரஸ்பரம் பாராட்டிக் கொள்ள வேண்டிய தருணங்கள் இருக்கலாம்; சில அரசியல் தேவைகள் கருதி ஓர் உடன்பாட்டுக்கும் வரலாம். ஆனால் எல்லாமே, இரண்டு கட்சிகளும் எந்த அளவுக்குக் கூட்டணியில் தீவிரமாக இருக்கின்றன என்பதைப் பொறுத்தது.

● திராவிட பாரம்பரியக் கட்சியுடன் பா.ஜ.க. எப்படி ஒத்துப் போகும் என்று நினைக்கிறீர்கள்?

●● நாங்கள் அறிந்தவரையில், ஹிந்துத்வத்தின் சாரமும், திராவிட பாரம்பரியம் என்று சொல்லப்படுவதும் ஒன்றே தான். கழகங்களின் பாரம்பரியம் அல்லது திராவிட பாரம்பரியம் என்று ஒரு கால கட்டத்தில் சொல்லப்பட்ட நிரீசுவரவாதம் அல்லது பகுத்தறிவு மட்டுமே அவற்றின் மொத்த கொள்கையாக இருந்ததில்லை; பிற கொள்கைகளோடு அதுவும் ஒன்றாக இருந்தது. சார்வாகத் தத்துவத்துக்கும், கழகங்கள் பிரசாரம் செய்த பகுத்தறிவுக் கொள்கைக்கும் ஒற்றுமை கூடக் காணலாம். திராவிட பாரம்பரியத்தில் வந்த கழகங்கள், காலப் போக்கில், கடவுள்-எதிர்ப்பிலிருந்து கடவுளே இல்லை என்ற நிலைக்கு மாறி, இப்போது பல கடவுள்கள் ஆராதனை என்ற நிலைக்கு வந்துவிட்டன! திராவிட பாரம்பரியக் கட்சி என்று அதன் பெயரிலேயே



தெரிந்தாலும், அது முழு அளவுக்கு இல்லை; தீர்த்துவிட்டது எனலாம். மொழிக் கொள்கையில் அணுகுமுறை, பிராந்திய உணர்வு இவற்றில் பா.ஜ.க.வுக்கு மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக் கொண்டு, ஒரே மாதிரியான கருத்துக்கள் இருக்கும் கொள்கைகளை அரசியல் நன்மை கருதி பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு செயல்பட்டால், ஓரளவு உடன்பாடு காண முடியும். இம்மாதிரி உடன்பாட்டில், இரண்டு கட்சிகளுமே தத்தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்க வேண்டியிராது. தனித் தன்மையையும் இழக்க நேராது.

● ***காங்கிரஸ் மாதிரியே நீங்களும் ஏன் பிராந்தியக் கட்சியின் முதுகில் சவாரி செய்ய விரும்புகிறீர்கள்?***

●● கொள்கை ரீதியான அரசியல் அடித்தளத்தில், பிற கட்சிகளோடு உறவு வைத்துக் கொள்ளும் கட்சி பா.ஜ.க. காங்கிரஸ் அப்படி அல்ல. சரியான கொள்கைப் பிடிப்போ, அரசியல் அபிப்ராயங்களில் ஒத்த கருத்தோ இல்லாமல், தாற்காலிக அரசியல் லாபத்துக்காகக் கூட்டுச் சேருபவர்கள் அவர்கள். அதனால்தான் தி.மு.க. அ.இ.அ.தி.மு.க என்று மாறி மாறி உறவு வைத்துக் கொண்டு, இப்போது குழப்பத்தில் சிக்கி, தி.மு.க.வுக்கு ஆதரவு கோஷ்டி, அ.இ.அ.தி.மு.க.வுக்கு ஆதரவு கோஷ்டி என்று, கட்சிக்குள்ளேயே அடித்துக் கொண்டு நிற்கிறார்கள்; கட்சியின் பெருமையையும் அழித்து, தனித் தன்மையையும் இழந்து நிற்கிறார்கள். எங்கள் கட்சி விஷயத்தில் அப்படி அல்ல. திடமான சில அரசியல் கொள்கைகள் மட்டுமே எங்களைப் பிணைக்க முடியும். அ.இ.அ.தி.மு.க வுடனான எங்கள் கூட்டு, பயங்கரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் துணிவோடு தொடர்ந்து எதிர்த்து நிற்கும் அவர்களின் தீவிர சுடுபாட்டை ஆதரிக்கிறது. எங்கள் இருவருக்குமே, ஒரே மாதிரியான சிவில் சட்டங்கள், பெரும்பான்மை இனத்தவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது, சிறுபான்மை இனத்தவரை அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளாதிருப்பது போன்ற விஷயங்களில் ஒத்த கருத்து இருக்கிறது. அதனால் எங்கள் கூட்டணி அமைந்தால் கூட, அது சந்தர்ப்பவாதக் கூட்டாக இருக்காது. தேர்தல் வெற்றிகள் கருதி அமையும் கூட்டாக இராது. அதனால் எங்கள் அரசியல் அணுகுமுறையையும் காங்கிரஸ் அரசியல் அணுகுமுறையையும் ஒரே கண்ணோட்டத்தில் தயவு செய்து பார்க்காதீர்கள்.

● மத்தியில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற உந்துதல் ஒன்று தவிர, அ.இ.அ.தி.மு.க போன்ற பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டுச் சேர வேறு என்ன நோக்கம் இருக்கிறது உங்களுக்கு? இது மட்டும் சந்தர்ப்பவாத அரசியலில் சேர்த்தி இல்லையா?

●● எங்களுக்குக் கட்சி மட்டுமல்லாது சமூகமும் தேச நன்மையும் முக்கியம். எங்கள் தொடுவானத்தின் எல்லை விசாலமானது. ஆட்சி மட்டுமே எங்களுக்குப் பிரதானம் அல்ல. நாட்டுக்கு நன்மைகள் செய்ய ஆட்சி ஒரு கருவி என்று நினைப்பவர்கள் நாங்கள். ஆட்சிக்கு வர வேண்டும் என்று உள் நோக்கம் ஒன்றை வைத்துக் கொண்டு நாங்கள் இயங்குவதில்லை. எங்களுக்கு ஆளத் திறமை இருக்கிறது. அதற்குப் பின்னே நியாயமான உந்துதல் இருக்கிறது. மக்கள் இவற்றைப் பரிபூரணமாக நம்பி, அதிகாரத்தை எங்கள் கைகளில் ஒப்படைக்கும் பட்சத்தில், அதை ஏற்றுக் கொள்ளுவோம்.

● *சமீபத்திய பம்பாய் வெடிகுண்டுச் சம்பவங்களை பா.ஜ.க. வின் அயோத்தி சம்பவங்களின் விளைவு என்று நீங்கள் உணரவில்லையா?*

●● நாட்டில் நடக்கிற எல்லா அசம்பாவிதங்களையும், விபத்துக்களையும் டிசம்பர் - 6 சம்பவத்தோடு முடிச்சுப் போடுவது நேர்மையல்ல. பத்து வருடங்களாகவே, பம்பாய் நகரம் பவர் ஏஜெண்டுகள் பத்திரமாகப் பதுங்கி வேலை செய்யும் அளவுக்குப் பாதுகாப்பற்றதாகி வருகிறது என்று சொல்லி வந்திருக்கிறோம். மேலும் கோஷ்டிப் பூசல்கள் நடக்காத நாளே இல்லை. நாட்டின் ஸ்திரத்தன்மையை உலுக்கும் சக்திகளுக்கு, தூண்டுதல் எதுவுமே தேவை இல்லை என்ற நிலை. உளவுத் துறையின் தோல்வியோடு, ஆளத் தெரியாத கையாலாகாத்தனம் சேர்ந்து கொண்டிருக்கிறது - அவ்வளவுதான். மாநில அரசும், மத்திய அரசும் தவறை உணர்ந்து, தார்மீகப் பொறுப்பேற்று, பதவி விலகியிருக்க வேண்டும். நிலம் பிடுங்கும் மாஃபியா கும்பலின் கைவரிசையோடு, சிவசேனையின் அநாகரிகக் கொக்கரிப்பும், பா.ஜ.க. மீது தூற்றலும் சேர்ந்து கொண்டன. நிகழ்ந்துவிட்ட கொடுமைகளை அரசியல் நோக்கில் பாராமல், எல்லாரும் இணைந்து நிலைமையைச் சீராக்க முனைய வேண்டும்.

– நமது நிருபர்
படம் : கோபிநாத்

குழந்தை ப்ரீதியால் பால் குடிக்க முடியவில்லை. உதட்டில் பிளவு; மேல் வாயின் உட்பகுதியில் பிளவு - பிறவியிலேயே... கொடுத்த பாலில் பாதிக்கு மேல் 'கொடகொட'வென்று வெளியே வந்தது! ராஜாராமன் தம்பதி மருத்துவர்களிடம் சரணாகதி அடைந்தனர். ஒன்பதாவது மாதத்தில் ப்ரீதியின் பிளவுபட்ட உதடு பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் திருத்தப்பட்டது. ஒன்றரை வயதில் மீண்டும் ஆபரேஷன் செய்து மேல் வாயின் உட்பகுதிப் பிளவைச் சரிசெய்தார்கள்.

ப்ரீதிக்கு உண்பதும் அருந்துவதும் இயல்பாயின. ஆனால் பிரச்னையின் ஓர் அம்சம்தான் தீர்ந்திருந்தது. ப்ரீதி பேசிய போது உச்சரிப்புத் தெளிவாக இல்லை. உதாரணமாக, ஆங்கில எழுத்துக்களைக் கற்றுத் தந்த போது 'S' ஐயும் 'Y' ஐயும் வேறுபடுத்தி உச்சரிக்க அவளால் முடியவில்லை.

மேலும், குழந்தை வளர வளர, பற்கள் வாய்க்கு வெளியே துருத்திக் கொள்ள ஆரம்பித்தன. இதனால் உண்பது மீண்டும் பிரச்னையாயிற்று. மேல் பற்களும் கீழ் பற்களும் அழகாக இணையாததால் உணவு இலகுவாக வாயில் அரைபடவில்லை; உச்சரிப்புத் திறன் மேலும் பாதிக்கப்பட்டது. குழந்தை ப்ரீதி இளம்பெண்ணாக வளர்ந்த போது அவளது தோற்றம் குறித்த கவலையும் உடன் வளர்ந்தது...

சென்னையில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என்று கேள்விப்பட்டு, கோலாரிலிருந்து இங்கு வந்தார்கள் ப்ரீதி குடும்பத்தினர்.

டாக்டர் குணசீலன்★ அயல்நாடுகளில் சென்று பல் - தாடைப் பகுதி அறுவைச் சிகிச்சையில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்த பல் மருத்துவர்.

ப்ரீதியுடைய வாயின் உட்பகுதியை விசேஷ எக்ஸ்ரேக்கள் எடுக்கச் செய்தார். 'பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' கரைத்து வாயின் வடிவத்தைப் படிமம் எடுத்துக் கொண்டார். கம்ப்யூட்டர் உதவியுடன் மாவுப் படிமத்துக்கு 'மாடல்' ஆபரேஷன் செய்து பார்த்தார். ப்ரீதியின் பல் அமைப்புக்கு ஏற்ப வாய்ப் பகுதியை எப்படி, எந்த அளவுக்கு விரிவாக்க முடியும் என்பதை மிகக் கவனமாக நிர்ணயித்தார்.

அப்புறம் என்ன...! நிஜ ஆபரேஷன் நடந்தது. இப்போது ப்ரீதியால் 'எஸ்' - 'எக்ஸ்' வேறுபடுத்தி உச்சரிக்க முடிகிறது. தோற்றத்தில் அழகான மாறுதல். கூடவே தன்னம்பிக்கையும் சரசரவென்று முன்னேறியுள்ளது.

★ டாக்டர் குணசீலன் ராஜன் - 'ராகாஸ் டென்டல் காலேஜ்'.



★ ப்ரீதி - ஆபரேஷனுக்கு முன்னரும்....



★ ...பின்னரும்

"மூன் ஏழ் குழந்தைகளின் தாயான ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி கூட தோற்ற மேம்பாடுக்காக இந்த மாதிரி ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறார்'' என்றார் டாக்டர் குணசிலன்.

இதற்கு எவ்வளவு செலவாகும்...?

''ஒரு வாரம் வரை ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். சாதாரண மருத்துவ மனையின் பொது வார்டு என்றால் ஐயாயிரம் வரை ஆகும். ஸ்டார் மருத்துவ மனையெனில் அதைப் போல் நான்கு மடங்கு... நடுத்தர வர்க்கத்தினர் கூட செலவை ஒரு பொருட்டாக நினைக்காமல் இதைச் செய்து கொள்ள முன்வரு கிறார்கள்...''

முகத்தை மாற்ற ஒரு ஆபரேஷன்!

ஆபரேஷனின் போது டாக்டர் குண சிலன் என்ன செய்கிறார்? துருத்திக் கொண் டிருக்கும் பல் எப்படி வாய் பெட்டிக்குள் அடங்குகிறது?

''முக்கியமாக வாயின் உட்பகுதியி லேயே ஆபரேஷன் செய்கிறோம். பல் டாக்டர்கள் என்பதால் இது எங்களுக்குப் பழக்கப்பட்ட 'ஏரியா' என்பதுடன் வெளிப் பகுதியில் கை வைத்தால் வடுக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

''தாடை எலும்பின் விஸ்தீரணம் பற் களின் விஸ்தீரணத்தை விடக் கம்மியாக இருப்பதுதான் துருத்திய பல் உடையவர் களின் அடிப்படைப் பிரச்னை. அதனால் தாடை எலும்பைச் சரியான இடத்தில் ஆப ரேஷன் செய்து, சற்று இடம் மாற்றிப் பொருத்துகிறோம். இப்படிப் பொருத்திய எலும்பு உறுதியாகப் பிடித்துக் கொள்ள ஏது வாக, சிறிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடு களைப் பயன்படுத்துகிறோம் - அவசிய மானால். வளரும் பருவத்தில் இந்த ஆபரேஷனைச் செய்ய வேண்டுமெனில் எலும்பு ஒட்டு முறையில் செய்கிறோம். அப்போதுதான் ஒட்டுப் போடப்பட்ட தாடை எலும்பும் வளர்ந்து பற்களுக்கு இடம் கொடுக்கும்.

''இப்படி விஸ்தரிக்கப்பட்ட வாய் அமைப்புக்குள் பற்கள் முன்னை விட அழ காகப் பொருந்துகின்றன. முகத் தோற்றமே மாறி விடுகிறது.''

துருத்திய பற்களைச் சீராக்க, 'கிளிப்' அணிவித்து, ஆபரேஷனைத் தவிர்க்க முடி யாதா...?

''ஓரளவுக்குத்தான் முடியும். பிளவு பட்ட உதடுக்காகச் சிறு வயதில் ஆபரேஷன் செய்து கொண்டவர்களுக்கு, வாய்ப் பகுதி தசைகள் இறுகிப் போய் விடும். வளர்ச்சி இருக்காது. இத்தகையவர்களுக்குப் பல் நிச்சயமாகப் பிரச்னையாகும். மேலும் சிலருக்கு உடற்கூறு அமைப்பு காரணமாகப் பல் அதிகமாய்த் துருத்திக் கொண்டிருக்கும். உதடுகள் பல்லை மூடாது; வேறு சிலர் நாக் கால் பல்லைத் தள்ளுதல், விரல் சூப்புதல் போன்ற பழக்கங்களால் பிரச்னையைத் தாங்களே வளர்த்துக் கொள்கிறார்கள்.

''விபத்துக்கள் நேரும் போது, சில சமயம் தாடைப் பூட்டு ஃப்ராக்சர் ஆகி, பற்களைப் பின் தள்ளி விடும். வேறு சிலருக்குக் காதுகளில் உண்டாகும் நோய்த் தொற்று, வாயில் உள்ள பூட்டு மூட்டு (joint) வரை பரவி, அதைப் பாதிப்பதால் வாய் திறப்பதே கஷ்டமாகி விடும். அப் பகுதி யின் வளர்ச்சி குன்றி, பற்களின் வளர்ச்சிக்கு ஏற்பக் கொள்ளளவு பெருகாது. இதில் வேதனை என்னவெனில், இவர்களுக்குக் காதில் நோய்த் தொற்று உண்டாகியிருப் பதே தெரிவதில்லை. அலட்சியம் அல்லது அறியாமை காரணமாக, பிரச்னையை வளர விட்டு விடுகிறார்கள்...

- விளக்கி விட்டு, டாக்டர் குணசிலன் இந்த விசேஷ ஆபரேஷனின் படிப்படியான கட்டங்களை 'ஸ்லைட் புரொஜக்டரின்' துணையுடன் காண்பித்து விவரிக்கிறார்.

அதைப் பார்த்து முடிப்பதற்குள் ஏதோ யுத்த களத்தில் 'டூர்' அடித்த உணர்வு நமக்கு... கடைசி ஸ்லைடாக அவர் படித்த அயல்நாட்டுக் கல்லூரிக் காட்சி...

''அப்பாடா! இது அழகாய் இருக் கிறது...!'' என்று நாம் பெருமூச்சுவிட,

''ஆபரேஷன் முடிந்து கண்ணாடியில் தங்கள் முகங்களைப் பார்த்துக் கொள்ளும் என் பேஷண்டுகளும் இதே வார்த்தை களைத்தான் சொல்கிறார்கள்....''

என்று கூறிச் சிரிக்கிறார் டாக்டர் குண சிலன்!

– சீதா ரவி

அட, அப்படியா!

காசு வாங்கிக் கொண்டு சினிமா பார்த்தவர்கள்!

!! முதன் முதலில் சினிமா பார்க்க வந்த ஹாங் காங் நாட்டு மக்களுக்குப் பணம் கொடுத்தார்கள்! சீனர்கள் திரைப் படங்களைப் பார்த்தால் தங்களை 'ஆவி கள்' பிடித்துக் கொள்ளும் என்று பயந் தார்கள். அதனால் மௌன சினிமாக்கள் ஓட ஆரம்பித்த போது, மூன்று வாரங்கள் வரை அங்கு பார்வையாளர்களுக்குச் சன்மானம் தரப்பட்டது! இதன் மூலம் சினிமா காட்சி களைப் பிரபலமாக்கிய தியேட்டர் உரிமை யாளர் 1913 ஆம் ஆண்டில் பத்து தியேட் டர்களுக்குச் சொந்தக்காரராகி விட்டார்!

!! நீர் யானை மனிதனை விட வேக மாக ஓடும்.


!! முட்டையிலிருந்து வெளிப்பட்ட மறுகணமே பறக்கவும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளவும் கூடிய ஒரே பறவை ஆஸ்திரேலிய புஷ் டர்க்கி.

!! தண்ணீரையோ வேறு திரவத் தையோ உறிஞ்சிக் குடிக்கவல்ல ஒரே பறவை புறா. மற்றப் பறவைகள் எல்லாம் தண்ணீரை அலகில் எடுத்துக் கொண்டு, தலையை அண்ணாந்து, தொண்டைக்குள் இறக்கி விழுங்கும்.

!! சுறா மீன்களின் கண்கள் ஒளி மாற்றத்தை உணர்வதில் மனிதக் கண்களை விட பத்து மடங்கு சக்திவாய்ந்தவை. ஆனா லும் அவற்றின் பார்வை தெளிவாகவே இருக்காது. அனைத்துப் பொருட்களையும் கலங்கலான வடிவங்களாகவே காணும்! சுறாக்களுக்கு நுகரும் சக்தி அபாரமாக அமைந்துள்ளது. கேட்கும் சக்தியும் மனிதர் களைக் காட்டிலும் அதிகம்.


!! மீன்களுக்கு மின்மினிப் பூச்சி களின் ஒளியைக் கண்டால் அலர்ஜி. ஒளிக்கு எதிரான திசையில் அவை நீந்திப் போய் விடும். சுறா மீன்களுக்கோ ரொம்பவே பயம். சுறாக்கள் உள்ள தொட்டிக்குள் மின் மினிப் பூச்சிகள் அடங்கிய ஒரு கண்ணாடி ஜாடியை அமிழ்த்தினால் சுறாக்கள் வாலை அதிவேகமாய்ப் படபடத்துக் கொண்டு வில கும். அல்லது பயத்தில் உறைந்தே போய் விடும்!

!! கி. பி. 117இல் ரோம சாம்ராஜ்யம் கொடிகட்டிப் பறந்தது. அப்போது அதன் குடைநிழலில் வந்த நிலப்பரப்பு கிட்டத் தட்ட இன்றைய ஆஸ்திரேலிய கண்டம் அள வுக்கு இருந்தது. தங்கள் சர்வ வல்லமையில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த ரோம் மக்கள் Roma Eterna (நிரந்தரமான ரோம் நகரம்) என்று தங்கள் நகரையும் Mare nostrum ('நமது கடல்') என மெடிடரேனியன் கட லையும் அழைத்தார்கள்!



!! மனிதனுக்குக் கழுத்துப் பகுதியில் எவ்வளவு எலும்புகள் உள்ளனவோ அவ்வளவு எலும்புகள்தான் ஒரு ஒட்டகச்சிவிங்கி யின் கழுத்துப் பகுதியிலும் இருக்கின் றன.

தொகுப்பு : உதய்லால்



பம்பாய் குண்டு வெடிப்பு...
சரத் பவார்
அய்யோ... டில்லியிலேயும் வெடிக்குன்னாங்களே?...
நரசிம்மராவ்
அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை
கல்கத்தா குண்டு வெடிப்பு...
ஜோதி பாசு
மருந்து இடிக்கப் பட்ட போது ராணுவம் என்ன செய்து கொண்டிருந்தது?...
இந்திய அரசியலே உங்க காலடியில்தானே?... நீங்கதான் ராணுவத்தை நடத்தணும்னு சொல்லிட்டீங்களே... அதுக்காக பயந்து, நடுங்கி, கையைக் கட்டிக்கிட்டு நின்னுகிட்டிருந்திருக்கும்!...
ஜெ.
என்னா வான கைங்கர்யம்... சுமையைக் குறைக்கிறேன்...
மத்திய...
...பட்ஜெட்
வரிச்சுமை
மாநில...
...பட்ஜெட்
என்னா வான கைங்கர்யம்... சுமையைக் கொஞ்சம் ஏத்தறேன்!...



கல்கி

1993
மார்ச் 28
மலர் : 51
இதழ் : 35
ஆங்கீரச
பங்குனி 15



அத்வானியின் அப்பன் குதிருக்குள் இல்லை!

பாவம், பவார்! 'கலவரங்களை அடக்கத் தெரியவில்லை' என்று காரணம் காட்டி நாயக்கை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, இவர் பதவி ஏற்றுச் சில நாட்களுக்குள் பம்பாயில் வெடித்த குண்டுகள், உலகெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துப் பெருமூச்சு விட்டு முடிவதற்குள், கல்கத்தாவில் குண்டு வெடித்து பலத்த சேதத்தையும் சோகத்தையும் உருவாக்கியுள்ளது.

“பாகிஸ்தானின் ஐந்தாம்படையான ISI யின் வேலை இது”; “கிட்டுவின் மரணத்துக்கு விடுதலைப்புலிகளின் பழிவாங்கல் நடவடிக்கை”; “இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தை விரும்பாத எதிரிகளின் நாச வேலை” என்றெல்லாம் தலைக்குத் தலை கருத்துக்களை அள்ளித் தெளிக்கிறார்கள். “அப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல் அத்வானி அவசரம் அவசரமாக, “பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கும் இதற்கும் தொடர்பில்லை” என்று 'அம்பேல்' விட்டதுடன், “பாகிஸ்தானின் சதி வேலை” என்பதாகவும் கூறி, புதுதில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் வன்மையான கண்டனத்தை வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் தரப்பிலும் பலர், பாகிஸ்தான் பக்கமே கைகாட்டுகிறார்கள்.

பாகிஸ்தான் செய்யக்கூடும்தான். காஷ்மீரில் கூலிப்படைகளை அனுப்பி ஊடுருவச் செய்யும் பாகிஸ்தான், இதையும் செய்யக்கூடும். ஆனால் 'பாக்' மீது பழிசுமத்துவதற்கு முன்பாக நமது உளவுத் துறை படுதோல்வி அடைந்திருப்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். இரண்டாவதாக 'பாக்' மட்டுமின்றி, முஸ்லிம் நாடுகள் பலவற்றின் துவேஷத்தையும் நாம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை மறுக்கவே முடியாது. இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் பி. ஜே. பி., வி. எச். பி., ஆர். எஸ். எஸ்., சிவசேனா உள்ளிட்ட அத்வானி அண்டு கம்பெனியே.

குண்டு பம்பாயில் வெடித்த மூன்றாவது நாள் அமெரிக்காவிலிருந்து நமக்கு எச்சரிக்கை வருகிறது. “தில்லியிலும் குண்டுகள் வெடிக்கலாம் ஜாக்கிரதை” என்று அமெரிக்க உளவுத் துறை நமது அரசை உஷார்ப்படுத்துகிறது. காரணம் உண்டு. மூன்று வாரங்களுக்கு முன்புதான் நியூயார்க்கில் உள்ள உலக வியாபாரக் கேந்திரம் எனப்படும் விண்ணளாவும் கட்டடத்தில் பயங்கரமாகத் தொடர் குண்டுகள் வெடித்துப் பலத்த பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. அதற்கும் பம்பாயில் தொடர் குண்டு வெடிப்புக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உள்ளன. நியூயார்க்கில் வெடித்த குண்டுகள் முஸ்லிம் தீவிரவாதிகளால் வைக்கப்பட்டவை என்பது உறுதியாகியுள்ளது. இந்தப் பயங்கரவாதிகள் உலகெங்கும் சங்கிலித் தொடர்போல் ஊடுருவி, முஸ்லிம்களுக்கு எங்கே தீங்கு இழைக்கப்பட்டாலும் பழிவாங்குகின்றனர். கொமேனி விதித்த மரண தண்டனை இன்னமும் ருஷ்டியை அச்சுறுத்திக் கொண்டிருப்பதை நினைவுகூர்ந்தால்; ஈராக் மீது தாக்குதல் நடத்திய மேல்நாடுகளை முஸ்லிம் தீவிரவாதிகள் அடியோடு வெறுப்பதை மறவாமல் இருந்தால்; போஸ்னியாவில் முஸ்லிம்களுக்குச் சொல்லொணாக் கொடுமைகளை இழைத்துக் கொண்டிருக்கும் கிறிஸ்துவர்களை மேல்நாட்டு அரசுகள் கண்டுகொள்வதே இல்லை என்பதையும் எண்ணிப் பார்த்தால்; இஸ்ரேலின் சில பல அடாவடித்தனங்களை அமெரிக்கா வெளிப்படையாக ஆதரிக்கவே செய்கிறது என்பதையும் கருத்தில் கொண்டால் நியூயார்க்கில் குண்டு வெடித்ததைப் புரிந்து கொள்ளலாம். அமெரிக்க உளவுத்துறையின் கண்ணிலேயே மண்ணைத் தூவிவிட்டு வெற்றிகரமாகச் செயல்பட்ட முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் ஊடுருவுவதுதானா கஷ்டம்? அதை நேரடியாகச் செய்கிறார்களா, கூலிப் பட்டாளத்தைப் பயன்படுத்துகிறார்களா, அல்லது உள்ளூரிலேயே இருக்கிற திசை தவறிப் போன இளைஞர்களைத் தூண்டி விடுகிறார்களா என்பது வேறு விஷயம். எப்படியோ, காரியம் நடந்து விடுகிறது. இன்று, யுத்த களத்தில் காண முடியாத வெற்றியை, பயங்கரவாதத்தின் மூலம் அதர்ம முறையில் அடைவது என்பது வாடிக்கையாகி விட்டது. உலகளாவி வளர்ந்துவிட்ட முஸ்லிம் அடிப்படைவாதிகள் இயக்கம் (fundamentalists) இந்தியாவில் ஒரு மசூதி இடிக்கப்படுவதையோ பம்பாய்க் கலவரங்களில் ஏராள முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதையோ பார்த்துக் கொண்டு சும்மா இராது.

இவர்களை வெற்றி கொள்ள ஒரே வழிதான் உண்டு. அன்பு வழிதான் அது. இதை அத்வானி உணர்ந்து மசூதியைத் திரும்பக் கட்டும் கரசேவையை நடத்தட்டும்.

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

மாயக் குதிரை

6

"இது என்ன தழும்பு?" என்றார் அமானுல்லா.

"செக் பண்ணிட்டோம் டாக்டர். 'பைட் இஞ்சூரி' இல்லை. எங்கேயோ கீறிக்கிட்டிருக்காரு... ரொம்ப நாள் முன்னாடி."

"ஏ.டி.எஸ். போட்டாராமா?"

"இல்லை."

"ச் ச்... நாய் கடிச்ச தழும்பு எங்கேயும் இல்லையா?"

"முழுக்க செக் பண்ணியாச்சு டாக்டர். எதுவும் இல்லை."

"தென் ஹவ் இஸ் இட் பாஸிபிள்?"

ஓர் இளம் டாக்டர் பணிவாக "ஸார்! ராபிஸ் நாய்கிட்டேயிருந்து மட்டும்தான் வரணுமா? மெக்ஸிகோவில வௌவால் கடிச்சு நிறைய பேர் ராபிஸ்னால செத்துப் போயிருக்காங்க" என்றான்.

"அபூர்வம். ரொம்ப அபூர்வம்! ராமச்சந்திரன்! சொல்லுங்க என்ன தெரிஞ்சது?"

"நர்வ் டிரங்க் முழுக்க இன்ஃபெக்ட் ஆகியிருக்கு டாக்டர்! உமிழ்நீரையும் டெஸ்ட் பண்ணியாச்சு. சென்ட்ரிஃப்யூகல் இன்ஃபெக்ஷன். என்னுடைய கருத்துப்படி நாய் கடிச்சு குறைஞ்சது நாப்பது நாள் ஆகியிருக்கும்."

டாக்டர் அமானுல்லா சூர்யாவின் வாயைக் கஷ்டப்பட்டுத் திறந்து அவனுடைய ஈறுகளைப் பார்த்தார். மறுபடி மூடினார்.

எல்லோரையும் பார்த்து, தீர்க்கமாக "உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்றார்.

அவர்கள் மௌனமாக நின்றார்கள்.

"சொல்லுங்க!"

அந்த இளம் டாக்டர் தெளிவாக, "ஆன் லேட் ஸ்டேஜ் டாக்டர். மருந்து கொடுத்துக் கொஞ்சம் தள்ளிப் போடலாம்... அவ்வளவுதான்" என்றான்.

"இத்தனை பேர் எதுக்கு இருக்கோம்!"

"க்யூரரைஸ் பண்ணியாச்சு. வாக்ஸின், ஸிரம் ரெண்டும் அப்ளை பண்ணியிருக்கோம். ஆனால் ரொம்ப லேட் டாக்டர்! இவ்வளவு நாள் என்ன பண்ணாங்க...?"

"அவர் ஒரு லீடிங் ஆக்டர். அவருக்கு ஏதாவது ஆச்சுன்னா... மைகாட்! இதை எப்படி வெளியே சொல்லப் போறோம்...!"

"ரியாக்ஷன் டெஸ்ட் பண்ணக் கூட நேரமில்லை டாக்டர்! 'கிளாண்டுலர் ஸ்வெல்லிங்' இருக்கு. ஹி மே டெவலப் என்ஸெஃபாலட்டிஸ்."

"அண்ட் பராலிஸஸ்!"

"ஓ நோ!"

டாக்டர் அமானுல்லா பரிதாபமாகச் சூர்யாவைப் பார்த்தார். ஓ, இளம் நடிகனே! உன் கதை முடியப் போகிறது தெரியுமா? இத்தனை பெரிய ஆஸ்பத்திரி, மேல்நாட்டுப் படிப்பு, டாக்டர்கள் பட்டாளம், அபாரமான மருந்துகள், ஸ்கான் மெஷின்,... இன்னும்... இன்னும்... டெக்னாலஜி பரிவாரங்களை வைத்துக் கொண்டு, பயமில்லாமல் உன்னை வழியனுப்பப் போகிறோம். என்ன ஆயிற்று முட்டாள் நடிகனே? எத்தனை பணம்! எத்தனை வசதி! இப்படியா துடித்துத் துடித்துச் சாக வேண்டும்? அத்தனை முட்டாளா நீ? நாய் கடித்தால் உடனே டாக்டரிடம் ஓட வேண்டும் என்கிற சராசரி மருத்துவ அறிவு கூட உனக்குக் கிடையாதா? எல்லைக் கோட்டில் தவறி விழும்போதா கூக்குரலிடுவாய்? இனிமேல் என்னப்பா செய்ய முடியும்? ஓ, மை டியர் சூர்யா!

"டாக்டர்! உங்களைப் பார்க்க கமிஷனர் வந்திருக்கார்."

"இதோ வர்றேன்."

போலீஸ் கமிஷனரின் நெற்றியில் வியர்வை படிந்திருந்தது. நிரந்தரமாகப் படிந்து விட்ட அலுவலக டென்ஷனும் அதிகார பாவமும் முகத்தில் தோரணையைக் கலந்திருந்தது. அவர் கண்களில் கவலை தெரிந்தது.

"வாங்க டாக்டர்! சூர்யாவுக்கு எப்படி இருக்கு?"

டாக்டர் அமானுல்லா நிதானமாக, "இனிமேல் எதுவும் முடியாது. வி ஆர் போஸ்ட்போனிங் ஹிஸ் டெத்" என்றார்.

"டாக்டர்! ஐ'ம் ஷாக்ட்" என்றார் கமிஷனர் அதிர்ச்சியாக.

"கைவிட்டுப் போற நிலைமையில எங்களால எதுவும் பண்ண முடி

கிருஷ்ணா டாவின்ஸி



யலை. கன்வல்ஷிவ் ஸீஷர் ஆரம்பிச்சாச்சு. உடம்பு விறைப்பா இருக்கு... ஹி இஸ் ஃபாலிங் இன் டு கோமா...''

''பேசறாரா?''

''ம். அதைத் தெளிவான பேச்சுன்னு சொல்ல முடியாது. 'ஸ்பாஸம் இன்டர்வெல்'னு சொல்வோம். நடுநடுவில திடீர்னு நோயாளி அமைதியாயிடுவாரு. ஆனால் அது தற்காலிகம். அவரால வாயைச் சரியா மூட முடியலை. மூச்சு விட முடியலை. மருந்து கொடுத்து கொடுத்து எவ்வளவு நேரம் முடியும்?''

''என்னதான் ஆச்சு டாக்டர்?''

''ராபிஸ்! முதல்ல சாதாரணமா நரம்பு மண்டலத்துல போய் உட்கார்ந்துக்கும். அப்புறம் ராட்சஸன் மாதிரி 'நர்வ் டிரங்க்' முழுகும் பரவிடும். டெஸ்ட்ல துல்லியமா தெரியுதே! ஸெரிப்ரம் வரைக்கும் இன்ஃபெக்ஷன். 'ஸலிவா' டெஸ்ட்லயும் தெரியுது. மருந்து வைச்சிருக்கோம். ரெண்டு டைப் மருந்து - ஹோராஜில், ஸெம்பிள். என்ன பிரயோஜனம்! எதுவும் கொடுக்க முடியாது. கொடுத்தும் பிரயோஜனமில்லை!''

''பின்ன என்னதான் ட்ரீட்மெண்ட் டாக்டர்?''

''வலியிலேர்ந்து தற்காலிக விடுதலை! அவ்வளவுதான். ஹெவி ஸெடேஷன். பராலிஸஸ் வரக் கூடாதுன்னு தீவிரமாக் கண்காணிக்கிறோம். ஸார்! ப்ளீஸ், எதை செஞ்சாலும் ஜாக்கிரதையாச் செய்ய விரும்பறேன். நாளைக்கு எங்களுக்கு எந்தப் பிரச்னையும் வரக் கூடாது பாருங்க!''

''டாக்டர்! ஃபாரின் போனா ட்ரீட்மெண்டுக்குச் சாத்தியம் இருக்கா?''

''நோ! இங்கே என்ன குறைச்சல்! ஐ டெல் யு! இங்கே மருந்துக்கு எந்தவிதக் குறையும் இல்லை. லேட்டஸ்ட் இம்யூன் ஸிரம் வரை வைச்சிருக்கோம். ஆனா எதுவும் பண்ண முடியாது. ப்ளீஸ், டேக் ஹிம் ஃப்ரம் ஹியர். உங்க திருப்திக்கு எங்கே வேணும்னாலும் கூட்டிப் போங்க. இஃப் யு வாண்ட், அமெரிக்கா! ஆனா போகிற வரை தாங்காது...''

அப்போது ஒரு டாக்டர் உள்ளே நுழைந்து, ''எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்! சூர்யாவுக்கு முழிப்பு வந்திருக்கு. ஹி இஸ் ஃப்யூரியஸ்'' என்றார்.

''கமிஷனர்! வாங்க! வந்து பாருங்க!''

ஐ.ஸி. யூனிட்டில் நுழைந்த போலீஸ் கமிஷனர் சூர்யாவைக் கண்டு ஒருகணம் சிலிர்த்தார். அது பாதி சூர்யா!

அவனுடைய கைகளும் கால்களும் வசதியான வளையம் ஒன்றில் பொருந்தியிருக்க, துடித்துக் கொண்டிருந்தான். அவன் முகம் வெறிபிடித்த மிருகம் போல் இருந்தது. வாயின் ஓரங்களில் எச்சில் படிந்திருக்க, புஸ்புஸ்ஸென்று மூச்சு விட்டபடி, ''ஏய்! விடு! என்னை விடு....! எங்கே ஜிங்லி! கூட்டி வா அவளை! என் பொண்ணைக் கூட்டி வா....!''

ஒரு டாக்டர் அருகே சென்று, ''சூர்யா! ப்ளீஸ்! அப்படியே படுங்க!'' என்றதும், ஆக்ரோஷமாக அவர் முகத்தில் 'தூ' என்று துப்பினான். அவர் நிதானமாக கர்ச்சீஃபினால் துடைத்துக் கொள்ள, சூர்யாவின் பற்கள் அரைபடும் சத்தம் கேட்டது. அவன் உடம்பு உதறியது.

''ஹி ஹாஸ் பைட்டிங் ஸென்ஸேஷன்!''

கமிஷனர் அருகில் சென்று, ''சூர்யா! ப்ளீஸ், காம் யுவர் ஸெல்ஃப்...! என்ன வேணும் உங்களுக்கு? சொல்லுங்க!'' என்றார்.

''விஷம்! கொன்னுடு என்னை! அம்மா! எங்கே என் பொண்டாட்டி!'' அவன் உடம்பு மறுபடி தூக்கிப் போட, ''அய்யய்யோ!'' என்றான் சகிக்க முடியாத வலியுடன். அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அவன் கைகளைக் கட்டியிருந்தும், வெறியுடன் முறுக்கினான். கால் விரல்கள் பிணைந்து விலகின. தலையை அப்படியும் இப்படியும் உதறினான்.

''மைகாட்! என்ன கோரம்!''

''கிவ் ஹிம் மெடிஸன்'' என்றார் டாக்டர் அமானுல்லா. பிறகு கமிஷனரிடம் திரும்பி, ''வாங்க போகலாம்!'' என்றார்.

''டாக்டர்! இனிமேலும் மறைக்கறதுல பிரயோஜனம் இல்லை. முதல்ல அவங்க மனைவிகிட்டே சொல்லிடலாம். மறுபடி கேக்கறேன் டாக்டர்! தப்பா நினைக்காதீங்க, இதைக் குணப்படுத்த முடியாதா?''


''ம்ஹூம். ஹி வில் கோ இன் டு கோமா. அவ்வளவுதான். கமிஷனர்! உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். உக்காருங்க.''

அவர்கள் அமர்ந்தார்கள்.

''இன்னிக்கு வீட்டுக்குப் போக குப்புசாமி ரொம்பக் கூச்சப்படறாரே, ஏன்?''

''இன்னிக்கு லஞ்சம் ஒண்ணும் கிடைக்கலையாம். வெறுங்கையோட போறதுக்குக் கூச்சமாயிருக்காம்!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



அன்று மாலை இவசரி ஒன்றில் 'சூர்யா எங்கே? படப்பிடிப்பு ரத்தான காரணம் என்ன? அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பது உண்மையா?' என்று பெரிய பெரிய எழுத்துக்களில் செய்தி வெளியானது.

சூர்யாவின் வீட்டைச் சுற்றி உடனே போலீஸ் பட்டாளம் சூழ்ந்து கொள்ள, ரசிகர்கள் கூட்டம் ஆட்டு மந்தை போல் கூச்ச விட்டுக் கொண்டிருந்தது.

''சூர்யா! எங்கே?''

''சூர்யா! எங்கே?''

''டேய்! போங்கடா!''

''சூர்யாவுக்கு என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லை, போங்க! போங்க!''

''உடைங்கடா போலீஸ் வேனை!''

''சூர்யா! சூர்யா!''

''தலைவா! தலைவரே!''

ஜன்னல் கண்ணாடி வழியே பார்த்த இலகாவின் கண்களில் கண்ணீர் தளும்பியது. சூர்யா! உன் அன்பான ரசிகர்கள்! உனக்காக உயிர் விடும் ரசிகர்கள்! எனக்காக இல்லை, அவர்களுக்காகவாவது, வா! வந்து விடு! வருவாயா?

ம்ருணா வந்து அவள் காலைக் கட்டிக் கொண்டு, ''மம்மி! டாடி எங்கே?'' என்ற போது அவள் கண்களில் சூர்யாவின் கண்களைப் பார்த்தாள். அவளை எடுத்து, விம்மலுடன் கட்டிக் கொண்டாள். வாசலில் பெரிய கூச்சல் கேட்டது. ஜன்னல் வழியே மறுபடி பார்த்தாள். வெள்ளை நிற அரசாங்க அம்பாஸிடர் கார் ஒன்று உள்ளே நுழைந்தது. கூட்டம் அலறியது.

''சூர்யா! எங்கே?''

''தலைவா! தலைவா!''

கார் போர்டிகோவில் நிற்க, போலீஸ் கமிஷனர் இறங்கி எஸ்.பி.ஐ. அழைத்து, ''கிளியர் தி மாப்'' என்றார்.

''சார்! லத்தி சார்ஜ் இல்லாமல்...''

''செய்யுங்க!'' என்றவர் வீட்டினுள் நுழைந்த போது வாசலில் கூக்குரல் கேட்டது. அடிவாங்கும், கலையும், அலை பாயும், ரசிகர்களின் கூக்குரல்.

போலீஸ் கமிஷனர் இலகாவிடம் வந்து, ''மிஸஸ், சூர்யா! ப்ளீஸ், பொறுமையா நான் சொல்றதைக் கேளுங்க. ம்ருணா! நீ உள்ளே போம்மா!'' என்றார்.

இலகா அவரை அச்சத்துடன் பார்த்தாள்.


மறுநாள் காலைக்குள் சூர்யாவுக்குப் பலமுறை 'ஸ்பாஸம்' வந்தது. வலியில் துடித்தான். அவன் கண்கள் கோணல் பார்வையில் ஏறக்குறைய நிலைத்து விட்டன. நடுவில் கொஞ்சம் அபாயகரமான அமைதி ஏற்பட, இலகாவை அருகில் அழைத்து, தலையைத் தடவிக் கொடுத்தான்.

''நாடு ரொம்பத்தான் கெட்டுப் போச்சு போங்க.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''நான் சத்துணவு மையத்துல வேலை பார்க்கிறேன்னு சொன்னதும் ஒருத்தர், 'பாமாயில், து.பருப்பு விற்கிறதா இருந்தா என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லுங்க'ன்னு சொல்றாரே!''

– சீர்காழி வி. ரேவதி



''ஜிங்லி... எனக்கு... எ...ன்...ன?''

இலகாவின் முகத்தில் அழுகை வெடித்தது.

''ம்ருணா எங்கே ஜிங்லி...?''

''வருவா...'' இலகா அவன் மேல் சாய்ந்து கொண்டு அழ, டாக்டர்கள் கூர்மையாகக் கவனித்தார்கள். ஒரு நர்ஸ் இலகாவை வலுக்கட்டாயமாக இழுக்க, ஆக்ரோஷமாகத் திரும்பி, ''விடு என்னை...'' என்றாள். அவன் மேல் விழுந்து கதறினாள்.

சூர்யா சோர்வாகக் கண்ணை மூடிக் கொண்டான்.

''மிஸஸ் சூர்யா! ப்ளீஸ், அவரை விடுங்க!''

இலகா அழுது கொண்டே அவன் மேல் விழ, கட்டாயமாக அகற்றப்பட்டாள். சூர்யா பிரயத்தனத்துடன் கண் விழித்துப் பார்க்க, பார்வையில் மங்கலாகத் இலகா தெரிந்தாள். ''ஜிங்லி... போகாதே!'' என்று சொல்ல நினைத்த போது உடலில் ஏதோ ஆதாரமாக அறுபடுவது போல் வெடித்தது. ''ஹக்!''

''டாக்டர்! அவர் மயக்கமாயிட்டார்.''

சூர்யாவுக்குப் ப்ரொக்ரஸிவ் பராலிஸஸ் ஆரம்பித்தது. டாக்டர் அமானுல்லா அவனுடைய வாயைத் திறந்து பார்க்க, ஈறுகளில் ரத்தம் கசிந்திருந்தது. சூர்யா கோமா நிலையில் சறுக்கி விழுந்தான்.

''டாக்டர்! ஏ.எஸ். போடலாமா?''

''வேண்டாம். தர் இஸ் ஹெமரேஜ் ஆஃப் கம்ஸ்''

சூர்யாவின் வாயிலிருந்து ஏதோ திரவம் வழிந்தது. டாக்டர் அமானுல்லா அவனை அமைதியாகப் பார்த்தார். இன்னும் ஒரே ஒரு 'ஸிவியர் ஸ்பாஸம்' வந்தால் போதும். இந்த உறுதிமிக்கக் கலைஞன் மறைந்து விடுவான்.

அன்றிரவு 11:30 - சூர்யாவுக்கு கடுமையான 'ஸ்பாஸம்' ஏற்பட்டது.

11:40க்குச் சூர்யா இறந்து போனான்.

(தொடரும்)



சூரியன் சந்திரன்

ஒரு அக்ரஹாரத்துப் பையனுக்கும், அடிதடி முரடனுக்கும் இடையேயான அக்மார்க் நட்பு பற்றின கதை.

ஒரு விஷயத்துக்காக டைரக்டர் கே. எஸ். ரவிகுமார் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம். (ஜிப்பா போடாமல் இருந்தால்.) ஜாதிப் பிரச்னையை வியாபார நோக்கில் திணிக்கும் சினிமாக்களின் இடையே, ரொம்ப லைட்டாக, ரொ. ரொ. யதார்த்தமாக இந்த விஷயத்தைக் கையாண்டிருக்கிறார். சந்தோஷமாகப் பாராட்டலாம்.

கோவில் குருக்களாக ஆனந்த்பாபு. (டைரக்டருக்கு ஒரு வார்த்தை. கல்யாணம் ஆவதற்கு முன் எந்த ஐயருக்கும் – குருக்களாகவே இருந்தாலும் – பஞ்சகச்சம் கிடையாது.) வசனங்களில் அரை ஐயர். படம் ஆரம்பித்தது முதல், க்ளைமாக்ஸில் நட்புக்காக உயிர் விடுவது வரை திரை முழுக்க ஆக்கிரமித்திருக்கிறார். ஒரு கட்டத்தில் நிலைமை ரொம்ப இடக்காகப் போய் விட, டைரக்டரே சரவணனைக் காட்டி, 'இவன் தாண்டா ஹீரோ' என்று சொல்லித் தெரிய வைக்க வேண்டிய நிலைமை சரவணனுக்கு! திடீர் திடீரென்று ஃப்ளாஷ்பேக்கில் மூழ்கும் போதும், விழிகளில் ரௌத்ரம் காட்டும் போதும் சரவணன், சரிவணன். டான்ஸ் காட்சிகளைத் தவிர்த்தால் அவரது எதிர் காலம் பிரகாசமாகத் தெரிகிறது.

தன்னால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரண நிதி வழங்கி, ஆதரிக்கும் வித்தியாச வில்லனாக இயக்குனர். ஃபிரேமுக்குள் ரவிகுமார் – வந்ததும் ஆனந்த்பாபுவும் இல்லை, சரவணனும் இல்லை. அமர்க்களம், அட்டகாசம், தூள், சூப்பர், எட்ஸட்ரா.

ரொம்ப நாள் கழித்து, மனம் விட்டுச் சிரிக்கும்படி காமெடி டிராக் – ஆர். சுந்தர்ராஜன். லோலோ. ரொம்ப தூளோ!

கிராமத்தில் நடக்கிற கதைதான். ஆனால் போலி செண்ட்டிமெண்ட் சமாசாரங்கள் இல்லை, உலுலுலுலு என்று கூவி வேப்பிலை அடிக்கிற பாடல் ஏதுமில்லை. வழக்கமான மசாலாக்கள் நிறையவே இருப்பினும், வழங்கின விதம் புத்தம் புதிது.

கோடிட்ட இடத்தை நிரப்புக :

- இரண்டு பேர் காதலித்தால் இடைவேளையின் போது ____________
- ஹீரோயின், பணக்காரியானால் ஹீரோ ____________
- ஹீரோ, காட்டில் தேனெடுப்பவன். லோ, வில்லன் ____________
- அருமையான குரல், ஹீரோவுக்கு. எனவே, ____________
- மலை, காடு, அருவி என்று லொக்கேஷன். புகுந்து விளையாடுகிறது. ____________
- படத்தின் கதையை 'ஒயினா'கக் கருதினால், (ஒரு பேச்சுக்கு) எக்கச்சக்கமாக விலை போகும். ஏனெனில் ____________

விடைகள் 48 – ஆம் பக்கம்

பி.கு: படம் பார்க்கப் போகிறவர்கள் யாருக்காவது கதைக்கும், டைட்டிலுக்கும் உள்ள சம்பந்தம் பற்றி ஏதாவது கருத்து தோன்றினால் கல்கி அட்ரஸுக்கு ஒரு கார்டு போடுங்கள். புண்ணியமாகப் போகும்!

– ஆர். பி. ஆர்.



பந்தம்

ராஜகுமாரன்

சைதாப்பேட்டையில் திருவள்ளுவர் நின்றது. அவசரமாக '5-பி'யில் தாவினேன்...

சே! பாவம் அந்தச் செடிகள்! ஒரு வாரம் தண்ணீரில்லாமல் தவித்துப் போயிருக்கும். இலைகள் சூம்பி, காம்புகள் வதங்கி... நினைக்கவே கஷ்டமாய் இருக்கிறது!

என்ன மடத்தனம்! முருகேஷிடம் சொல்லி விட்டு வந்திருந்தாலாவது அதுகளுக்குத் தண்ணீர் ஊற்றியிருப்பான். நான் என்ன செய்வது? இறப்புச் செய்தி! அவசரம். எதையும் யோசிக்க அவகாசமில்லை. பதற்றத்தில் ஊருக்குக் கிளம்பிச் சென்று விட்டேன்.

செடிகளின் முகத்தில் விழிக்கவே பயமாய் இருந்தது. அந்த அந்திமந்தாரை சாதாரணமாகவே உம்மணாம்மூஞ்சி! எப்போதும் என்னை முறைப்பது மாதிரி இருக்கும். இப்பொழுது ஒரு வாரப் பட்டினி. சொல்லவே வேண்டாம். எக்கச்சக்க கோபத்தில் இருக்கும்! சாம்பல் நிற குரோட்டன்ஸ் இலைகள் எப்பொழுதும் சோக பிம்பங்கள் மாதிரி இருக்கும். இப்பொழுது இன்னும் அழுது வடியும்...

நம்மால் ஒருவேளை சாப்பிடாமல் இருக்க முடியவில்லையே! அதுகள் என்ன பண்ணும்? பாவம், வாயில்லா ஜீவன்கள்! பேச முடிந்தாலாவது 'சார்! கொஞ்சம் தண்ணி ஊத்துங்களேன், ப்ளீஸ்!' என்று யாரிடமாவது கேட்டிருக்கும்.

இதற்கெல்லாம் காரணம் சன்வமங்கலம் தாத்தாதான். அவர் மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. திடகாத்திரமாகத்தான் இருந்தார். ஒரு இழுப்பு வலிப்பு கூட இல்லை! திடீரென்று மண்டையைப் போட்டு என்னை டென்ஷனாக்கி விட்டார். எங்கள் இருவருக்கும் பரஸ்பரம் நல்ல பாசம்! இருந்தாலும் போகிற போக்கில் என் செல்லமான செடிகளைப் பட்டினி போட்டு விட்டாரே!

இந்தச் செடிகள் எனக்குப் பரிச்சயமானதே மிகவும் சுவாரஸ்யமான சம்பவம்...

இரண்டு மாதங்களுக்கு முன் -

நெருங்கிய நண்பன் முருகேஷுடன் நான் புது வீடு மாறினேன்.

தி.நகரில் நெரிசல் மிகுந்த ரங்கநாதன் தெரு. ஒரு 'பேச்சலர் காம்பவுண்ட்'. அதற்குள் அதிசயமாக, ஒரு பலாமர நிழல் குடை பிடிக்க, ஒரு சின்ன அறை. அதுதான் எங்கள் வீடு.

அறைக்கு மூடி போட்டது மாதிரி தாழ்வான சீமை ஓட்டுக் கூரை. அதன் மீது சின்னச் சின்ன பாலிதீன் பைகளில் மண் நிரப்பி - இந்தச் செடிகள் உட்கார்ந்திருந்தன.

இரண்டு நாள், போகும் போதும் - வரும் போதும் கவனித்ததில் அதுகளின் முகவாட்டம் உணர்ந்தேன். யாரும் தண்ணீர் ஊற்றவில்லை. மூன்றாவது நாள் முதல் தினம், குளிக்கப் போகும் முன் தண்ணீர் ஊற்றத் தொடங்கினேன்.

நான் தண்ணீர் ஊற்ற ஊற்ற, அதுகளின் முகவாட்டம் மறைந்தது. இலைகள், குவித்த கைகள் எனக்கு நன்றி சொல்வது மாதிரி இருந்தது!

இன்னும் இரண்டு நாள் கழித்து... ஒரு நண்பர் வந்தார்.

''சார்! நான் உங்களுக்கு முன்னால, இந்த ரூம்ல இருந்தவன். திடீர்னு கல்யாணம் ஆயிட்டுது. அவசரத்துல இதுங்கள எடுத்துட்டுப் போக முடியலை. செடிகளுக்குக் கொஞ்சம் தண்ணி ஊத்துங்க சார்.. ப்ளீஸ்! ஒரு வாரத்துல வந்து எடுத்துக்கறேன்.''

இது மாதிரி ஜீவகாருண்ய விஷயங்களில் எனக்குக் கொஞ்சம் ஈடுபாடு உண்டு.

''கவலைப்படாதீங்க சார். உங்க செடிகள நான் பத்திரமாப் பாத்துக்கறேன்!'' என்றேன் சந்தோஷமாக.

''சார், இதுகளுக்குத் தண்ணி ஊத்த ஆரம்பிச்சிட்டீங்கல்லே... உங்களுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆயிடும். அதுவும் காதல் கல்யாணம்!'' - உற்சாகமாக நண்பர் போனார்.

அடுத்த வாரம். அதற்கு அடுத்த வாரம்...



ம்ஹூம்! சொன்னபடி அவர் வர வில்லை.

நாளடைவில் இந்தச் செடிகள் எனக்குச் சிநேகிதமாயின.

சின்னதும், பெரிசுமாக ஒன்பது செடிகள். அந்திமந்தாரை ஒன்றுதான் பெயர் தெரிந்தது. மற்ற செடிகளுக்கு நிறம், வடி வத்துக்குத் தகுந்தாற்போல் நானே பெயர் வைத்து விட்டேன்.

'இது ஆரஞ்சு கலர் பூ பூக்கும்'. 'அது மஞ்சள் பூ பூக்கும்' என்று பக்கத்துப் போர்ஷன் நண்பர்கள் சொன்னார்கள். இப்பவே இதுகள் இவ்வளவு அழ கென்றால், பூ பூக்கத் தொடங்கி விட்டால், எவ்வளவு வனப்பாய் இருக்கும்! - இப்படி வண்ண வண்ணக் கற்பனைகளை எனக்குள் பதியம் போட்டிருக்கிறேன்!

சமீப நாட்களாக - ஊருக்குச் செல்வ தற்கு முன் - அதுகளுக்கும் எனக்கும் ரொம்ப அன்னியோன்யம்! மௌன வார்த்தைகளால், ஏதோ ஒரு பாஷையில் அதுகள் என்னுடன் பேசுவது போல் இருந் தது!

அதுகளின் இலை முகங்களில் கோபம், சந்தோஷம், துக்கம், வெட்கம், பாசம் என்று எல்லா உணர்ச்சிகளும் வெளிப்படுவது போல் இருந்தது! இது சாத்தியம்தானா? தெரியவில்லை. ஒருவேளை அந்த சடு பாட்டால் வந்த கோளாறா? யாரிடமாவது இது பற்றிக் கேட்கலாம். ஆனால் அவர்கள் என் மனநிலையைச் சந்தேகிக்கக்கூடும். அதனால் யாரிடமும் கேட்கவில்லை.

செடிகளில் ஒன்று, ஆன்ம சிநேகிதன் மாதிரியும், ஒன்று அழகான குழந்தை மாதிரியும், ஒன்று பரிவுமிக்க காதலி மாதிரியும், ஒன்று பாசம் குழைந்த தாய் மாதிரியும், ஒன்று கண்டிப்பு நிரம்பிய தந்தை மாதிரியும்... உணர்ந்தேன்!

ஆனால் ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புரிபடவில்லை. மனிதர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று அதுகளிடம் இருக்கிறது. அது என்ன? எவ்வளவோ தேடியும் இன்னும் அதற்கு விடை கிடைக்கவில்லை.

தவிர்க்க முடியாமல், குழந்தைகளைப் பட்டினி போட்டு விட்ட தாய் மாதிரி, என் குடியிருப்பு காம்பவுண்டுக்குள் நுழைந்து நடந்தேன். நெஞ்சுக்குள் படபடப்பு...

அறையில் சூட்கேஸை வைத்த கையோடு முதலில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும் - உறிஞ்ச உறிஞ்ச! இன்று இரண்டு மூன்று தடவை ஊற்ற வேண்டும். ஒரு வாரப் பட்டினிக்குப் பின் செடிகள் இன்று, தண்ணீர் பார்க்கப் போகின்றன. அதுகளுக்கு இந்தத் தண்ணீர், தண்ணீர் அல்ல. அறுசுவை விருந்து!

இனி என் ப்ரியமான செடிகள் வளர பாலிதின் பை விஸ்தாரம் போதாது. சீக்கிரம் பூந்தொட்டிகள் வாங்கி, அதுகளை பத்திரமாக ஜாகை மாற்ற வேண்டும்.

அறையை நெருங்கிய போது...

அதிர்ந்தேன்!

சிமை ஓட்டுக் கூரை மேல், என் செடிகள் இல்லை! கூரை வெறிச்சோடிப் போய் சூன்யமாய்... அங்கும், இங்கும் தேடினேன். செடிப் பைகள் எங்குமே இல்லை.

நெஞ்சு கனமாகியது!

முருகேஷ் வாயில் பிரஷ்ஷுடன், அறையிலிருந்து வந்தான்.

''டேய்! இங்கேயிருந்த செடியெல்லாம் எங்கடா?''

அவன் சிரித்தான். எங்காவது செடிகளை இடம் மாற்றி இருப்பானோ?

''சொல்லுடா, செடிகள் எங்கே?''

''குழந்தைகளை விசாரிக்கற மாதிரி கேக்குறே?''

''ப்ளீஸ்... சொல்லு!''

மீண்டும் சிரித்தான்.

''அந்த பிரண்ட் ரமேஷ் வந்து எடுத்துட்டுப் போயிட்டார்டா! உனக்கு 'தேங்க்ஸ்' சொல்லச் சொன்னாரு!''

சட்டென்று -

உடம்பு சூடாகியது. மனசுக்குள் எதையோ இழந்த தவிப்பு!

இமை ஓரங்கள் ஊற்றெடுத்தன. நான் தேம்பத் தொடங்கினேன்...

அடுத்த இதழில்:

'கறுக் முறுக்'

என்று ஒரு கவர் ஸ்டோரி!



என் அருமை அலமு அத்தை,

நீதான் என் பெஸ்ட் ஃப்ரெண்ட்! வேற யாருமே எனக்கும் பப்லுவுக்கும் பானகம், நீர் மோர் செய்யறதுக்கு யோசனை சொன்னதே இல்லை... கொஞ்சம் கூட எதையும் கொட்டாம, சிந்தாம செய்து முடிச்சோம்.

செய்யறதுக்கு எவ்வளவு நேரம் ஆச்சு தெரியுமோ? ஒரு மணி நேரம்! ஆனா குடிக்கறதுக்கு... மூணே நிமிஷம்!

அம்மா சொன்னாங்க - பானகம் நீர் மோர் எல்லாம் ஸ்ரீராம நவமிக்குத் திருப்பியும் செய்யணும்னு... ஏப்ரல் ஒண்ணாந் தேதி ஸ்ரீராம நவமி - அதான் ராமருக்குப் பிறந்த நாள்...

அப்பா எங்களுக்கு ராமர் கதை சொல்லியிருக்கார். ராமர் ரொம்ப தைரியசாலி. ஏன் தெரியுமா? அவர் பயங்கர ராட்சஸர்களோட சண்டை போடுவார். அது மாத்திரமில்லை - அவரைக் காட்டுக்குப் போகச் சொன்னப்போ கூட அவருக்குக் கோபமோ வருத்தமோ வரவேயில்லை.

'நீதான் இனிமே ராஜாவா இருக்கணும்'னு சொன்னப்போ அழகான தாமரைப் பூ மாதிரி இருந்துதாம் அவர் முகம். 'பதினாலு வருஷம் காட்டுக்குப் போகணும்'னு சொன்னப்பவும் அதே மாதிரி இருந்ததாம்! அப்பா இதைச் சொல்லிட்டு ஒரு பாட்டுப் படிச்சுக் காட்டினார். கம்பர் எழுதின பாட்டு.

அந்தப் பாட்டைக் கேட்டதுலேருந்து எனக்கு ராமரை முன்னை விட ரொம்பப் பிடிச்சுடுத்து. ஆனால் அது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்ததால அதே அர்த்தத்துல நான் ஒரு பாட்டுப் பாடினேன்.


காட்டுக்குப் போகச் சொன்னாலும்
கோதண்டராமன் கோபிக்கலை
நாட்டை ஆளச் சொன்னது போல்
நயமாய் அழகாய்ச் சிரித்தானே!


- இதுதான் அந்தப் பாட்டு. இதுக்கு அப்பா கொஞ்சமாகத்தான் 'ஹெல்ப்' பண்ணினார்.

ஹாப்பி ஸ்ரீராம நவமி டு யூ!

உன்,

அருண் கண்மணி





இலவசம்

இனிப்புகள்

எங்களிடம் ஒரே
தடவையில் ரொக்கத்திற்கு
ரூ. 250/-க்கு மேற்பட்ட
பக்தி புத்தகங்கள்
வாங்குபவர்களுக்கு வாங்கும்
தொகையை அனுசரித்து
இனிப்புகள் இலவசமாக
வழங்கப்படும்.

கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி
நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்



திருமண
வைபவங்களுக்கு:-
சீர்முறுக்கு, சீர் அதிரசம்,
முள்ளுத்தேன்குழல்,
பருப்புத் தேங்காய்
வகைகள், திரட்டுப்பால்,
அப்பம் முதலியன.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020
போன்: 412557

கேபிள் களங்கள்

ரமாமணி சுந்தர்

"எங்கள் வீட்டில் கேபிள் டீவி. இருக்கிறதே, உங்கள் வீட்டில் இருக்கிறதோ?" என்று நான் உங்களிடம் கேட்டால், நான் பெருமையடித்துக் கொள்வதாக நினைத்து விடாதீர்கள். கேபிள் மாட்டிக் கொள்ளாதவர்களை அதாவது கேபிள் டீவியில் மாட்டிக் கொள்ளாதவர்களைக் கண்டு, உண்மையிலேயே, நான் மிகவும் பொறாமைப்படுகிறேன்.

கேபிள் டீவி வைத்துக் கொள்வது அந்தஸ்தின் அளவுகோல் என்று யார் சொன்னது? கேபிள் டீவி என்பது, வீட்டில் குழந்தைகளின் ஆதிக்கத்தையும், பெரியவர்களின் கையாலாகத்தனத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டும் சாதனம்.

அவசரப்படாமல், சாவகாசமாகப் படித்து முடித்து விட்டு, வேலை வெட்டியில்லாமல் தின்டாடிக் கொண்டிருந்த எங்கள் தெரு பட்டதாரி இளைஞர்கள்(?) இருவர், டிஷ் ஆன்டெனா என்ற பாத்திரத்தை அதாவது அண்டாவை, அவசர அவசரமாக எதிர் வீட்டு மொட்டை மாடியில் கொண்டு வந்து இறக்கவும் எனக்குப் பகீரென்று வயிற்றைக் கலக்கியது. தெருவில் போகும் வரும் பெண்களை 'சைட்' அடித்துக் கொண்டு 'உருப்படியாக'ப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த இந்த இளைஞர்களுக்கு, கேபிள் டீவி வியாபாரத்தில் இறங்க வேண்டும் என்று விபரீதமாகப் புத்தி போவானேன்?

குழந்தைகளின் நச்சரிப்புத் தாங்காமல் (உள்ளூர பெரியவர்களாகிய எங்களுக்கும் நப்பாசை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்) கேபிள் டீவியை, மாட்டிக் கொண்டோம். அதுவும் எப்படி...?

சுமார் ஒரு வாரம் நானும், என் கணவரும் அலுவலக நேரத்தை வீணடிக்காமல் ஏற்கெனவே கேபிள் டீவி வைத்திருப்பவர்களிடம், அந்தந்த காலனிகளில் மாதக் கட்டணம் என்ன, எத்தனை சானல்கள் என்றெல்லாம் மார்க்கெட் நிலவரத்தைப் பற்றி ஒரு குட்டி 'சர்வே' நடத்தினோம். அதன் அடிப்படையில், எங்கள் கேபிள்காரரிடம், அடித்துப் பிடித்து பேரம் பேசி, ஐந்து சேனல்களைப் பெற்றுக் கொண்டது, எத்தகைய மடத்தனம் என்பது போகப் போகத்தான் எங்களுக்குப் புரிய ஆரம்பித்தது.

கேபிள் டீவி எனும் மாயவலையில் நாங்கள் மட்டும் சிக்கிக் கொள்ளவில்லை. எங்கள் தெருவிலுள்ள அநேகரும் போட்டி போட்டுக் கொண்டு கேபிள் டீவியின் ஒயரில், தடுக்கி விழுந்தார்கள். தொலைக் காட்சிப் பெட்டியை "முட்டாள்களின் பெட்டி" என்று திட்டும் அறிவு ஜீவிகள் கூட, பி.பி.சி., சி.என்.என்., செய்திகளைக் கேட்டு உலக அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளலாம் என்ற போர்வையில், கேபிள் டீவியில் 'புகுந்தார்கள்'.

பண விவகாரத்தில் ஹர்ஷத் மேத்தாவை விழுங்கும் சாமர்த்தியம் உள்ள, எங்கள் வீட்டின் சொந்தக்காரரோ, கேபிள் கம்பெனிக்குத் தெரியாமல், திருட்டுத்தனமாக எங்கள் வீட்டிலிருந்தே, தன்னுடைய கீழ் போர்ஷனுக்கு ஒயரை இழுத்துக் கொண்டார்! அப்படியாவது வீட்டு வாடகையை உயர்த்தாமல் இருந்தால் சரிதான் என்று நாங்களும் வீட்டுக்காரரின் 'ஓசி பிலா' ஆசையை நிறைவேற்றினோம்.

எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு கேபிள் மாட்டிக் கொண்டதுதான் கொண்டார்கள், இப்படி போட்டி போட்டுக் கொண்டு பல்வேறு அலைவரிசைகளை அலற விட்டுத் தங்கள் கைவரிசையை வேறு காட்ட வேண்டுமா? எங்கள் வீட்டிலிருந்து எம் டீவியின் காட்டுக் கத்தல், மாடி வீட்டிலிருந்து ஹிந்தி படத்தின் கிளைமாக்ஸ் காட்சியின் 'டிஷூம் டிஷூம்', கீழ் போர்ஷனிலிருந்து பக்தி சிரத்தையாக பஜனைப் பாடல்கள், வலது பக்கத்து வீட்டிலிருந்து கிரிக்கெட் பந்தயத்தின் ஆரவாரம், இடதுபுறத்து வீட்டிலிருந்து ஸ்டார்

பிளஸ்ஸில் ''பெண்கள் பிரா அணிவது அவசியமா?'' போன்ற ஏதாவது ஒரு தலைபோகிற பிரச்னையைப் பற்றிய சர்ச்சை, என்று நாலா திசைகளிலிருந்தும் பல்வேறு விதமான சப்தங்கள் தலைசுற்ற வைத்தன.

இந்தச் சப்தங்களை மீறிக் குரலை உயர்த்தித் தொண்டை கிழிய தொலை பேசியில் பேசித் தொலைப்பது அவசிய மாகி விட்டதால் தொண்டை வலி பிளஸ்; நிம்மதி மைனஸ்!

கேபிள் டீவியின் உபயத்தினால் உல கத்தின் எந்த மூலையில் நடக்கும் விஷயங் களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள லாம் என்பது சாதனை மட்டுமல்ல, சோதனையும் கூட!

கேபிள் மாட்டிக் கொண்ட பிறகு, எங்கள் வீட்டில் காலை சுப்ரபாதமே எம்டீவி எனும் மியூஸிக் டீவிதான்.

அடாடா! வீடுகளில், பெரியவர் களுக்குத் தெரியாமல் குழந்தைகளும், குழந்தைகளுக்குத் தெரியாமல் பெரியவர் களும் போட்டி போட்டுக் கொண்டு ரகசிய மாக, எம் டீவியைப் பார்த்து ரசிப்பதற் காகப் படும் அவஸ்தையைச் சொல்லி முடி யாது!

கல்லூரி மாணவியான என் மகள், தீபாவளிப் பண்டிகை போல், தினமும் கறுகறுப்பாக விடிகாலையில் எழுந்திருந்து பற்பசையையும், பிரஷையும் நாடுவதற்குப் பதில், டீவியின் முகத்தில் விழிக்க ஆரம்பித்திருக்கிறாள்.

என் கணவரோ, பரீட்சைக்குப் படிக்கும் காலத்தில் கூட இப்படி கண்விழித்துப் படித் திருக்க மாட்டார். உலகின் ஏதோ ஒரு மூலை யில் நடக்கும், விளையாட்டுப் பந்தயத்தைக் கண்டுகளிப்பதற்கென்று, அர்த்த ராத்திரிக் கெல்லாம் அலாரம் வைத்து எழுந்திருக்க ஆரம்பித்துள்ளார். அதற்காக முதல் நாள் மாலையே கூடுதலாகப் பால் வாங்குவது, பிளாஸ்கில் காப்பி போட்டு வைப்பது என்று வீடு ரகளைப்படுகிறது!

கேபிள் கம்பெனிக்கு, மாதா மாதம் கட்டும் நூறு ரூபாய் (தண்டப்) பணம் வீண் போகாமல், எல்லா நிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்க முடியாமல், ஆபீசுக்கு வேறு போய்த் தொலைக்க வேண்டியிருக்கிறதே என்று ஏகக் குறை என் கணவருக்கு. இதற்காகவே சட்டுப் புட்டென்று வேலையி லிருந்து ஓய்வு பெற்று விடலாமா என்று கூட, தீவிரமாக யோசிக்க ஆரம்பித்து விட்டார். 'சான்டா பார்பரா', 'த போல்ட் அண்ட் த பியூட்டிஃபுல்' போன்ற தொடர் களே தாரக மந்திரம்! தலைபோகிற



அருள்வாக்கு



ஆரம்பித்த இடத்துக்கே வந்து முடிந்து விடுகிற வட்டம் ஏகமான பிரம்மத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். வட்டத்தில் ஆரம்பித்து அரை வட்டத்துக்கு அப்புறம் நேர்க்கோடாகிற பிள்ளையார் சுழி, ஏகமான பிரம்மத்தை ஸங்கேதமாகக் காட்டிவிட்டு அதிலிருந்து அநேகமான ஸ்ருஷ்டி தோன்றியதையும் சேர்த்துத் தெரிவிக்கிறது என்று சொல்லலாம். பிரம்மமும் பூர்ணம். பிரபஞ்சமும் பூர்ணம். பிரம்ம பூர்ணத்திலிருந்து பிரபஞ்ச பூர்ணம் உண்டாயிற்று என்று உபநிஷத்தின் ஆரம்பத்தில் சொல்கிறோம். ஆரம்ப ஸ்வாமியின் அடையாளமாக எதன் ஆரம்பத்திலும் போடும் பிள்ளையார் சுழி, பிரம்ம பூர்ணத்தை வளைசல் கொம்பாலும், பிரபஞ்சபூர்ணத்தை நேர்கோட்டாலும் காட்டி, முதலில் கொம்பு, அப்புறம் கோடு என்பதால் பிரம்மத்திலிருந்துதான் பிரபஞ்சம் உண்டாச்சு என்றும் தெரிவிக்கிறது.

கொம்பு, கோடு என்று இரண்டு வார்த்தைகள் சொன்னேன். வேடிக்கையாக இரண்டுமே பிள்ளையாரின் தந்தத்துக்குப் பேராயிருக்கின்றன. 'ஏக தந்தர்' என்பதை 'ஒற்றைக் கொம்பன்' என்பார்கள். 'பெரும் பாரக் கோடும்' 'கோடாயுதத்தால் கொடு வினை களைந்தே' என்றெல்லாம் அவ்வைப் பாட்டி சொல்லும் போது 'கோடு' என்றாலும் தந்தந்தான். எப்போதும் குழந்தையாயிருக்கிற ஸ்வாமியை வேண்டிக் கொண்டதாலேயே குழந்தைப் பிராயத்தில் கிழவியாகி விட்ட அவ்வை சொன்ன 'கொடுவினை' என்பது தான் ஜன்மாந்தர பாபங்களான பிராரப்த கர்மா. அந்தக் கர்மா எப்படியெப்படி நம்மைப் பழிவாங்க வேண்டும் என்று பிரம்மா நம் தலையில் எழுதியிருக்கிறானென்று சொல்லி, இதை பிரம்மலிபி என்பார்கள். 'தலைச்சுழி' என்பதும் இதைத்தான். இந்த தலைச் சுழியையும் சுழித்து விடுவது பிள்ளையார் சுழி. ''கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே''.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



வேலையிலிருந்தாலும், எங்கள் வீட்டினர், இந்தத் தொடர்களைத் தினமும் பார்க்கத் தவற மாட்டார்கள். என்னைக் கேட்கப் போனால், அவர்களுக்கு, அதைவிட தலை போகிற வேலை வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தொடர்களை விடாமல் பார்ப்பதன் விளைவு : வீட்டில் எல்லோருமே தஸ்புஸ்ஸென்று ஆங்கிலத்தில், அதுவும் அமெரிக்க உச்சரிப்புடன் - பேசத் துவங்கியுள்ளார்கள். வரவர எங்கள் வீட்டு ஆயா கூட எங்களிடம் ஆங்கிலத்தில் தான் சண்டை போடுகிறாள்!

அது மட்டுமல்ல, நாங்கள் கேபிள் டீவியில் மாட்டிக் கொள்ளும் வரை, எங்கள் வீட்டுக் குழந்தைகள் இந்திய விளம்பரங்களில் வரும் சாமான்களையும், இந்திய மாடல்கள் அணியும் துணிமணிகளையும் மட்டுமே வாங்க ஆசைப்பட்டார்கள். இப்பொழுது அவர்களுடைய ஆசைகள், ஃபாஷன்கள் உலக அளவில் விரிவடைந்து, எங்கள் பணப் பையைச் சுருங்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

சர்வதேச அலைவரிசைகள் போதாதென்று, உள்ளூர் அலைவரிசை (Local Channel) வேறு, காலையில் நாங்கள் துயிலெழுவதிலிருந்து இரவு கண்ணை மூடும் வரை, 'பயனுள்ள பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை'த் தாராளமாக வாரி வழங்குகிறது. எல்லோருக்கும் வசனங்கள் மனப்பாடம் ஆகும் வரை ஒவ்வொரு திரைப்படத்தையும் இரண்டு, மூன்று முறைகள் காண்பித்தாகிறது. அதாவது, குறுக்கும், நெடுக்கும் குதித்து ஓடும் உள்ளாடை, சோப்பு, சீப்பு விளம்பரங்களுடன் தினமும் மூன்று திரைப் படங்களுக்குக் குறைவில்லாமல் பார்த்து, தெருவாசிகள் எல்லோரும் உருப்படியாகப் பொழுதைப் போக்க ஆரம்பித்துள்ளார்கள். இதில் வரும் விளம்பரங்கள் தவிர, எங்கள் காலனியில் எந்தெந்த கடைகளில் தள்ளுபடி போன்ற விளம்பரங்களும், ''பிங்கிக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்'', ''லதா-கிஷோர் தம்பதியருக்குத் திருமண நாள் வாழ்த்துக்கள்'', போன்ற அறிவிப்புகளும் அவ்வப்பொழுது எங்களை மகிழ்விக்கின்றன.


கூடிய விரைவில், எங்கள் பேட்டையில் நடக்கும் மாமியார் - மருமகள் அல்லது கணவன்-மனைவி சண்டைகள், காதல் விவகாரங்கள், யார் யார் வீட்டுக் குழந்தைகள் பரீட்சையில் அல்லது காதலில் தோல்வி போன்ற உபயோகமான வம்புகளையும், உள்ளூர் அலைவரிசையில், ஒலிபரப்பலாம். எங்கள் தெரு ரேடியோ மாமிதான் பாவம், பொழுது போகாமல் திண்டாடப் போகிறாள்!

இப்படியாக, நாம், கேபிள் டீவியினால் பலவிதமான அனுகூலங்களை அடைய முடிந்தாலும், இந்தப் பொல்லாத

சாதனமானது, எங்கள் வீட்டில் சதாசர்வ காலமும் குருக்ஷேத்திரப் போரை உண்டாக்குவதை மட்டும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஏதாவது ஒரு அலைவரிசையைத் தொடர்ந்து அரை மணி நேரமாவது பார்த்தோம் என்றில்லாது, நொடிக்கொரு தரம் டக்டக்கென்று அலைவரிசைகளை மாற்றி, மாற்றி வைத்து, விநோதமான ஒலிகளையும், தலைவலியையும் உண்டாக்குவது ஒருபுறமிருக்க, வீட்டிலுள்ள நான்கு பேர்களும் நாலுவிதமான நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் பார்த்துத் தீர வேண்டும் என்று, நாட்டில் நடக்கும் வகுப்புக் கலவரங்கள் போதாதென்று, வீட்டிலும் தினமும் சண்டை மண்டை உடைகிறது.

இந்தச் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக, எங்கள் வீட்டில், இன்னும் இரண்டு, மூன்று டீவிகள், அதாவது தலைக்கு ஒரு டீவி வாங்குவதற்காகத் திட்டம் தீட்டியாகிறது. உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்கிறதோ இல்லையோ, கூடிய சீக்கிரத்தில், அமெரிக்காவைப் போல், எங்கள் வீட்டிலும் ஒவ்வொரு அறையையும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டி அலங்கரிக்கலாம்.

இந்த இன்னல்களிலிருந்து தப்பிக்க (கேபிள்) டீவியில்லாத ஊருக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய் விடலாம் என்று பார்த்தால், இந்தக் கலியுகத்தில் சாரி, சாடிலைட் யுகத்தில் அப்படி ஓர் இடம் இருப்பதாகத் தெரியவில்லையே!



குறை சொல்வது, குற்றம் சாட்டுவது என்றாலே நமக்கு ஒரு தனி ஆனந்தம்! ஆனால் நாம் அரசியல்வாதிகளா என்ன? அதனால் ஓவியர் செல்லம் நாம் குற்றம் கண்டுபிடிக்கவென்றே வேண்டியாகப் பல தவறுகளை இந்தப் படத்தில் வேண்டுமென்றே செய்திருக்கிறார். என்னென்ன தவறுகள் என்பதைப் பக்கத்தில் உள்ள கூப்பனில் எங்களுக்கு நேராக எழுதி, உங்கள் பெயர் விலாசம் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பதினைந்துக்கும் மேற்பட்ட தவறுகள் இருப்பதாகக் கருதினால் தனித்தாளில் எழுதிக் கூப்பனுடன் இணைக்கலாம்.

உறை மீது ''குற்றம் சாட்டுகிறோம்!'' என்று குறிப்பிட்டு, கூப்பன்களைக் கத்தரித்து 7.4.93க்கு



முன்னதாகக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வையுங்கள். செல்வம் எங்களிடம் எழுதி அனித்துள்ள எல்லாத் தவறுகளையும் கண்டுபிடிப்பவருக்குப் பரிசு ரூ 250/= ஒருவருக்கு அதிகமாக வெற்றி பெற்றால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். பத்து பேருக்கும் அதிகமாக வெற்றி பெற்றால் குலுக்கலில் பத்து பேர் தேர்வாகிப் பரிசைப் பகிர்வார்கள். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பரிசு ரூ. 250

குற்றம் காட்டுங்கள்!

ஓவியத்தில் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள தவறுகள் :

1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15

என் பெயர் :................................

விலாசம் :................................


....

....

....

தொழில் தொடங்க ஃபோட்டோ-காப்பியர் மெஷின் வாங்கியாச்சு ! கூடவே ஃபாக்ஸ் மெஷினும் இருந்தால் நல்லது.

துண்டு விழும் தொகைக்கு என்ன செய்வது?



சொந்தத்தில் தொழில் நடத்த திருவாளர் ராமசாமிக்கு விருப்பம். இடம்பிடித்து, அட்வான்ஸ் கொடுத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். உரிய நேரத்தில் ஃபோட்டோ- காப்பியர் மெஷினும் வந்து சேர்ந்தது. அப்போது ஒரு யோசனை. அது மட்டும் போதுமா ? கூடவே ஃபாக்ஸ் மெஷின் ஒன்றும் இருந்தால் ? வருமானத்தைப் பெருக்க அது ஒரு கூடுதல் வாய்ப்பு. ஆனால் கையிருப்பு போதாதே ! கடன் வாங்கவும் வழியில்லையே ! கவலை மேக மூட்டமாய் சூழ்ந்தது. யோசித்தார். அதன் வெளி வரம்பில் ஒரு ஒளிக்கீற்று...அதன் பலன் ?

ஏற்கெனவே சேர்ந்திருந்த ஸ்ரீராம் சீட்டை இப்போது பயன் படுத்திக் கொண்டார்.

வெளி ஆதரவையோ, உதவியையோ நாடவேண்டிய அவசியமின்றித் தங்கள் பணத்தைக் கொண்டே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் கௌரவமான பாதை ஸ்ரீராம் சீட்டு.

சக்கரவர்த்தித் திருமகன்

28. சித்திரகூடம்

பரத்துவாஜருடைய ஆசிரமத்தில் ஒரு ராத்திரி படுத்துத் தூங்கி, காலையில் எழுந்து ராம லக்ஷ்மணர்களும் சீதையும் மகரிஷியை வணங்கி விட்டுச் சித்திர கூட மலைக்குப் போகப் புறப்பட்டார்கள். தம் சொந்தக் குழந்தைகளை ஆசீர்வதிப்பது போல் தன்னந்தனியாக வனம் செல்லும் ராஜகுமாரர்களை முனிவர் மிக்க அன்புடன் மந்திர பூர்வமாக 'நற்செலவு' கூறி வழி அனுப்பினார். போகும் வழியை நன்றாக விளக்கிச் சொன்னார். அவர் குறிப்பிட்ட மார்க்கமாகவே மூவரும் சென்றார்கள். முனிவர் சொல்லியபடி வேகமாக ஓடும் காளிந்தியாற்றைக் கடப்பதற்கு ஒரு தெப்பம் கட்டினார்கள். அதற்கு வேண்டிய மரக்கட்டைகளும் மூங்கில்களும் வெட்டிச் சேர்த்துக் காட்டுக் கொடிகளால் நன்றாகக் கட்டினார்கள். அதில் சீதை உட்காருவதற்காக லக்ஷ்மணன் இலைகளும் சிறு கிளைகளும் பரப்பி நன்றாக அமைத்தான். தெப்பத்தில் சீதையை ராமன் உட்காரச் சொன்ன போது கொஞ்சங் கூச்சத்தோடு ஏறி உட்கார்ந்தாள். பிறகு சீதையின் துணி மூட்டையையும், கிழங்கு வெட்டுவதற்கான குந்தாலி, கூடை முதலியவற்றையும் சரியாகத் தெப்பத்தில் வைத்துத் தாங்களும் ஏறினார்கள். ஏறி மெதுவாக ஆற்றைத் தாண்டினார்கள்.

ஆற்றின் நடுவில் செல்லும் போது சீதை நதியை வணங்கி, நாதனுடைய பிரதிக்ஞை க்ஷேமமாக முடிந்து மூவரும் ஊர் திரும்பும்படி அருள்வாயாக என்று வேண்டிக் கொண்டாள்.

இவ்வாறே இன்னும் சில ஆறுகளையும் கடந்து சென்றபின் பரத்துவாஜ முனிவர் குறிப்பிட்ட பெரிய ஆலமரத்தைக் கண்டார்கள். அந்த ஆலமரத்தடியிலும் சீதாதேவி பூஜை செய்தாள். "என் புருஷனுடைய விரதம் முடிவடைய வேண்டும். மரமே! கௌசல்யை, சுமித்திரை இவர்களை நான் திரும்பப் பார்க்கும்படி அருள்வாய்" என்று பிரார்த்தனை செய்தாள்.

ராஜாஜி

"லக்ஷ்மணா! நீ முன்னால் சீதையுடன் செல்வாய். நான் பின்னால் ஆயுத பாணியாய் நடப்பேன். வழியில் அவள் கேட்கும் பூவோ பழமோ எதை இஷ்டப்பட்டாலும் அதைப் பறித்துக் கொடுத்து அவளை உற்சாகப்படுத்திக் கொண்டே நடப்பாய்" என்றான் ராமன்.

அவ்வாறே சீதையும், 'அந்த மரம் என்ன மரம்?' 'இந்தச் செடி என்ன செடி?' 'அதோ அந்தக் கொடியைப் பாருங்கள்; அதில் புஷ்பங்களைப் பாருங்கள்!' என்று மிக ஆனந்தமாய் ராமனையும் லக்ஷ்மணனையும் கேட்டுக் கொண்டும், அதற்கு முன் தான் பார்த்திராத புஷ்பங்களையும் பழங்களையும் பார்த்து மகிழ்ந்து கொண்டும் சென்றாள்.

பிறகு ஓர் ஆற்றங்கரையை அடைந்தார்கள். வனத்தில் அனேகவித மிருகங்களையும் பட்சிகளையும் சீதைக்குக் காட்டிச் சந்தோஷமாக உலாவி விட்டு இரவில் ஆற்றங்கரையில் தங்கினார்கள்.

இவ்விடத்திலும், இன்னும் பல விடங்களிலும் ராம லக்ஷ்மணர்கள் வேட்டையாடி, பூஜைக்குத் தகுந்த, அதாவது வழக்கப்படி சாப்பிடத்தகுந்த, வேட்டையாகாரம் சம்பாதித்து உண்டார்கள் என்று வால்மீகி முனிவர் எழுதியிருக்கிறார். சந்தேகத்துக்கு இடமில்லாமல் வியக்தமாக எழுதியிருக்கிறார். இதைப் பற்றி நாம் குழப்பமடைய வேண்டியதில்லை. க்ஷத்திரியர்களின் ஆசாரப்படி மாமிச ஆகாரத்தில் குற்றமில்லை. காலத்துக்கும் குல வழக்கத்துக்கும் ஏற்றபடி உடலைப் பாதுகாப்பதற்காக எந்த உணவும் தக்க வழியில் சம்பாதித்து, பூஜையில் வைத்து அளவுக்கு மிஞ்சாமல் உண்பதில் யாதொரு தவறுமில்லை என்பது பாரத தேசத்துப் பொது தருமம்.

மறுநாள் காலையில் ராமன் லக்ஷ்மணனை எழுப்பி, "தம்பி, மரங்களில் பறவைகள் மதுரமாகச்

சப்திப்பதைக் கேள்! புறப்படுவதற்கு நேரமாயிற்று'' என்றான்.

லக்ஷ்மணன் வனவாச காலம் முழுதும் சாப்பிடாமலும் தூங்காமலும் விரதம் காத்தான் என்கிற கதை வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படவில்லை. ஆனபடியால் லக்ஷ்மணனை அதிகாலையில், இன்னும் கொஞ்சம் தூக்க மயக்கத்திலிருந்த சமயம், ராமன் எழுப்பினான் என்று இவ்விடத்தில் சொல்லியிருப்பதில் முரண் ஒன்றுமில்லை.

உடனே லக்ஷ்மணன் தூக்கம் தெளிந்து எழுந்தான். எல்லோரும் ஸ்நானம், ஜபம் முதலிய காரியங்களை முடித்துக் கொண்டு கிளம்பினார்கள்.

பரத்துவாஜர் குறிப்பிட்டிருந்த வழியிலேயே சென்றார்கள். அப்போது வசந்த காலம். மரங்களும் செடிகளும் சித்திர விசித்திரவண்ணப் புஷ்பங்களைப் பூத்து, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் பிரகாசித்தன. சில மரங்களில் கனிகளும் துளிர்களும் கிளைகள் தாங்க முடியாத பெரும் பாரமாகத் தொங்கின. ''மனிதர்களால் சேதப்படுத்தாத விருக்ஷங்களின் அழகைப் பார்! தேன் கூடுகள் தொங்குவதைப் பார்! புஷ்பங்கள் உதிர்ந்து, புஷ்பப் படுக்கையாக விளங்கும் தரையைப் பார்! கூவும் பறவைகளின் குரலைக் கேட்டாயா? எவ்வளவு மனோகரமாக ஒன்றுக்கொன்று பிரதிநாதம் செய்து கொண்டு, ஆனந்தமாக வசிக்கின்றன! இதையெல்லாம் அநுபவித்துக் கொண்டு நம்முடைய வனவாசத்தைச் சுகமாகக் கழித்து விடலாம்'' என்று ராமன் லக்ஷ்மணனுக்கும் சீதைக்கும் அவ்வப்போது சொல்லிக் கொண்டே நடந்தான்.

அதற்குள் சித்திர கூடமலை தென்பட்டது. அதைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து வேகமாக நடந்தார்கள்.

''இந்த மலைப் பிரதேசத்தின் அழகு பார்க்கப் பார்க்க வளர்ந்து கொண்டே போகிறது! கிழங்குகளும், பழங்களும் நிறைந்த வனமாக இருக்கிறது. ஜலம் எவ்வளவு சுத்தமாகவும் ருசியாகவும் இருக்கிறது! ரிஷிகளும், ஆசிரமவாசிகளும் இருக்கும் இந்த வனத்தில் நாமும் சந்தோஷமாக இருக்கலாம்'' என்றான் ராமன்.

பிறகு வசிப்பதற்கு ஆசிரமம் கட்டத் தீர்மானித்தார்கள். லக்ஷ்மணன் மிக சாமர்த்திய சாலி. எல்லாச் சௌகரியங்களும் கொண்ட வசதியான குடிசையைக் காற்றுக்கும் மழைக்கும் அசையாதபடி கட்டி முடித்தான். சாளரமும் கதவுகளும் அமைத்துப் பாய்களும் வேய்ந்து தொங்க விட்டு எல்லாம் அழகாக லக்ஷ்மணன் ஒருவனாகவே செய்து முடித்து விட்டான்.

ரமணீயமான சித்திரகூட மலைப் பிரதேசத்தில் மால்யவதி நதிக்கரையில் கட்டிய இந்த ஆசிரமத்தில் மூவரும் வசித்து வந்தார்கள். எந்தக் கவலையுமின்றி வனவாச தருமத்தை அனுசரித்து வந்தார்கள். பிறந்து வளர்ந்த நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்ட துக்கத்தை மறந்து விட்டு இந்திரன் தேவ கணங்களுடன் சுவர்க்கத்தில் வசிப்பது போல் சந்தோஷமாகக் காலங்கழித்தார்கள்.

கம்பரும் வால்மீகியும் இந்தக் கட்டத்தை ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டவர்கள் போல் அழகாக வர்ணிக்கிறார்கள்.

ஆசிரமம் கட்டி முடிந்ததும் அந்தப் பர்ணசாலையைப் பார்த்து,

"என்று கற்றனை நீ இதுபோல்?"

என்று ராமன் தம்பியைக் கட்டி அணைத்துக் கண்ணீர் விட்டதாகக் கம்பர் பாடியிருக்கிறார். அப்படித் தானே நடந்திருக்க வேண்டும்!

''பூவை விட மெல்லிய பாதங்களைப் படைத்த இந்த மிதிலை ராஜகுமாரி பெருங் காட்டையும் நடந்து தாண்டினாள். அவளுடைய பாதங்கள் செய்த அற்புதத்தைப் போல், தம்பி, உன் கைகள் இந்தத் தச்சு, கொத்து வேலையும் செய்து விட்டன! நம்முடைய துரதிர்ஷ்டத்திலிருந்து உண்டான நல்ல அதிர்ஷ்டத்தை உன் கைவேலையில் கண்டேன்'' என்று ராமன் ஆனந்தக் கண்ணீர் விட்டதைக் கம்பர் அற்புதமான முறையில் பாடியிருக்கிறார். இதை டி.கே.சி. எனக்குப் பல தடவை அவருடைய தனிப் பாங்கில் பாடிக் காட்டி உள்ளத்தை



உருக்கியிருக்கிறார். பின்னால் வரும் கஷ்டங்களையும் துக்கங்களையும் எடுத்துக்காட்ட ஒரு அற்புதப் பின் திரையாகிறது இந்தச் சித்திர கூட மகிழ்ச்சி நிலை.

கம்பரும் வால்மீகியும் இருவரும் இந்த இடத்தில் ராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் விட்டு விட்டு அயோத்தியைக்குச் செல்லுகிறார்கள். அயோத்தியையின் பரிதாப நிலையையும் பரதனுக்கு ஏற்பட்ட அநியாயப் பழியையும் துக்கத்தையும் கவனிக்கப் போகிறார்கள்.

29. பெற்ற தாயின் துக்கம்

மூவருடைய உருவம் கண்ணுக்குத் தெரிந்து கொண்டிருக்கும் வரையில் சுமந்திரனும் குகனும் அவர்களைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள். கண்ணுக்கு மறைந்து போனதும் அவர்கள் இருவரும் துக்கத்தில் மூழ்கிக் குகனுடைய நகரம் சென்றார்கள். பிறகு அங்கிருந்து சுமந்திரன் குகனிடம் விடைபெற்றுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பினான்.

அயோத்தியா நகரத்தை அணுக அணுக வழக்கமாக நகரத்திலிருந்து கிளம்பி வரும் சப்தங்களுக்கும் காட்சிகளுக்கும் பதிலாக நகரம் பாழடைந்த ஊர் போல் தென்பட்டது. சுமந்திரனுடைய தேரானது கோட்டை வாயிலைக் கடந்து ஊருக்குள் பிரவேசித்ததும் ''ராமன் எங்கே? ராமன் எங்கே?'' என்று ஊரார் தேரைச் சுற்றிக் கொண்டார்கள்.

''அருமை ஜனங்களே! ராம லக்ஷ்மணர்கள் கங்கையைத் தாண்டி விட்டார்கள். என்னை ஊருக்குத் திரும்பு என்று சொல்லி விட்டு அவர்கள் வனத்தில் கால்நடையாகச் சென்றார்கள்'' என்று கூறினான்.

''ஐயோ!'' என்று கதறினார்கள். ''இந்த ஜன்மம் எடுத்தோமே, என்ன பாபம் செய்தோம்!'' என்று அழுதார்கள். ரதத்தைப் பார்த்து, ''இந்தத் தேர் பாழடைந்து கிடக்கிறதே! இந்தத் தேரில் ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் உட்கார்ந்து சென்றார்களே!'' என்று கடை வீதி, ராஜ வீதி இவைகளின் இருபுறத்தினின்றும் பெண்கள் அழுத சப்தத்தைச் சுமந்திரன் கேட்டுக் கொண்டே தன் முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு சென்றான். தசரதனது அரண்மனைக்கு முன் தேரை நிறுத்தி விட்டு இறங்கினான்.

அங்கேயும் அரண்மனை வாயிலில் ஒரே ஜனக் கூட்டமாயிருந்தது. ''ராமனை வனத்தில் விட்டு விட்டு வரும் இவர் கௌசல்யைக்கு என்ன சொல்லப் போகிறார்? அவள் எப்படி உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்?'' என்றெல்லாம் பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேட்கக் கேட்கச் சுமந்திரன் துக்கம் அதிகரித்தவனாக மெள்ள அந்தப்புரத்துக்குள்ளே சென்றான்.

அங்கே குற்றுயிருடன் கிடந்த அரசனைப் பார்த்தான். ராமன் அரசனிடம் கூறும்படி சொல்லியிருந்ததையெல்லாம் பக்கத்தில் நின்று மெதுவாகச் சொன்னான். தசரதன் ஒன்றும் பேசவில்லை.

அப்போது கௌசல்யா தேவி துக்கம் தாங்காமல் தசரதனைப் பார்த்துக் கடுமையாகப் பேசினாள் :

''மகா பாக்கியவானே! உலகம் வியக்கும்படியான விரதத்தை ஒப்புக் கொண்ட என் குழந்தையைக் காட்டில் விட்டு விட்டுத் திரும்பி வந்த தங்களுடைய அமாத்தியர் இதோ நிற்கிறார். ஏன் அவரிடம் ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்? கைகேயிக்கு வரம் தந்தது அப்போது எளிதாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. இப்போது ஏன் வெட்கப் படுகிறீர்? வரத்தின் பயன் இதுவாகும் என்று உமக்குத் தெரியாதோ? நீர் என்னவோ உம்முடைய சத்தியத்தைக் காப்பாற்றிக் கொண்டீர். உமக்கு என்ன குறை? என் துக்கத்தில் யார் பங்கு எடுத்துக் கொள்ள முடியும்? அதை நான் தான் அனுபவிக்க வேண்டும். நீர் துக்கப் படுவதைப் பார்த்து எனக்குத் திருப்தி ஏற்பட முடியுமா? துக்கப்பட வேண்டியது முறை என்று நீர் துக்கப்பட வேண்டியதில்லை. ஏன் பேசாமல்

"ஒரு மணி நேரமாக வாசலில் யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்?"



இருக்கிறீர்? இங்கே கைகேயி இல்லை; பயப்பட வேண்டாம். ராமனைப் பற்றி அவனை வனத்தில் விட்டுத் திரும்பிய சுமந்திரரை விசாரித்துக் கேட்பீராக. பயப்பட வேண்டாம். இயற்கையை ஏன் வழியடைக்கிறீர்? கைகேயி இங்கே இல்லை.''

துக்கத்தைத் தாங்க முடியாமல் புருஷனை இவ்வாறு குறை கூறிப் பேசினாள் கௌசல்யை.

கோபமும் துக்கமும் பதிபக்தியும் எல்லாம் ஒன்று சேர்ந்து அவள் உள்ளத்தை வேதனை செய்தது. அந்த வேகத்தைத் தாங்காமல் மூர்ச்சையடைந்தாள். இதைக் கண்டு உயிர் போய் விட்டதோ என்று அந்தப்புரம் முழுதும் பயந்தார்கள். அலங்கோலமாயிற்று.

புத்திர சோகத்தினால் கௌசல்யா தேவி தன்னுடைய புருஷனின் உடல் நிலையையாவது மனநிலையையாவது சரியாக உணரவில்லை. அவனுடைய துக்கத்தைக் குறைப்பதற்குப் பதில் அதிகமாக்கினாள். தசரதன் மூர்ச்சை தெளிந்த பிறகு, சுமந்திரனை விசாரித்தான். சுமந்திரனும் இராமன் சொல்லியனுப்பியவாறு எல்லோருக்கும் சொல்ல வேண்டியதைச் சொல்லித் தன் கடமையைச் செய்து முடித்தான்.

கௌசல்யா தேவியைச் சுமந்திரன் பலவாறாகச் சொல்லிச் சமாதானப்படுத்தப் பார்த்தான். ''ராமன் இருக்குமிடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். சீதையைக் காட்டுக்கு அனுப்பி விட்டோமே! என்னால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தண்டகாரண்யத்தில் சீதையுடன் நானும் இருப்பேன்'' என்று கௌசல்யை அழுது கொண்டேயிருந்தாள்.


''தேவி, இந்த மனக் குழப்பத்தை அகற்றி விட்டுத் தைரியமாக இருக்க வேண்டும். அயோத்தியையிலிருந்ததைக் காட்டிலும் வனத்தில் ராமன் மிக ஆனந்தமாகக் காலம் கழித்து வருகிறான். துக்கப்படவே இல்லை. லக்ஷ்மணனும் ராமனுக்குப் பணிவிடை செய்து கொண்டு தரும வாழ்க்கையின் பயனை அடைந்து வருகிறான். அவனுக்கு ஒரு குறையுமில்லை. சீதையோ அரண்மனையில் இருந்தது போலவே வனத்திலும் தன் பிராணனை ராமனிடத்தில் நாட்டிப் பயம், விசனம் ஒன்றுமில்லாமல் மிகச் சந்தோஷமாக இருக்கிறாள். பிறந்தது முதல் காட்டில் வளர்ந்தவளைப் போலவே விளையாட்டாகக் காலங் கழிக்கிறாள். அயோத்தியையில் உத்தியான வனத்தில் ராமனுடன் விநோதமாகக் காலம் கழிப்பது போல் வனத்திலும் சந்தோஷமாகவே இருக்கிறாள். உதய சந்திரனைப் போன்ற அவளுடைய முகத்தின் அழகு கொஞ்சமும் குறையவில்லை. குழந்தையைப் போல் கவலையாவது பயமாவது கொஞ்சமும் இல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிறாள். ராமன் பக்கத்திலிருப்பதால் அவளுக்கு வருத்தம் என்பது அணுவளவுமில்லை. செல்லும் வழியில் கிராமங்கள், ஊர்கள், ஆறுகள், மரம், செடி, புஷ்பம் இவைகளைப் பற்றியெல்லாம் விசாரித்து லக்ஷ்மணனோடும் ராமனோடும் சம்பாஷித்துக் கொண்டு உல்லாசமாக நடந்து போகிறாள். வனவாசம் அவளுக்கு ஒரு தோட்டத்தில் விளையாடுவது போலிருக்கிறது. அவள் எழில் எள்ளளவும் குன்றவில்லை. நடப்பதினால் அவள் பாதங்கள் மருதாணி இட்டுக் கொள்ளாமலேயே சிவந்து தாமரையைப் போல் பொலிவு அடைந்து வருகின்றன. வனத்தில் ஆனந்த நர்த்தனம் செய்வது போலவே நடக்கிறாள். கால்களில் சலங்கைகள் இல்லையென்பதுதான் வித்தியாசம். நான் சொல்லுவது எல்லாம் உண்மை. நீங்கள் விசனப்பட வேண்டாம். அவர்கள் மூவரும் உலகத்துக்கொரு பாடமாகத் தருமத்தை நடத்தி வருகிறார்கள். சக்கரவர்த்தியின் பிரதிக்ஞையை நிறைவேற்றி வருகிறார்கள். பித்ரு வாக்கிய பரிபாலனம் செய்கிறார்கள். அவர்களுடைய தவம் உலகத்தில் பெரும் புகழுடன் என்றென்றும் நிற்கும். துக்கப்படுவதற்குக் காரணமில்லை.''

இவ்வாறெல்லாம் பல சொல்லித் தேற்றிப் பார்த்தான் சுமந்திரன். ஆனாலும் கௌசல்யை கொஞ்ச நேரம் சமாதானப்படுவாள். பிறகு, ''ஐயோ, ராமா!'' ''ஐயோ, குழந்தாய்!'' என்று கதறுவாள். காட்டில் ராமனை விட்டு விட்டு வந்த சுமந்திரனைப் பார்த்த பிறகு அவள் துக்கம் அதிகரித்தது.

(தொடரும்)



"பக்கத்துத் தெரு பங்கஜத்துடன்தான். அவளுக்கு உள்ளே வர நேரம் இல்லையாம்!" – ஏ.ஆர்.எம். இஸ்மாயில்



ராம் ஹாஸ்பிடல் பஸ் நிறுத்தத்தில் லலிதாவைப் பார்த்ததுமே என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தீர்மானித்து விட்டான் விஸ்வநாதன். அப்படி ஒரு முடிவுக்கு வர அதிகம் நேரம் ஆகவில்லை அவனுக்கு.

அங்கே கூட்டத்தோடு சேராமல் சற்று தள்ளி நின்றிருந்தாள் அவள். அப்படி விலகி நின்றதாலேயே அவன் பார்வையில் பட்டு விட்டாள். ப்ன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு இருந்தது போலவே அப்போதும் இருந்தாள்.

அவளது மாறாத் தோற்றம் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தி விடவில்லை. மாறாக அவனே மறந்து போயிருந்த அவமானம் தான் ஞாபகத்திற்கு வந்தது. அந்த நினைவு அவனுக்குள் ஆத்திரத்தைக் கிளப்பியது.

சாலையை இரண்டு பக்கமும் பார்த்து விட்டு வேகமாகக் கடந்தான் விஸ்வநாதன். லலிதாவும் அவனைப் பார்த்து விட்டாள்.

அவள் பேச்சிழந்து நிற்க, விஸ்வநாதன்தான் முதலில் ஆரம்பித்தான்.

''சௌக்கியமா இருக்கீங்களா?''

அவள் தலையசைத்தாள். பின் மெல்லிய குரலில் அவளிடமிருந்து பதில் வந்தது.

''ம்.. இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?''

''நல்லா வசதியா இருக்கேன். ஒரு குறையுமில்லை'' என்பதைச் சற்று அழுத்திச் சொன்னவன், ''என்ன இங்கே நிக்கிறீங்க?'' என்று கேட்டு, முகத்தில் சிறிது ஆச்சர்யத்தைக் காட்டிக் கொண்டான்.

''நான் இப்ப இந்த ஊர்தான். இங்கே வந்து ரெண்டு வருஷமாச்சு!''

''அப்படியா?'' நானும் இங்கேதான் செட்டில் ஆகியிருக்கேன். எத்தனை வருஷம் கழிச்சு சந்திச்சிருக்கோம்! இன்னிக்கு இங்கே உங்களைச் சந்திப்பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. உங்ககிட்டே நிறையப் பேசணும். வாங்க வீட்டுக்குப் போகலாம்.''

சி.என். ராஜராஜன்

மறக்க வேண்டிய நேரத்தில்

''இன்னொரு நாள் வரேனே.. இப்ப அவசரமாப் போகணும்!''

அவள் தன்னிடமிருந்து தப்பிக்கப் பார்க்கிறாள் என்று அந்த நிமிஷத்தில் அவனுக்குச் சந்தேகம் வந்தது. கூடவே, அவளை இன்று விடக்கூடாது என்பதில் அவனும் உறுதியாக இருந்தான்.

''ம்ஹூம்... நீங்க இப்பவே கண்டிப்பா வீட்டுக்கு வரணும். சீக்கிரமே திரும்பிட லாம். வாங்க... வீடும் பக்கத்தில்தான். அருள் நகர்ல... அஞ்சு நிமிஷத்தில் நடந்தே போயிடலாம். வாங்க ப்ளீஸ்'' என்று சொல் லிக் கொண்டே அவன் நகரவும் லலிதாவும் தயங்கியபடியே அவனுடன் சேர்ந்து நடந் தாள்.

அப்போது திருச்சியில் அவன் வீட்டின் மாடி போர்ஷனில் விஸ்வநாதனின் குடும் பம் குடியிருந்தது. எம்.ஏ. முடித்து விட்டு, ஒரு சிட்ஃபண்ட் கம்பெனியில் வேலை பார்த்தும், மாலைப் பொழுதில் ஒரு ட்யூஷன் சென்டரில் ட்யூஷன் சொல்லிக் கொடுத்தும் ஓரளவு சம்பாதித்துக் கொண் டிருந்தான் அவன். அதோடு ஒரு நிரந்தர மான நல்ல வேலைக்கு முயற்சி செய்து கொண்டும் இருந்தான்.

வீட்டுச் சொந்தக்காரரின் பெண் லலி தாவை, விஸ்வநாதனுக்குப் பிடித்துப் போய் விட்டது. அது இயல்புதான். அவ னுக்குப் பிடித்துப் போகும்படிதான் அவள் இருந்தாள்.

அவளிடம் தன்னை எப்படி வெளிப் படுத்திக் கொள்வது என்று தவித்துக் கொண் டும், தயங்கிக் கொண்டும் இருந்தான்.

ஒரு சாயங்காலம் துணிச்சலாக, தெருக் கோடிக் கோவிலில் வைத்து, அவளிடம் கடிதம் கொடுத்து விட்டு அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் இதை எதிர்பார்த்திருக்க வில்லை என்று மட்டும் அப்போது தெரிந் தது. அதற்கு மேல் அவள் என்ன உணர்ந் தாள் என்று அவனால் ஊகம் செய்ய முடிய வில்லை.

அவள் முன்பு நிற்க முடியாமல் வெளி யேறி விட்டான். உடனே வீட்டிற்குத் திரும் பிச் செல்லவும் யோசனையாக இருந்தது.

பஸ் ஏறி மலைக்கோட்டையில் இறங்கி னான். தெப்பக்குளம், சிங்காரத்தோப்பு என்று இலக்கின்றிச் சுற்றித் திரிந்தான். மனசு மட்டும் அவளையே சுற்றி வந்தது.

கடைசியில் விஸ்வநாதன் வீடு திரும் பிய போது மணி ஒன்பது இருக்கும். லலிதா வின் வீட்டில் விளக்குகள் எரிந்து கொண்டி ருந்தன. வீடு வழக்கம் போல் அமைதியாக இருந்தது.

சப்தம் எழாதபடி வாசல் கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான். வெளி மாடிப் படிகளில் ஏறி, தன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தான்.

உள்ளே நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவன் அப்பா அவனைப் பார்த்து விட்டு வேகமாக எழுந்து அவனிடம் வந்தார்.

''என்ன விஸ்வநாதா இப்படிப் பண்ணிட்டே!''

ஒன்றும் விளங்காமல் அவரைப் பார்த் தான்.

''நல்லா அழுத்தந்திருத்தமாகக் கேளுங்க. நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நீங்களே கேக்கறீங்களா? இல்ல நான் கேட் கட்டுமா?'' என்ற உரத்த குரல் அவனைத் திருப்பியது.

லலிதாவின் அப்பா நின்றிருந்தார். அவர் கையில் அவன் லலிதாவுக்கு எழுதிய கடிதம்.

''ஏம்பா... உனக்கு வேற வேலையே கிடையாதா? ஒரு பொண்ணு லட்சணமா இருந்தா உடனே லெட்டர் எழுதிக் கொடுத் துடறதா? இது மாதிரி எத்தனை பேருக்கு எழுதிக் கொடுத்திருக்கே?''

விஸ்வநாதன் வார்த்தைகளே இல்லா மல் மிரண்டு போய் நின்றான்.

''ரெண்டுங்கெட்டான் வயசு. ஏதோ தெரியாத்தனமா எழுதிட்டான். நான் அவ னுக்காக உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்க றேன்'' என்று இவன் அப்பா ஆரம்பித்த போது லலிதாவின் அப்பாவுக்கு ஆவேசமே வந்து விட்டது.

''தெரியாத்தனமா எழுதிட்டதாச் சொல் லாதீங்க. எல்லாம் திமிர். யார் என்ன செய்ய முடியும்கிற தைரியம்'' என்றவர் அவன் பக்கம் உக்கிரமாகத் திரும்பி னார்.

''என் வீட்டில் குடியிருந்துகிட்டு என் பொண்ணுக்கே லவ் லெட்டர் எழுதறியா நீ? அவ்வளவு திமிரா உனக்கு? என்ன யோக்யதையை வச்சுக்கிட்டு நீ லெட்டர் எழுதறே?''

விஸ்வநாதன் தலைகுனிந்தபடி நின்றான்.

''என் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கீங்க. இந்த வீட்டோட மதிப்பு என்னன்னு உனக்குத் தெரியுமா? இன்னிக்குத் தேதியில் ரெண்டு லட்சம் பெறும். என் பொண்ணுக்கு லவ் லெட்டர் எழுதற உனக்கு எத்தனை லட்சத்துக்குச் சொத்து இருக்குன்னு சொல்லேன் பார்ப்போம்!''

அவன் ஒடுங்கிப் போய் நின்றான்.

என்னவென்று பதில் சொல்ல?


''வசதியான குடும்பத்துப் பொண்ணாச்சே, வளைச்சுப் போட்டுகிட்டா லாபம்தானேன்னு பார்க்கறியா?''

இவனது மௌனம் அவரை இன்னும் கோபம் கொள்ளச் செய்து விட்டது.

''என்ன வேணும்?''

''ரெண்டு சப்பாத்தி, ரெண்டு ஆனியன் ரவா, காப்பி, ரெண்டு ரூபா டிப்ஸுக்கு எவ்வளவு நேரம் ஆட்டணும்னு தெரியணும்!''

- பி. ஜி. பி. இசக்கி



அப்பாவை ஆக்ரோஷமாகப் பார்த்தார்.

''கண்டவனும் லவ் லெட்டர் எழுதறதுக்குத்தான் நான் வீடு வாடகைக்கு விட்டிருக்கேனா? நீங்க எவ்வளவு சீக்கிரம் வீட்டைக் காலி பண்ணிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் காலி பண்ணிடுங்க'' என்று சொல்லி அவனது கடிதத்தைக் கிழித்து வீசி விட்டுப் படியிறங்கிப் போனார் அவர்.

அவர் போன பிறகும் கூட அவர் பேசிய பேச்சு மனசுக்குள் எதிரொலிப்பது போல இருந்தது அவனுக்கு. அதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், அடுத்த நாள் அவனுக்குத் தெரியவந்த உண்மைதான் அவனை வாட்டி வதைத்து விட்டது.

அவனது கடிதத்தை லலிதாவே தன் தந்தையிடம் கொடுத்து விட்டாள் என்பது தான் அது.

அதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''உமா... இவங்கதான் லலிதா. திருச்சியில் இவங்க வீட்டு மாடி போர்ஷனில்தான் கொஞ்ச நாள் குடியிருந்தோம். இவங்களைப் பற்றி ஒரு தடவை உன்கிட்டே சொல்லியிருக்கேனே, ஞாபகம் இருக்குமே உனக்கு'' என்று சொல்லி விட்டு லலிதாவின் பக்கம் திரும்பினான்.

''என் ஒய்ஃப் - பேர் உமா. இங்கே காலேஜ்ல லெக்சரரா இருக்காங்க.''

''வாங்க வாங்க'' என்று சொல்லிக் கொண்டே லலிதாவின் அருகில் போய் சகஜபாவமாக அமர்ந்து கொண்டாள் அவள்.

''இவங்களை எங்க பார்த்தீங்க?'' என்று கேட்டு அவனைப் பார்த்தாள் உமா.

''ராம் ஹாஸ்பிடல் பஸ் ஸ்டாப்பில் நின்னுகிட்டு இருந்தாங்க. இவங்க என்னைப் பார்க்கலை. நான்தான் முதல்ல பார்த்தேன்.''

''பார்த்ததும் உடனே அடையாளம் தெரிஞ்சுக்கிட்டீங்களா?''

விஸ்வநாதன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

''ம். இவங்கதான் அன்னிக்குப் பார்த்த மாதிரி அப்படியே இருக்காங்களே.''

அதைக் கேட்டு லலிதா ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

''உமா... உனக்கு டைம் ஆயிடுச்சு. காப்பி, டிபன் கொண்டு வரச் சொல்லிட்டு நீ கிளம்பு'' என்றான்.

''நான் ஈவ்னிங் காலேஜ் க்ளாஸ் எடுக்கப் போகணும். அதான் கிளம்பிக்கிட்டிருந்தேன். ஏழரை மணிக்கெல்லாம் வந்துடுவேன். நான் வர்ற வரைக்கும் பேசிக்கிட்டு இருங்க'' என்று லலிதாவைப் பார்த்துச் சொல்லி விட்டு எழுந்தாள் உமா.

அவள் சென்றதும் ''என்ன ரொம்ப ஆச்சரியப்பட்டுப் போய் உட்கார்ந்திருக்கீங்க போலிருக்கே'' என்று இயல்பாகப் பேச்சை ஆரம்பித்தான்.

அவள் ஒன்றும் பேசாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

தனது மோதிரங்களை அவள் பார்க்கட்டும் என்பதற்காகத் தலைமுடியை விரல்களால் ஸ்டைலாக நீவி விட்டுக் கொண்டான் விஸ்வநாதன்.

''நான் இன்னிக்கு இருக்கிற நிலைமை எனக்கே கூட ஆச்சரியமாத்தான் இருக்கு. உங்க வீட்டைக் காலி பண்ணின பிறகு திருவெறும்பூரில் கொஞ்ச நாள் குடியிருந்தோம். அப்பதான் சௌதி அரேபியா போகலாம்னு எண்ணமே வந்துச்சு. மதரோட ஜுவல்லையெல்லாம் வித்துப் பணம் தயார் பண்ணிட்டுக் கிளம்பிட்டேன். ஒன்பது வருஷம் போல அங்க சம்பாதிச்சு நல்லபடி சேர்த்தும் வச்சுக்கிட்டேன். அந்தப் பணத்தை வச்சுத்தான் இங்க வந்து பிஸினஸ் ஆரம்பிச்சேன். இது போல காலனியில் ப்ளாட்டுகளை வாங்கிப் போட்டு, கொஞ்ச நாள் கழிச்சு வித்தா நல்ல லாபம் கிடைக்



''பட்ஜெட்ல கலர் டீ. வி. விலை குறைஞ்சதுக்கு எல்லோருக்கும் சாக்லேட் வாங்கிக் கொடுத்திருக்கீங்களாமே?''

''ஆமாம் - பக்கத்து வீட்டுக்காரர் பட்ஜெட்டுக்கு முந்தின வாரம்தான் டீ. வி. வாங்கினார்!''

- எஸ். ப்ரியா

ரும்னு நம்பி இறங்கினேன். எதிர்பார்த்தது போலவே நல்ல லாபமும் கிடைச்சது. சில ப்ளாட்டுகளை வாங்கி, வீடாக் கட்டி சேல்ஸ் பண்ணிட்டேன். அதிலும் எக்கச்சக்கமா லாபம் கிடைச்சது. வாங்கின ப்ளாட்டுகளில் சொந்தத்துக்கு ஒரு ப்ளாட்டை வச்சுக்கிட்டு இந்த வீட்டைக் கட்டினேன். கட்டி முடிச்சப்ப ரெண்டே கால் லட்சம் அடக்கமாச்சு. இப்ப நாலு லட்சம் பெறும்.''

சற்று நிறுத்தி அவள் முகத்தை ஒருகணம் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான் விஸ்வநாதன்.

''போன ஏப்ரலில்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ரொம்ப வசதியான இடத்திலேருந்து எனக்குப் பெண் கொடுத்தாங்க. மெட்ராஸில் ரியல் எஸ்டேட் பிஸினஸ் பார்த்துக்கிட்டு இருக்கார் என் மாமனார். சீர்வரிசையெல்லாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே செஞ்சாங்க. இப்பக்கூட தலைதீபாவளிக்கு ஸோனி வி.ஸி.ஆர். ஒண்ணு வாங்கிக் கொடுத்தாங்க. அதோ இருக்கு பார்த்தீங்களா... அதுதான்'' என்று உற்சாகமாகக் கையை நீட்டிச் சுட்டிக் காட்டினான் விஸ்வநாதன்.

''வாங்க வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்.'' அவளை விடாப்பிடியாக அழைத்துக் கொண்டு போய்க் காட்டினான்.

சுவரில் அடிக்கப்பட்ட விலை உயர்ந்த பெயிண்ட் பற்றி விவரமாகச் சொன்னான். மொஸைக் தரைக்கு டிஸைன் தேர்வு செய்ய எடுத்துக் கொண்ட சிரத்தை பற்றிச் சிறிது நேரம் கூறினான்.

பிறகு ஃப்ரிட்ஜைக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டான். புதிய வாஷிங் மிஷினை வாங்கி ஆறு மாதங்கள் ஆகிவிட்ட பிறகும், அதைப் பயன்படுத்தும் விதம் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று பெருமையாக அலுத்துக் கொண்டான்.

வி.ஸி.ஆரை இரண்டு கைகளாலும் வாரி எடுத்து, அவள் முன் ஒரு குழந்தையைக் காட்டுவது போலக் காட்டினான்.

பீரோவைத் திறந்து நகைகள், பணம், பாங்க் பாஸ் புத்தகம், ஷேர் சர்டிபிகேட்ஸ் ஆகியவற்றைக் காட்டாததுதான் பாக்கி.

மீண்டும் ஹாலுக்கு வந்து உட்கார்ந்தார்கள்.

''நீங்க உங்களைப் பற்றி எதுவுமே சொல்லலையே. இப்ப எப்படி இருக்கீங்க? அப்பா எப்படி இருக்கார்?'' என்று சற்று அழுத்தம் கொடுத்துக் கேட்டு விட்டு அவளை அலட்சியமாகப் பார்த்தான்.

தணிந்த குரலில் தன் கதையைச் சொன்னாள். சினிமாக்களில் வருகிற மாதிரி நம்ப முடியாத கதையாக அது இருந்தது: அவளுடைய அப்பாவுக்குப் பக்கவாதம் வந்து, கையும் காலும் விளங்காமல் போய் பேசக் கூட முடியாமல் நான்கு வருஷங்கள் படுக்கையில் கிடந்ததை விவரித்தாள். அவருக்கு ஆன மருத்துவச் செலவுகளுக்குக் கடன் வாங்கி,அதைத் தீர்க்க வீட்டை விற்று... அப்படியும் அவர் உயிர் பிழைக்காமல் போனதை அவள் கூறக் கேட்டு அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

அடுத்ததாக அவள் சொன்னது இன்னும் திகைப்பு ஏற்படுத்தியது.

''அன்னிக்கு உங்க லெட்டரை எங்கப்பாகிட்ட நான் காட்டினது தப்புதான். நீங்க என்னிடம் லெட்டரை நீட்டினப்பவே அது என்ன லெட்டர்னு எனக்குத் தெரிஞ்சுடுச்சு. அதில் என்ன எழுதியிருப்பீங்கன்னும் எனக்குத் தெரியும். அப்பவே அதை வாங்காம தவிர்த்திருக்கலாம். அல்லது அதை வாங்கிக் கிழிச்சுப் போட்டுட்டுப் போயிருக்கலாம். நீங்க ரொம்ப கண்ணியமாத்தான் நடந்துகிட்டீங்க. லெட்டரையும் கண்ணியமான முறையில்தான் எழுதியிருந்தீங்க. நான்தான் ரொம்ப இன்ஸலண்டா நடந்துகிட்டேன். நீங்க போன கொஞ்ச நாளைக்குப் பிறகு என் மனசே என்னை உறுத்த ஆரம்பிச்சுடுச்சு...''

விஸ்வநாதன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாத சங்கடத்தோடு தரையையே பார்த்துக் கொண்டிருந்தான். மௌனத்தைத் தத்து எடுத்துக் கொண்டு விட்டது போல ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தான். 'இத்தனை நேரம் கண்ணியமாகவா நடந்து கொண்டோம்...?' என்ற குற்ற வினா அவனைக் குடைய ஆரம்பித்தது.

அவள் போன பிறகும் கூட, வெகு நேரம் வரை அந்த மன உறுத்தலில் இருந்து விடுபட முடியாமலே உட்கார்ந்திருந்தான்.

11. நாகலோகத்துப் பைங்கிளி



விஷ்வக்சேனன்

இரவு நன்றாக ஏறத்துவங்கி விட்டதால் மாளிகையெங்கும் ஏற்றப்பட்ட விளக்குகள் கடற்படைத் தலைவன் கங்காதரனின் அந்தச் சிறு மாளிகையைப் பிரகாசமாக ஒளிரச் செய்தன.

முதல் ஜாம முடிவில் அறைக்குள் வந்து வணங்கிய வீரனொருவன், ''பிரபு, படைத் தலைவர் தங்களை அழைத்து வரச் சொன்னார்'' என்றான்.

படைத் தலைவனது தீர்மானத்தை அறிந்து கொள்ளும் ஆவல் அதிகமாக இருந்ததால் உடனே எழுந்து அந்த வீரனைப் பின்தொடர்ந்தான் சமுத்திரபந்தன்.

அவன் உள்ளே நுழைந்த சந்தர்ப்பத்தில் உணவு அருந்த அப்பொழுதே அமர்ந்திருந்த படைத்தலைவன், சமுத்திரபந்தனுக்கும் உணவு கொண்டு வரப் பணித்தான்.

பெரும் வெள்ளித் தட்டுக்களில் கொண்டு வரப்பட்ட அந்த உணவு ஐந்தாறு வகையான காய்கறிகளுடனும், மற்ற உணவுப் பொருட்களுடனும் சிறிய விருந்தாகவே இருந்தது.

உணவை முடிக்கும் வரையில் சாதாரணமாகப் பொது விஷயங்களையும், விழிஞத்தின் படைபலம் பற்றிய விஷயங்களையும் படைத்தலைவன் பேச, சமுத்திரபந்தனும் குறுக்கிடாதிருந்தான். ஆனால் உணவை முடித்துக் கொண்டு எழுந்தபின் ''தலைவரே, பாண்டியரைப் பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறீர்கள்?'' என்று வினவினான்.

படைத் தலைவன் பதில் உடனே வந்தது. ''மாறவர்மனுக்கு உதவுவதாக ஏற்கெனவே வாக்களித்திருக்கிறேன்.'' அதை நிறைவேற்றுவதென்றும் தீர்மானித்திருக்கிறேன், ''ஆனால்...''

''ஆனால் என்ன தலைவரே?''

''முதலில் நான் அனுப்ப நினைத்ததில் பாதிப் படை மட்டுமே அனுப்புவதாக இருக்கிறேன். மாறவர்மன் வெற்றி பெறும் வாய்ப்பு நிச்சயமாகத் தெரிந்த பின்வர் மீதிப் படையை அனுப்பலாமென்று இருக்கிறேன்.''

''அப்படி அவன் வெற்றியடைந்தாலும் அவன் மதுரை அரியணையில் அமர ஒரு தடைதான் புதிதாக ஏற்பட்டுள்ளதே'' என்றான் சமுத்திரபந்தன்.

படைத் தலைவனது முகத்தில் குரூரச் சாயை மெல்லப் பரவியது.

''அந்தத் தடையை நீக்க ஒரு திட்டம் வகுத்திருக்கிறேன்'' அவன் குரலும் தாழ்ந்து ஒலித்தது.


மன்னன்
மகள்

''என்ன திட்டம்?''

''நாம் நேரிடையாகக் காஞ்சி அரண்மனையில் நுழைவது சிரமம். பாண்டியனுக்கும் சாமர்த்தியம் அத்தனை கிடையாது. எனவே...'' என்று இழுத்த படைத்தலைவன் தன் மடியிலிருந்து ஓலையொன்றை எடுத்து சமுத்திரபந்தனிடம் நீட்டினான்.

ஓலை சேரன் தலைநகரில் வந்து தங்கியிருக்கும் ஈழத்து தண்டநாயகன் வீரபாகுவுக்கு எழுதப்பட்டிருந்தது. ''ஈழத்து இளவரசி பாண்டிய அரியணையில் அமர வேண்டுமானால், மாறவர்மன் அரசைப் பெற வேண்டும். அவன் அரசு பெறத் தடையாக முளைத்திருக்கும் பாண்டியன் மகளை அப்புறப்படுத்த வேண்டும். இது வரை அப்படியொருத்தி இருப்பதை அறியாத பாண்டிய மக்கள் விஷயத்தைப் புரிந்து கொள்ளுமுன் இதைச் செய்து முடிக்க வேண்டும். சேரர் இதில் நேரிடையாகத் தலையிட இயலாது. எனவே அந்தப் பொறுப்பை ஈழத்துத் தண்டநாயகர் ஏற்க வேண்டும்'' என்றிருந்தது அந்த ஓலையில்.

ஓலையைப் படித்த சமுத்திரபந்தன் திகைத்து நின்றான். அவன் திகைப்பு நீங்குமுன் படைத் தலைவன் உத்தரவு பிறந்தது!

''சமுத்திரபந்தா, இந்த ஓலையை எடுத்துக் கொண்டு இன்றிரவே நீ தலைநகருக்குச் செல். மன்னருக்கும் ஒரு ஓலை வைத்திருக்கிறேன். மன்னரிடமும், ஈழத்துத் தண்டநாயகரிடமும் இதை நீ நேரிடையாகச் சேர்க்க வேண்டும்'' என்று உத்தரவிட்டான் படைத்தலைவன்.

சற்று நேரம் தீவிர யோசனையில் இறங்கிய சமுத்திரபந்தன், ''படைத்தலைவரே, ஓலையைக் கொடுத்தபின் நான் வேங்கிநாட்டுக்குக் கிளம்பலாமல்லவா?'' என்றான்.

படைத்தலைவன் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

''வேங்கி நாட்டிற்கா? எதற்கு?''

''படைத்தலைவரே, நான் காஞ்சியிலிருந்து கிளம்பும் போது வாணிபம் தொடர்பாக வேங்கிக்குச் செல்வதாகத்தான் கூறிவிட்டுப் புறப்பட்டேன். சற்று வடக்கே பயணம் செய்த பிறகே திரும்பி இங்கே வந்தேன். எனவே நான் காஞ்சிக்குத் திரும்பும் போது வேங்கியிலிருந்து திரும்பும் வணிகருடன் திரும்ப வேண்டும்'' என்று விளக்கினான் சமுத்திரபந்தன்.

சோழன் கண்களில் மண்ணைத் தூவும் சமுத்திரபந்தனின் செயலைக் கண்டு பலமாகச் சிரித்து, சிலாகித்த படைத்தலைவன், அன்றிரவே சமுத்திரபந்தனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

தற்போது சின்னக்கடா என்று அழைக்கப்படுவதும் கொல்லத்தின் பெரிய கடை வீதி என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டதுமான அந்த வணிகர் வீதி, நடந்து கொண்டிருந்த வியாபாரக் கூச்சலாலும் பல நாட்டவர் பல்வேறு மொழிகளில் பேசியதாலும் பெரும் இரைச்சலுடன் விளங்கியது.

சீனத்து அலங்காரப் பொருட்களையும், பட்டுத் துணிகளையும், யவன நாட்டு ஆயுதங்களையும், பொருட்களையும், பாரசீகத்து விரிப்புக்களையும், பாண்டிய நாட்டின் முத்துக்களையும், சேர நாட்டின் தந்தப் பொருட்களையும் குவித்து வைத்திருந்த அந்த வீதியில் மக்கள் நெரிசலும் அதிகமாகவே இருந்தது.

குள்ளமான உருவத்துடனும் சப்பையான மூக்குடனும் உலவிய சீனரும், ஆஜானுபாகுவான சிவந்த நிறத்துடன் உலவிய யவனரும், நீண்ட சராய்களுடனும் சிவந்த விழிகளுடனும் உலவிய அராபிய அடிமைகளும் சேரநாட்டு மக்களுடன் கலந்து கதம்பமாகக் காணப்பட்டது அந்த வணிகர் வீதி. அவர்கள் தயங்காமல் அள்ளிக் கொடுத்த தங்கம் சேரநாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றதால் அந்த வீதியில் இரவு முழுதும் வியாபாரம் தொடர அனுமதித்திருந்தான் சேரலாதன்.

வணிக வீதியின் முகப்பில் புரவி மீதமர்ந்து அந்த வீதியை நோக்கி பிரமித்து நின்றிருந்தான் சமுத்திரபந்தன். சுங்கம் குறைவாக வசூலிக்கப்பட்டதால் அங்கு நடந்த வியாபாரம் பெரும் செல்வங்களைச் சேர நாட்டுக்கு அளிப்பதை உணர்ந்த சமுத்திரபந்தன் நெரிசல் மிகுந்த அந்த வீதியின் வழியாக மெதுவாகவே தன் புரவியை நடத்தினான்.

அந்த வீதியைக் கடந்ததும் தொடர்ந்த பாதை, சிறு மலையின் உச்சியிலமைந்திருந்த அரண்மனையை நோக்கிச் சென்றது. மேலே தெரிந்த சிறிய கோட்டையையும், பந்தங்களையும், உலவிய வீரர்களையும் கவனித்தபடியே கோட்டையை நோக்கிச் சென்ற பாதையில் புரவியைச் செலுத்தினான் சமுத்திரபந்தன்.

பாதையின் துவக்கத்திலேயே அவனது புரவி மறிக்கப்பட்டது. சமுத்திரபந்தன் கரத்தில் ஒளிவிட்ட முத்திரை மோதிரமும் படைத்தலைவன் கங்காதரனது ஓலையும்



லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்ட் சென்ற போது பத்திரிகை நிருபர் ஒருவர், ''அயூப்கான் மிகவும் உயரம். நீங்கள் ரொம்பக் குள்ளம்'' என்று வேடிக்கையாகக் கூறினார்.

''இருக்கலாம். அதனால் எனக்கு நன்மை தான். நான் மற்றவர்களிடம் பேசும் போது நிமிர்ந்து இருப்பேன். ஆனால் மற்றவர்கள் என்னிடம் பேசும் போது தலைகுனிய வேண்டும்'' என்றார் சாஸ்திரி சிரித்துக் கொண்டே!

- ஜி. இந்திரா

அவனை ராஜமரியாதையுடன் கோட்டைக்குச் செல்ல வழியமைத்துத் தரவே அடுத்த ஒரு நாழிகைப் பொழுதில் கோட்டையின் வாயிலில் இருந்தான் சமுத்திரபந்தன்.

அரண்மனைக் காரியஸ்தரால் விசாரிக்கப்பட்ட சமுத்திரபந்தன், விருந்தினர் இல்லத்தில் சகல மரியாதைகளுடனும் தங்க வைக்கப்பட்டான். அடுத்த நாள் காலையில் மன்னர் அவனைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாகக் கூறிய ஸ்தானிகர் அவனை விசாலமான அறையொன்றில் விட்டுச் சென்றார்.

கொல்லத்து அரண்மனையில் உதய தாரைகள் ஒலிக்கு முன்பே எழுந்து விட்ட சமுத்திரபந்தன், சாளரத்தின் வழியே தொலைவில் தெரிந்த அஷ்டமுடி ஏரியையும் அதைத் தொடர்ந்து விரிந்த மலைப் பகுதிகளையும் ரசித்தபடி நின்றான். சற்று நேரத்திற்கெல்லாம் அவனை அழைத்துச் சென்ற ஸ்தானிகர் அழகான சித்திர மண்டபமொன்றில் அவனை இருக்கச் செய்து பிரிந்தார்.

சேரலாதன் தனது அந்தரங்க ஒற்றர்களைச் சந்திக்கும் அந்த அறையின் தூண்களையும் அவற்றில் தெரிந்த சிற்ப வேலைப்பாடுகளையும் சமுத்திரபந்தன் ரசித்து நின்றான்.

''சமுத்திரபந்தரது வருகை நல்ல செய்திகளுடன் இருக்கும் என நம்புகிறேன்'' என்றபடியே உள்ளே வந்து நின்ற மனிதரைத் திரும்பிப் பார்த்த சமுத்திரபந்தன், அவரது நடுத்தர வயதையும், பட்டாடைகளையும் பரிவட்டம் கட்டியது போலிருந்த பட்டு சரிகையிட்ட துணியையும் கண்டு புதிதாகப் பொறுப்பேற்றதாகத்தான் கேள்விப்பட்டிருந்த அமைச்சர் இவராகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அமைச்சரைத் தலைதாழ்த்தி வணங்கவும் செய்தான்.

''சமுத்திரபந்தரே, இதுவரை நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையே?'' என்று வினவினார் அமைச்சர்.

''நான் சேரலாதர் தாணுரவியால் நியமிக்கப்பட்டவன். தாங்கள் பொறுப்பேற்று ஓராண்டுதானே ஆகிறது? மேலும் நான் நேரிடையாகச் செய்திகளை அனுப்புவதில்லை'' என்ற சமுத்திரபந்தன் தனது முத்திரை மோதிரத்தை நீட்டினான்.

அதைப் பார்த்துத் தலையசைத்த அமைச்சர், ''மன்னர் வரும் சமயமாகி விட்டது. செய்திகளை நீங்கள் நேரிடையாகவே கூறலாம்'' என்றார்.

முன்னே இரு மெய்க்காவலர்கள் வர, பின்னால் உள்ளே நுழைந்த மன்னனைக் கண்ட சமுத்திரபந்தனது முகத்தில் வியப்பு படர்ந்தது.

சேரலாதன் தாணுரவிக்கு நேர் வாரிசு இல்லாமற்போனதால் தௌகித்திர உரிமையில் அரியணை ஏறியிருந்த பாஸ்கரவர்மன், வயதில் மிக இளையவனாக விளங்கினான். அவன் முகத்தில் அப்பொழுதுதான் மீசை அரும்பு கட்டத் தொடங்கியிருந்தது. இத்தனை இளவயதில் மன்னனாகி விட்ட அவன் அதிர்ஷ்டத்தை வியந்த சமுத்திரபந்தன் அவனை வணங்கி நிமிர்ந்தான்.

மன்னனுக்கு அதிக அரசியல் அனுபவமோ, தெளிந்த சிந்தனையோ கிடையாது என்பதை அவன் விழிகளே உணர்த்தின. அவன் தேகம் உரமற்று, கடுமையான பணிகள், பயிற்சிகள் எதிலும் அவன் ஈடுபட்டதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியது. அரசாங்க சம்பந்தப்பட்ட முடிவுகளை அவன் சுயமாக எடுப்பதில்லையென்பதையும் அமைச்சர் எடுக்கும் முடிவுகளே தீர்மானமானவை என்பதையும் அடுத்து நடந்த உரையாடல்கள் மூலம் புரிந்து கொண்டான் சமுத்திரபந்தன்.

படைத்தலைவனது ஓலையைப் பெற்றுக் கொண்ட மன்னன், அதைப் பிரித்துக் கூடப் பாராது அமைச்சரிடம் கொடுத்தான்.

ஓலையைப் பிரித்துப் படித்த அமைச்சர், ''மன்னா, பாண்டியருக்கு உதவ நாம் தீர்மானித்ததில் பாதிப் படையை அனுப்பினால் போதுமானது, விவரங்களை நேரில் வந்து விளக்குவதாக எழுதியிருக்கிறார்'' என்று சுருக்கமாக ஓலையின் சாராம்சத்தைக் கூறினார்.



ஜப்பான் நாட்டில் ஓட்டல்களில் சாப்பாட்டுத் தட்டுகளில் எஞ்சிய உணவுப் பொருட்களை வீணாக்காமல் சேகரித்துக் கோழித் தீவனம் தயாரிக்கிறார்கள்.

– ஆர். கே. லிங்கேசன்

''படைத்தலைவர் முன்பு கேட்டதற்கும் தற்போது எழுதியிருப்பதற்கும் வித்தியாசமிருக்கிறதே, அமைச்சரே?''

''ஆம் மன்னா, ஆனால் அவர் நேரில் வந்தபின் கலந்தாலோசித்து முடிவெடுக்கலாம்.''

சரியென்பதற்கடையாளமாகத் தலையசைத்த மன்னன், ''சமுத்திரபந்தா, நீ மீண்டும் காஞ்சி சென்று படைத் தலைவருக்கு வேண்டிய செய்திகளை அனுப்பும் பணியைத் தொடரலாம்'' என்றான்.

மன்னனிடமும் அமைச்சரிடமும் விடைபெற்றுக் கொண்ட சமுத்திரபந்தன் மீண்டும் விருந்தினர் இல்லத்திற்குத் திரும்பினான். அவன் மனதில் அதுவரை தான்

மேற்கொண்ட பணி திருப்திகரமாகவே நடந்ததால் பெரும் சந்துஷ்டி நிலவியது. எனினும் தான் மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் சிந்தித்த வாறு சாளரத்தின் வழியே அஷ்டமுடி ஏரி யையும் மலைப்பகுதியில் இயற்கை அள்ளிக் குவித்திருந்த அழகையும் பார்த்த படி நின்ற அவன் செவிகளில் விழுந்தது ஜல்ஜல் என்னும் இனிய ஒலி.

திரும்பிய சமுத்திரபந்தன் பிரமித்து நின்றான். அறைவாசலில் நாகலோகத்துக் கன்னிகை போல் நின்றிருந்தாள் ஒரு பெண். இருபது வயதுக்கு மேலிருக்க முடியாத அவள், சுத்தமான வானத்து நிறத்தில் சேலை யொன்றைச் சுற்றியிருந்தாள். சுற்றியிருந் தாள் என்பதே பொருத்தமாகத் தோன்றியது சமுத்திரபந்தனுக்கு. விநோதமான முறை யில் அவள் தேகத்தைத் தழுவி நின்ற அந்த நீலவண்ணப் பட்டுச் சேலை வலது தோளைச் சுற்றி இடையை வளைத்துச் செருகப்பட்டிருந்தது.

சிறு சிறு சுருள்களாக விரிந்த அவள் குழல்களை ஒருபுறமாகத் தூக்கிக் கட்டுப் படுத்த முயன்ற பட்டுக்கயிறு தன் பணியைச் செவ்வனே செய்ய இயலாமல் தோற்றுப் போயிருந்தது. அதனால் அலை அலை யாகப் பிரிந்த குழல்கள் தோளின் மீது எட்டிப் பார்த்தும் இல்லவே இல்லை யென்றிருந்த இடையைத் தாண்டியும் நீண்டி ருந்தது.

முழுதுமாகத் திறந்து விடப்பட்டிருந்த இடது தோள் பகுதி தந்தத்தைத் தோற்கடிக் கும் வழவழப்புடன் திண்மையாக இருந் தது. முழங்கைக்கு மேல் அணிந்திருந்த வங்கியில் பதிக்கப்பட்டிருந்த கற்களும் நீல நிறமாக ஒரு மயக்கத்தை ஊட்டின. வில் லென வளைந்த புருவங்களின் கீழ் மாவடு பிளந்தாற்போல் சிறிதாக இருந்தாலும், கூர்மையுடன் பிரகாசித்த கண்கள் சமுத்திர பந்தனை உற்றுநோக்கிக் கொண்டிருந்தன.

ஒரே பிடியில் வளைத்து விடலாமென இருந்த இடையைச் சுற்றியிருந்த ஒட்டி யாணம் சமுத்திரபந்தனை இம்சைப்படுத்தி யது. அதன் முகப்பில் தெரிந்த யாளிச் சின் னம் அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவளென் பதைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தது.

இரு கரங்களையும் குவித்த அந்தப் பெண் ''சமுத்திரபந்தருக்கு வணக்கம்'' என்றாள். கிள்ளைக் குரலில் அவள் பேசிய தமிழ், சற்று மாறுபட்டிருந்தாலும் உதடுகள் அசைந்த விதமும், உச்சரித்த விதமும் மிக இன்பமாக இருந்தன. அவள் இதழ்களில் விரிந்த அந்த முறுவலுக்கு எதையும் பரிசாக அளித்து விடலாம் என்று எண்ணினான் சமுத்திரபந்தன்.

''ஈழத்து இளவரசியின் வரவு நல்வர வாகட்டும்'' என்றான்.

அவளது சிறிய விழிகளில் வியப்பு ஜொலித்தது. ''நான் ஈழத்து இளவரசியென் பது எப்படி தெரிந்தது?'' என்ற கேள்வியும் பிறந்தது அவளிடமிருந்து.

''நான் தலைநகருக்கு வந்த முப்பது நாழிகைக்குள் நான் வந்திருக்கும் கார ணத்தை அக்கறையுடன் தெரிந்து கொண்டு, என் பெயரையும் தெரிந்து கொண்டுள்ள உங்களை எனக்கு எப்படி புரிந்து கொள் ளாதிருக்க முடியும்?'' என்று எதிர்க் கேள்வி கேட்ட சமுத்திரபந்தன், அவள் அமர ஆசன மொன்றையும் அறையின் நடுவே நகர்த்தி வைத்தான்.

ஆசனத்திலமர்ந்து அவனைப் புன் முறுவலுடன் ஏறிட்ட இளவரசி, ''காஞ்சி ஒற்றரிடம் நல்ல கவனிப்பு இருக்கிறது என் பதை வாயிலிலேயே கண்டேன்'' என்றாள்.

தான் பிரமித்து அவளை உற்றுப் பார்த்த படி நின்றதை அவள் குறிப்பிடுகிறாள் என் பதைப் புரிந்து கொண்ட சமுத்திரபந்தனது முதிர்ந்த முகத்திலும் சற்று வெட்கம் படர்ந் தது.

''குற்றம் என்னுடையதல்ல இளவரசி'' என்றான் சமுத்திரபந்தன்.

''பின் யாருடையது?''

''வானத்திலிருந்து தவறிப் போய் மண்ணில் இறங்கி விட்ட தேவதை போல ஒரு பெண் திடீரென்று தோன்றினால் யாருக் கும் பிரமிப்பு ஏற்படுவது சகஜம்தானே?''

அவன், அவளைக் கண்டு பிரமித்ததை நேரிடையாகவே ஒப்புக் கொண்டவிதம் இளவரசியைச் சற்று சங்கடத்தில் ஆழ்த் தவே, தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

''அவள் வானத்திலிருந்து வரவில்லை. ஈழத்திலிருந்து எனது மரக்கலத்தில் வந்தி ருக்கிறாள்'' என்று கரகரத்த குரலொன்று சற்று அதட்டலாக ஒலித்தது.

வாயிற்படியின் உயரம் போதாமல் தலையைச் சற்றுக் குனிந்து தான் நுழைய வேண்டிய அளவில் ஆஜானுபாகுவான தோற்றத்துடனும், பாதம் வரை நீண்ட பெரும் வாளுடனும் முன்னேறி வந்து கொண்டிருந்தான் ஈழத்துத் தண்டநாயகன் வீரபாகு.

(தொடரும்)

'மணிக்குயில்' விடைகள் :

1. முட்டுக்கட்டையாக ஒரு பிரச்னை
2. இது உங்களுக்கே தெரியும்.
3. காட்டிலாகா அதிகாரி.
4. அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு பாட்டு!
5. காமெரா.
6. ரொம்பப் பழக

சாவி

வார இதழ்

ரூபாய் பதினைந்தாயிரம் பரிசு!

சாவி வார இதழ் பதினைந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு வழங்கும் சிறப்புப் பரிசுகள்

சாவி இதழின் 15ம் ஆண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு வாசகர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப் போகிறோம்.

முதல் பரிசு: மூன்று பவுன் தங்கச் சங்கிலி

இரண்டாம் பரிசு: ரூபாய் நாலாயிரம் மதிப்புள்ள வெள்ளித் தாம்பாளம்.

இந்தப் பரிசுகளைப் பெற என்ன செய்ய வேண்டும்?

சாவி வார இதழுக்கு, உள்நாட்டில் வசிப்பவராக இருந்தால் ரூபாய் 1000/- ஆயுள் சந்தாவாகச் செலுத்த வேண்டும். வெளிநாட்டில் வசிப்பவராக இருந்தால் ஆயுள் சந்தாவாக ரூ.3,000/-ம் அனுப்ப வேண்டும்.

சந்தாத் தொகையை 'சாவி பப்ளிகேஷன்ஸ்' என்ற பெயரில் டிமாண்ட் டிராஃப்ட் எடுத்து அனுப்பி வைக்கவும்.

இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர விரும்புகிறவர்கள், இப்போதிலிருந்து 1994ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதிவரை ஆயுள் சந்தா அனுப்பி வைக்கலாம்.

சாவி இதழின் 15ம் ஆண்டு நிறைவின் போது ஆயுள் சந்தா அங்கத்தினர்களின் பெயர்களை விழா மேடையில் குலுக்கிப் போட்டு, பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அங்கேயே அறிவிக்கப்பட்டு, பரிசுகளை விழாத் தலைவரே வழங்குவார்.

> ஆயுள் சந்தாவை மொத்தமாகச் செலுத்த முடியாத வாசகர்கள், மாதம் ரூ.100/- வீதம் பத்து மாதங்கள் அனுப்பி வைக்கலாம்.
>
> — ஆசிரியர்

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி, சாவி பப்ளிகேஷன்ஸ்,
ஏ.இ.ப்ளாக், 113, இரண்டாம் தெரு, அண்ணாநகர், சென்னை-40

நீங்கள் கேட்டவை
- தராசு


நெருப்பை நெருப்பால்...


'கருணாநிதியின் சதி'


மிரட்டல்!

● க. சாந்தி, காட்பாடி.

? எல்லாத் துறைகளிலும் வாரிசுகள் புகுத்தப்படும் போது அரசியல் வாரிசுகள் மட்டும் குறைகூறப்படுவது ஏன்?

! ஜனநாயகத்தில் அரசியல் கட்சியோ ஆட்சியோ தனியாரின் சொத்து அல்ல என்பதால்தான். தகுதி அடிப்படையில் வாரிசு ஜனநாயக முறைப்படி உருவானால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். புகுத்தப்படும் போது அல்லது திணிக்கப்படும் போது எதிர்ப்பு எழுவது இயற்கை.

● ரா. நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.

? ''ஜெயலலிதா ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த கருணாநிதி சதி செய்கிறார்'' என அமைச்சர் மதுசூதனன் குற்றம்சாட்டியிருக்கிறாரே?''

! காங்கிரஸையும் சு. சுவாமியையும் மட்டுமே திட்டிக் கொண்டிருந்தால் அ.தி.மு.க.வுக்குத் தி.மு.க. என்று ஒன்று இருப்பதே மறந்து போய் விடப் போகிறதே என்ற கரிசனத்தில் நினைவூட்டியிருக்கிறார்.

● கலை, இரணியல்.

? ''அனைத்துக் கல்விக் கூடங்களிலும் பெண்களுக்குத் தற்காப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்'' என்று நாகர்கோவிலில் மகளிர் கருத்தரங்கு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதே?

! தீர்மானம் நல்லதே. அதற்குச் செயலுருக் கொடுப்பதும் நல்லதுதான். ஆனால் இத்தகைய தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி விட்டதே, அதுதான் பரிதாபம்!

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? தன் கட்சிப் பிரமுகர்களைப் போல காங்கிரஸ் கட்சியினரையும் மிரட்டத் தொடங்கியிருக்கும் ஜெயலலிதாவின் போக்கு...?

! பில் கிளின்டனையும் அவரது கட்சிக்காரர்களையும் மிரட்ட வேண்டியதுதான் பாக்கி!

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? மன்னார்குடி சகோதரி கேள்விக்கு இறைவனுக்கு நன்றி தெரிவித்துப் பதிலளித்திருக்கிறீர்களே? நியாயமாக விமானியின் திறமைக்கல்லவா நன்றி கூறியிருக்க வேண்டும்?

! விமானியின் திறமையைக் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்றாலும் அதற்கும் மேல் ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது. அதனால்தான் அந்த விமானியே இறைவனுக்கு நன்றி செலுத்தியிருக்கிறார். விமானம் அந்த அளவுக்குப் பழுதடைந்து விட்டிருந்தது.

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? ஓட்டுனர், நடத்துனர் பணிக்குப் பெண்களை நியமனம் செய்யக் கோரி பெண்கள் போராட்டம் நடத்தியது குறித்து?

! இதற்குப் போராட்டம் நடத்த வேண்டியிருப்பதுதான் ஆச்சர்யம். அவர்களுக்குச் சம உரிமை நிச்சயம் உண்டு. மேலும் பெண்களும் இப்பணிகளில் ஈடுபட்டால் பயணிகள் இன்னும் கொஞ்சம் கௌரவமாக நடத்தப்படுவார்கள் என்று கருதவும் இடமிருக்கிறது.

● மணியன், திருமருகல்.

? ஒவ்வொரு நாளும் நாள் காட்டியைக் கிழிக்கும் போது என்ன நினைப்பீர்கள்?

! இறைவனை. அதிலும் கொஞ்சம் 'வெரைட்டி' வேண்டுமென்றால் அன்று எந்த ஊரில் எந்த இறைவனுக்கு உற்சவம் அல்லது தேர்த் திருவிழா என்று போட்டிருக்கும். அந்த மூர்த்தத்தை இதயத்தில் இருத்தி வணங்கலாம்.

பீட்டர் அல்ஃபோன்ஸ் தாக்குதலுக்கு உள்ளானது பற்றி...?


தாக்குதலுக்கு உள்ளாகி...

● ஆர். கே. மதியழகன், கரடிப்பட்டி. ❐

? ஜாதி அடிப்படையில் தோன்றிய பாட்டாளி மக்கள் கட்சி, மதவாத கட்சித் தலைவர் அத்வானிக்குக் கறுப்புக் கொடி காட்டுகிறதே!

! மரங்களை வெட்டுவதை விட மருநிலை இடிப்பது மோசம் என்று பா.ம.க. எண்ணுகிறது போலும்!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? "எந்தத் தியசக்தியாலும் அ.தி.மு.க. ஆட்சியை அசைக்க முடியாது" என்கிறாரே எஸ்.டி.எஸ்.?

! நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது என்பது உண்மைதான்.

● கண்ணம்மா இராமசாமி, தீரன்நகர்.

? அன்று "He (Rajaji) took a paternal care in training me in the art of administration and also in the procedures of the Assembly" - சி. சுப்பிரமணியம். இன்று?

! கூச்சல் - குழப்பம்; சம்பந்தமில்லாத பேச்சு; தரையில் குறுக்கே படுத்துக் கொள்வது; முஷ்டி காட்டுவது; 'ஷட் அப்' என்று அதட்டுவது; முதுகு தட்டுவது, ஒழிக கோஷம் போடுவது; தலைப்பு பிடித்து இழுப்பது; வேட்டி உருவுவது; குண்டு கட்டாக வெளியேற்றப்படுவது என்று எத்தனையோ கலைகளை இன்றைக்கும் கற்றுக் கொண்டு அரங்கேற்றுகிறார்களே!

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? தி.மு.க.விலும் உட்பூசல் வெடிக்கக் காரணம்?

! அதென்னங்க 'விலும்'? எப்பவுமே இருந்ததுதான். அப்ப ஈன வெடி; இப்ப யானை வெடி. அவ்வளோதான்!

● ப. ரவிகுமார், திருத்துறைப்பூண்டி.

? சமீபத்தில் படித்த புத்தகங்களில் மனநிறைவு தந்தது?

! 'தேர்'. இரா. முருகனின் சிறு கதைத் தொகுதி. மூன்று நாலு வார்த்தைகளுக்கு மிகாத வாக்கியங்கள். வரிகளின் இடைவெளியில் தொக்கி நிற்கும் அர்த்தங்கள். ஜீவனுள்ள நடை. தமிழ் சிறுகதை இலக்கியத்துக்குச் சமீபத்தில் சேர்ந்த சொத்து.

● முகமது மீரான், செங்குன்றம்.

? ஜனாதிபதி விருது பெறும் படம், டைரக்டர், நடிகர், நடிகையைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் ஜெமினி கணேசன் நியமிக்கப்பட்டிருக்கிறாரே? தமிழ் சினிமாவுக்கு நல்ல காலம் பிறக்குமா?

! தேர்வுக் குழுவில் ஜெமினி இடம் பெற்றதால் தமிழ் சினிமா துறைக்கு விருதுகள் கிடைத்து விடாது. ஆனால் நியாயமாகக் கிடைக்க வேண்டிய விருது கிடைக்காமல் போவதை எதிர்த்து அவரால் வாதாட முடியும்.

● மு. எத்திராஜ், குடியாத்தம்.

? பீட்டர் அல்போன்ஸ் தாக்குதலுக்கு உள்ளானது பற்றி...?

! அதிர்ச்சி அளிக்கிற, கண்டனத்துக்குரிய நிகழ்ச்சி. ஆனால் அது பற்றி சட்டசபையில் உரிமைப் பிரச்னை எழுப்ப முயற்சித்த போது, முதல்வர் கௌரவமாக வருத்தம் தெரிவித்ததையும் குறிப்பிட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று கூறியதையும் கண்ணியமாக ஏற்றுக் கொண்டிருக்கலாம். அவ்வாறின்றி, பிரச்னையைப் பூதாகாரமாக்கி அவை நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டையும் போடப் போக, 'ஜெ' இப்போது அந்தத் தாக்குதல் சம்பவமே திட்டமிட்டு அரங்கேற்றிய நாடகம் என்று வாதாடுகிறார் பாருங்கள்! எதிலும் ஒரு நிதானம் காட்டி அளவோடு செயல்படுவதே உசிதம்.



★ தேர்வுக் குழுவில்...



★ வெள்ளி வெற்றி!



★ சாதனை விருது

● எஸ். பாண்டியராஜ், காரைக்குடி.

? 'ஜெ' ஆட்சியில் தமிழ்நாடு எப்படி உள்ளது?

! பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுவது போல்தான் பேசினார் நெடுஞ்செழியன், Industrial Economist பத்திரிகையின் வெள்ளி விழா மேடையில். தொழில் வளப்பெருக்கம் பற்றி புள்ளி விவரங்களை வாரிவிட்டு 'ஜெ' துதியும் ஒழுங்காகச் செய்தார். என் அருகிலிருந்த ஒரு தொழிலதிபர் வெறுத்துப் போய், ''புள்ளி விவரமெல்லாம் சரிதான்; தொழில் வளர்ச்சி என்று இவர் சொல்லும் இடத்திலெல்லாம் லஞ்ச ஊழல் வளர்ச்சி என்று நாம் மாற்றிக் கொண்டு விட்டால் போதும்'' என்றார்! நிற்க, வெள்ளி விழாக் காலம் ஒரு தொழில் - பொருளாதாரப் பத்திரிகையை நடத்தி வெற்றி கண்டுள்ள விசுவநாதனுக்கும் அப் பத்திரிகை நிறுவியுள்ள தொழில்-வர்த்தக சாதனை விருதை இவ்வாண்டு பெற்றுள்ள லக்ஷ்மி மிஷின் ஒர்க்ஸ் அதிபர் ஜெயவர்த்தனவேலுவுக்கும் நமது வாழ்த்துக்கள்.

❐ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். கே. மதியழகன்,
கரடிப்பட்டி (அஞ்சல்),
செல்லப்பம்பட்டி (வழி),
சேலம் - 637 019.


காங்கிரஸ் அண்ணன் கம்யூனிஸ்ட் தம்பி!

●● திருச்சூரில் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு சமீபத்தில் நடந்தது. அதற்கு வந்திருந்தவர்களுள் ஒருவர் : நீலம் ராஜேஸ்வர ரெட்டி. தள்ளாத எழுபத்தைந்தாவது வயதிலும் சிறப்பு அழைப்பாளராக மாநாட்டுக்கு வந்திருந்த அவருக்கு வி.ஐ.பி. உபசாரம்! ராஜேஸ்வர ரெட்டி நீலம் சஞ்சீவ ரெட்டியின் சொந்தத் தம்பி.

''சிறு வயதிலேயே அண்ணன் காங்கிரஸ் கட்சியிலும் நான் கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து விட்டோம். இன்று வரை அவரவர் கொள்கைகளில் உறுதியாய் இருக்கிறோம். அதற்காகச் சகோதர பாசத்தையும் நெருக்கத்தையும் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை...'' என்கிறார் ராஜேஸ்வர ரெட்டி.

குடும்பமே காங்கிரஸ் குடும்பமாக இருந்த போது ராஜேஸ்வர ரெட்டி மட்டும் கம்யூனிஸ்ட் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அவர் மனைவி லீலாவதியும் கம்யூனிஸ்ட்தான். 1948-50 கால கட்டத்தில் இருவரும் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார்கள். ''அப்போது ஆந்திர காட்டுப் பகுதியில் குகைகளில் கூட பல நாட்களை நாங்கள் கழித்தோம்'' என்று ராஜேஸ்வர ரெட்டி நினைவுகூரும் போது அவர் கண்கள் பழைய நினைவுகளை மனத்திரையில் ஓட விட்டுப் பளபளக்கின்றன.

●● தும்பாவில் (திருவனந்தபுரம்) உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மையம் கெடுபிடிகளுக்குப் பெயர் போனது. அதன் காம்பவுண்டுக்குள் யாரும் சுலபத்தில் நுழைந்து விட முடியாது. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் கூட கடுமையான செக்யூரிடி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள்.



● தும்பாவில் விண்வெளி ஆராய்ச்சி நிலையம்

இத்தனை பாதுகாப்பையும் மீறி இந்த மையத்தின் கம்ப்யூட்டர் பிரிவில் அடையாளம் தெரியாத இரண்டு பேர், ஒரு வார காலம் 'வேலை பார்த்தனர்' எனத் தெரிந்த போது மேலதிகாரிகள் அதிர்ச்சியடைந்தார்கள்.

விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் 'லெட்டர் பாடில்' குமாஸ்தா ஒருவர் எழுதிக் கொடுத்த கடிதத்தைக் காட்டியே அந்த இரு 'புதியவர்களும்' உள்ளே நுழைய அனுமதி பெற்றதாகத் தெரியவந்துள்ளது!

தற்காலிக ஊழியர்கள் பட்டியலில் இவர்களுடைய பெயர்கள் இல்லாததால் இவர்கள் தற்காலிகமாக அமர்த்தப்பட்டவர்கள் என்று கொள்வதற்கும் இல்லை.

ராக்கெட் நிலையத்துக்கு வரும் பஸ்ஸில் ஏற முயன்ற போது இவ்விருவரும் பிடிபட்டார்கள். தும்பாவில் பாதுகாப்பு பலவீனமடைந்துள்ளது குறித்து மேலதிகாரிகள் அதிர்ந்து போயிருக்கிறார்கள். தலைவர் யூ.ஆர். ராவ் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

●● கேரளாவில் தொழிலமைச்சராக இருந்த சிவதாசனின் பி.ஏ.வாகப் பணியாற்றினார் விமல் குமார். அப்பணியில் சேரும் முன், ஒரு தனியார் மருத்துவமனையில் 210 ரூபாய் மாதச் சம்பளத்துக்கு வேலை செய்தார். இவர் மனைவி அதே இடத்தில் 482 ரூபாய் மாதச் சம்பளத்துக்கு நர்ஸாக வேலை பார்த்தார். அமைச்சரின் பி.ஏ.வாக இருந்த ஐந்து வருட காலத்தில் விமல்குமார் பெயரில் 97514.06 ரூபாயும் அவர் மனைவி சந்தானவல்லியின் பெயரில் 575442.26 ரூபாயும் சொத்து சேர்ந்து விட்டது! சொத்துக்கான ஆதாரங்களைக் காட்ட முடியாத விமல்குமார் மீது ஊழல் வழக்குத் தொடர்ந்து விசாரணைக்குப் பிறகு, ஒரு வருட சிறைத் தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளன. அபராதம் கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதச் சிறைவாசம்!

– எஸ். எஸ். மணி.

வேண்டாம் அந்த வரம்!

சரித்திர ஆராய்ச்சிக்குத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பேராசிரியர் ஆர்னால்ட் டாயின்பி, தாம் ஏன் அமரனாக என்றென்றும் வாழ்ந்திருக்கக் கூடாது என்று நினைத்து, அவ்வாறே கடவுளை வேண்டிக் கொண்டார். சில நாட்களுக்குள் அவர் வருமானவரி அதிகாரிகளுக்குத் தமது வருவாய் விவரணப் படிவம் தயார் செய்து தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி ஒவ்வோர் ஆண்டும் விவரணப் படிவம் தாக்கல் செய்ய வேண்டுமே என்று எண்ணிய போது மனம் நொந்து போய்த் தாம் ஏற்கெனவே கடவுளுக்கு அறிவித்த வேண்டுகோளை வாபஸ் பெற்றுக் கொண்டார் டாயின்பி!



தகவல் : பாலன் பூங்குழலி

ஆதாரம் : "கணக்குப் பதிவியலும், வருமானக் கணிப்பும்"
- என்.ஸி. அனந்தாச்சாரி,
அருணோதயம்,
இராயப்பேட்டை, சென்னை - 14.
ரூ. 25.00

அக்கினிக் குஞ்சுகள்!


மாடு மேய்க்கிற பையன்கள் ஒருநாள் அடர்ந்து காய்ந்து போன புல்லில் தீ வைத்தார்கள். தீயைக் கண்ட மிருகங்களும் பறவைகளும் இங்கும் அங்கும் வேகமாகத் தப்பி ஓடின.

ஆனால் அந்தக் காட்டுக் கோழி ஓடவில்லை. ஏனென்றால் அதன் ஐந்து குஞ்சுகள், அப்புறம் போய் மேய்ந்து கொண்டிருந்தன. தீயைக் கண்டதும் அந்தத் தாய்க் கோழி பெரிய சத்தம் போட்டுத் தன் குஞ்சுகளை அழைத்தது. மூன்று குஞ்சுகள் ஓடிவந்து தாயின் இறகுகளுக்குள் ஒளிந்துக் கொண்டன. மற்ற இரண்டும் கவனக்குறைவாக இருந்து விட்டன.

அடுத்த நாள் தீ வைத்த பையன்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள். தீயில் கருகிய இரு கோழிக் குஞ்சுகளைக் கண்டார்கள். அப்புறம் கருகிப்போன ஒரு கோழியையும் பார்த்தார்கள். ஒரு பையன் தன் கையிலிருந்த கம்பினால் அந்தக் கோழியை ஒதுக்கிப் போட்டான். உடனே அந்தக் கோழியின் அடியிலிருந்து யாதொரு சேதமுமில்லாமல் பத்திரமாயிருந்த மூன்று குஞ்சுகளும் அப்புறம் ஓடின. தன் உயிரைத் தியாகம் செய்து குஞ்சுகளைக் காப்பாற்றியிருந்தது அந்தக் கோழி!

ஆதாரம் : வோர்ட்ஸ் ஆப் ட்ருத்,
கோட்டயம்

தகவல் : கருவை வேணு



நவரஸ நினைவுகள் : 10



பீம்சிங்கின் கோபம்

பாலும் பழமும் படம் தொடர்பாகச் சில இனிமையான நினைவுகளும் இருக்கின்றன. அதன் கதாநாயகன் சிவாஜி கணேசன். கதாநாயகி (சரோஜா தேவி) காச நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகி ஸ்விட்ஸர் லாந்து போய் விடுவார். நாயகன், முறைப் பெண்ணை வேண்டா வெறுப்பாக மணந்து கொள்வார். தமக்கு உதவியாகச் சோதனைச் சாலையில் பணிபுரியும் அவளை, அவர் மனைவியாக அங்கீகரிக்கவே மாட்டார். பழைய காதலி நினைவாகவே இருப்பார். அவர் மனைவி ஒரு நாள் வெறுத்துப் போய் அவரது தவறான போக்கைச் சுட்டிக் காட்டுவாள்.

''என்னுடைய பழைய காதல் பற்றி உனக்கு நன்றாகவே தெரியும். அப்படியும், 'பரவாயில்லை, உங்களுடன் அட்ஜஸ்ட் செய்து கொள்கிறேன்' என்று துணிந்து தானே என்னைக் கல்யாணம் செய்து கொண்டாய்... இன்று இப்படிப் பேசினால் என்ன அர்த்தம்!'' என்று ஹீரோ கோபித்துக் கொள்வார்.

இரண்டாவது கதாநாயகியாக அதாவது சிவாஜியின் மனைவியாக நடித்த நான் இந்தக் கட்டத்தில் மிகவும் உணர்ச்சிவசப் பட்டுப் பேச வேண்டும் :

''அதெல்லாம் சரி! நான் வாழ்நாள் முழுக்க அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்வதாக அக்ரிமெண்டா எழுதிக் கொடுத்திருக்கேன்'' என்று கோபத்துடன் சப்தமாகக் கேட்டுவிட்டு, 'ஐயோ வார்த்தைகளைக் கொட்டி விட்டோமே!' என்ற வருத்தத்தில் அடுத்த வாக்கியத்தைக் குரலை மிகவும் தாழ்த்தி, தயக்கத்துடன் உச்சரிக்க வேண்டும்.

அந்தக் காலத்து சினிமா சென்டிமெண்ட்படி, ரசிகர்களுக்கு 'இவள் கணவனை எதிர்த்துப் பேசுகிறாள்' என்ற உணர்வு வராமல் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருந்தது.... அதே சமயத்தில் அந்தப் பாத்திரத்தின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தியாக வேண்டும். இந்தக் காட்சிக்குத் தியேட்டரில் பலத்த கைத்தட்டல்.

பீம் சிங்கின் கோபத்துக்கு நான் உள்ளாக நேர்ந்ததும் 'பாலும் பழமும்' படப்பிடிப்பின் போதுதான்.

ஷூட்டிங் ஆரம்பமான தினத்தில் நான் ரெடியா? என்று கேட்க வந்த உதவி இயக்குனரிடம் ''இன்றைக்கு எனக்கு என்ன 'சீன்?'' என்று கேட்டேன்.

நான் ஆர்வத்தில் கேட்ட கேள்வி ஆணவத்தில் கேட்டதாக எண்ணி, இயக்குனரிடம் புகாராகக் கூறப்பட்டது!

பீம்சிங்கும் 'சீன் என்ன என்று கேட்கும் அளவுக்கு அவர் உயர்ந்து விட்டாரா?' என்று கோபப்பட்டதாக என் காதுகளுக்குச் செய்தி வந்தது.

நான் விஷயத்தை வளரவிடாமல் முளையிலேயே கிள்ளிவிடத் தீர்மானித்தேன். மனத்துக்குள் கசப்பான எண்ணத்துடன் வேலை செய்ய எனக்குப் பிடிக்காது.

மேக் அப் போட்டுக் கொண்ட கை

சௌகார் ஜானகி

யோடு பீம் சிங்கிடம் போனேன். செட்டில் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த வரிடம், ''சார்! எக்ஸ்க்யூஸ் மீ; உங்க கூட தனியாப் பேச விரும்பறேன் இரண்டு நிமி ஷங்கள் ஒதுக்க முடியுமா?'' என்றேன்.

பதில் சொல்லாமல் செட்டின் வேறொரு பகுதியை நோக்கிச் சென்றார் பீம் சிங். நானும் கூடவே சென்றேன்.

''என் 'சீன்' என்ன?' என்று நான் கேட்டது வாஸ்தவம்தான். ஆனால் நான் 'ஸ்டார்' என்கிற பந்தாவில் கேட்க வில்லை....''

'பின்னே...' என்பதைப் போல் என்னை அவர் பார்க்க,

''டைரக்டர் என்பவர் ஒரு படத்தின் சூத்திரதாரி. அவர் சொல்கிறபடி நடிப்பது தான் எங்கள் கடமை. ஆனாலும் என்னைப் பொறுத்தவரை ஒரு கொள்கை வைத்திருக் கிறேன். நான் நடிக்கிற பாத்திரத்தைப் பற்றி டைரக்டரிடமோ அவர் உதவியாளரிடமோ முழுமையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் பாத் திரத்தை முழுமையாய்ப் புரிந்து கொண்டு ஒன்ற முடியும். அது என் திறமையை வெளிப்படுத்த உதவுவதோடு டைரக்டரின் வேலையையும் சுலபமாக்கும்...'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தேன்.

என் விளக்கத்தைக் கேட்டு, திருப்தியும் சந்தோஷமும் அடைந்தார் பீம் சிங். ''இந்த விஷயத்தை இதோடு விட்டு விடலாம்'' என்று சொன்னதோடு நிற்காமல், நான் நடிக்க வேண்டிய காட்சிகள் பற்றி முன் கூட்டியே விரிவாக என்னிடம் சொன்னார்.

பீம் சிங் பெருந்தன்மை படைத்தவர். என் மனத்தில் பட்டதைப் பளிச்சென்று சொன்ன போது அதிலிருந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டார்.

இதற்கு நேர் மாறாக, என் ஒளிவு மறை வற்ற பேச்சினால் எனக்கு அநேக சந்தர்ப் பங்களில் சங்கடங்களும் தடைகளும் ஏற் பட்டன. அவற்றைத் தனியாகவே பட்டிய லிடலாம்!

'**பா**லும் பழமும்' காலகட்டத்தில் திரைப் படங்களில் நான் துணைக் கதா நாயகி வேடம் ஏற்றேன். சாவித்ரி, சரோஜா தேவி, விஜயகுமாரி... இவர்கள் பிரதான கதாநாயகிகள்.

இரண்டாவது இடத்தில் இருந்தாலும் எனக்கு நல்ல விமர்சனங்கள் கிடைத்தன. கதாநாயகி நடிகைகளுடன் எளிதாகப் பழகி னேன். அவர்களும் வித்தியாசம் பாராட் டாமல்தான் பழகினார்கள். குறிப்பாக சாவித்ரியும் நானும் மிக நெருங்கிய தோழி கள் ஆனோம்.

என்னைப் போலவே சாவித்ரிக்கு ருசித்துச் சாப்பிடுவது ரொம்பப் பிடிக்கும். காலை ஷூட்டிங்குக்கு வரும்போதே விதம் விதமான ஜூட்டங்களுடன் வந்து விடுவார். நானும் என் கைப்பட சமைத்த உணவுடன் போவேன்.

எந்தப் பட ஷூட்டிங் ஆனாலும் சக நடிக நடிகையர்கள் நான் சமைத்த உணவை மிகவும் ரசித்துச் சாப்பிடுவார்கள். நானும் என் சொந்தக் கஷ்டங்களை மறந்து உணவு இடைவேளையில் சிறிது நேரம் மகிழ்ச்சி யாகப் பொழுது கழிப்பேன்.

இருந்தாலும் வீட்டுக்குத் திரும்பிய வுடன், நான் தனியாகத்தான் உணவு அருந்த வேண்டி யிருக்கும். அதிலும் பல சமயங்களில் சரி யான உணவு இருக்காது. பழைய சோறு மட்டும் சாப்பிட்டுத் தூங்கிய நாட்கள் உண்டு. யாராவது நம்மை உட்கார வைத்துச் சோறு போட மாட்டார்களா என்று பல தடவை ஏங்கியிருக்கிறேன்.

அத்தகைய தனிமை அந்தக் காலத்தில் மட்டுமில்லை. இன்னமும் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

(தொடரும்)

திணறடிக்கும் பிரமுகர்கள்–போட்டி முடிவு

ஸாரி, ஒன்பது விடைகளையும் சரி யாக எழுதியவர் யாருமில்லை. ஏழு விடை களை இருவர் மட்டுமே சரியாக எழுதி, பரிசுத் தொகையான 250 ரூபாயைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதுடன் நமது வாழ்த்துக் களையும் பெறுகின்றனர்.

1. மு. தியாகராஜன்.
9, இரண்டாவது குறுக்குத் தெரு.
எல்.ஐ.சி. காலனி, பம்மல்,
சென்னை – 600 075.

2. கே. தீபா,
21, BOUR DILLON ROAD,
BANGALORE - 560 005

சரியான விடைகள் பின்வருமாறு :

ஓவியர்கள் : 1. செல்லம், 2. உமாபதி, 3. அரஸ், 4. நடனம்.

பிரமுகர்கள் : 1. ஸ்ரீபால், 2. சந்திரசேகர், 3. நரசிம்மராவ், 4. செம்மங்குடி, 5. சிவ சங்கரி.



இலவசம்!





வாங்கும் ஒவ்வொரு ஸ்ரீபெட் பாட்டிலுடனும் 1 டொமேட்டோ கெட்ச்சப் ஸாசே இலவசம். ஒவ்வொரு ஜாருடனும் 2 டொமேட்டோ கெட்ச்சப் ஸாசே.

உங்கள் கவனத்திற்கு

★ உங்கள் ஸ்ரீபெட் பில்களை பத்திரமாக வைத்திருங்கள். ஒரு உன்னதமான வாய்ப்பு காத்திருக்கிறது. விரைவில் மேலும் விவரங்கள்.

ஸ்ரீபெட்

ஜார்கள் ◆ பாட்டில்கள்

உடையாதவை

உணவுத்தரம் காப்பவை ◆ சுகாதாரமானவை

ஸ்ரீராம் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு!

விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்

இச்சலுகை 31 ஆகஸ்டு 1993 வரை மட்டுமே.

✱ இந்த வாய்ப்பு சென்னை, வேலூர், திருச்சி, கரூர், தஞ்சை, சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர், மதுரை, நெல்லை, மயிலாடுதுறை, கடலூர், தூத்துக்குடி, நாகர்கோவில், பாண்டிச்சேரி ஆகிய நகரங்களில் மட்டுமே. இச்சலுகை இல்லாமலும் ஸ்ரீபெட் கிடைக்கும்.

பாலம்

●● சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதி சுவாமிகளின் நூற்றாண்டு விழாவினை யொட்டி ஒரு நிறைவான நூல் வெளியிட உத்தேசம். அன்னாரைப் பற்றிய நூல்கள், கட்டுரைகள், புகைப்படங்கள், தகவல்கள் வைத்திருப்போர் தயை கூர்ந்து தொடர்பு கொள்ள முகவரி :

- ஏ.ஆர். நடராஜன்,
40/41, 2nd Cross, Lower Palace Orchards,
Bangalore - 560 030.

●● ரெடிமேட் ஆடைகள் தைக்கும் மாடல் புத்தகம் யாரிடமேனும் இருந்தால் விலைக்குக் கொடுத்து உதவ முடியுமா? அல்லது எங்கு கிடைக்கும் என்று தகவல் தர இயலுமா?

- திருமதி கே. உமா,
3/78 C, அய்யாதுரை தெரு,
பரமக்குடி, ராமநாதபுரம் (மாவ)

●● National Panasonic Model RQ 2230 டேப் ரிகார்டருக்குப் பொருத்தமான Fly Wheel ஒன்று தேவை. Spare part உள்ளவர் உதவினால் உரிய தொகை தருகிறேன்.

- கே. வி. சேகர்,
லக்ஷ்மி கபே,
சிங்காரப்பேட்டை - 635 307.
தருமபுரி (மாவ)

●● கால்களில் ஏற்படும் பித்த வெடிப்புக்கு இயற்கையான மருந்து அறிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ரிப்ளை கார்டு எழுதவும்.

- நா. பாலசுப்பிரமணியம்,
Apt. 59, அண்ணாநகர், மேற்கு விரிவு,
சென்னை - 600 101.

●● வாபகரமாக நடந்து வரும் புகைப் படத் தொழிலை விரிவுபடுத்த விருப்பம். நிதி வசதி அளிக்கவோ, கூட்டுச்சேரவோ ஆர்வமுள்ளவர் தொடர்பு கொள்ளவும்.

- ஏ. திருஞானவேல்,
422, எஸ்.கே.வி. ரோடு,
ஈரோடு - 638 009.

●● நான் AMIE - Sec A பரீட்சை மே மாதத்தில் எழுத இருப்பதால் எனக்குப் பழைய கேள்வித் தாள்களும் புத்தகங்களும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. புத்தகங்களின் விலை தெரிவித்து உடனே கடிதத் தொடர்பு கொள்க. நன்றி.



- பா. பால்பாண்டி,
190 B, காந்திஜி நகர்,
திருத்தங்கல் (அஞ்சல்),
சிவகாசி (வழி).

●● பட்டுப்பூச்சி வளர்ப்பு பற்றித் தெரிந்து கொள்ள ஆசை. நேரில் வந்தும் கற்றுக் கொள்கிறேன். உதவக் கூடியவர்கள் விலாசத்துடன் எழுதவும்.

- எஸ். காந்தி,
மேல் பேரடிக்குப்பம்,
திவனூர் அஞ்சல்,
திண்டிவனம் (வட்டம்) - 604 206.

●● ரேடியோ, டீவி ஆகியவற்றின் அமைப்புகளைப் புரிந்து கொள்ளவும் பழுது பார்க்கக் கற்றுக் கொள்ளவும் விருப்பம். இலவசமாக அஞ்சல் வழி யாரேனும் போதிக்க இயலுமா?

- எஸ். நடராஜன்,
த/பெ. எஸ். செந்தில் குமரன்,
232, திருச்சுழிரோடு,
அருப்புக்கோட்டை,
காமராஜர் (மாவ)

●● ரெஸ்டன், எட்டு ஹார்ஸ்பவர் ஆயில் இஞ்சினுக்கு நாசில் பம்பு கிடைக்க வில்லை. ஸ்பேர் பார்ட் எங்கு கிடைக்கும் என்று தகவல் தெரிவித்தால் உதவியாக இருக்கும்.

- எஸ். டி. சேகர்,
சரபோஜி ராஜபுரம்,
துளசியாப்பட்டினம் அஞ்சல்,
வேதாரண்யம் வட்டம் - 614 714.

●● சென்ற ஆண்டு அக்டோபரில் பழனியிலிருந்து காங்கேயம் வரும் வழியில் A.J. Cronin எழுதிய The Green Years என்ற நாவலைத் தொலைத்து விட்டேன். கண்டெடுத்தவர்கள் தெரிவிக்கவும். அல்லது மேற்படி புத்தகம் வைத்திருப்பவர்கள் விலைக்குத் தந்தால் பெற்றுக் கொள்கிறேன்.

- ஆர். கணேசன்,
1D, எம்.டி.எஸ். நகர்,
அஸ்தம்பட்டி, சேலம் - 7.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

இருக்கவே இருக்குது தண்ணி இல்லாக் காடு!

◆ தமிழகத்தில் பரவி வரும் வெடிகுண்டு கலாசாரத்தை அரசு உண்மையிலேயே ஒழிக்க விரும்பினால்... அது செய்ய வேண்டிய ஒரே காரியம்... கல்கியின் கட்டுரை படித்து அதன்படி செயல்படுவதுதான்... தெளிவான - அதே சமயம் ஆணித்தரமான கட்டுரை!

கச்சிராயபாளையம், ஆர். சி. மதிராஜ்.

◆ அட்டைப்படக் கட்டுரை, வெடிகுண்டு நாச வேலைகளில் பெரும் பங்கு வகிப்பவர்கள் படித்த வேலையில்லாத மாணவர்களும், வேலையில்லாத விவசாயிகளும்தான் என்ற கருத்தை எடுத்துரைத்தது. அதைப் படித்த சூடு ஆறுவதற்குள் 'அருள்மொழி வர்மன்' எழுதிய 'விபரீத வெற்றிகள்' சிறுகதை அந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

நாகப்பட்டினம், நாகை சந்திரா.

◆ "அன்பிற்காகப் பணி செய்!" என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் மாபெரும் பணியினைச் செய்து வரும் ஆஸ்திரேலியக் குழுவினரின் தொண்டு தொடர்க! நகரம் சுத்தம் அடைக!!

செல்லூர், சுகாராஜ்.

◆ இன்றைய சமுதாயத்தின் அவல நிலையையும், இளைஞர்களின் திசைமாறுதலையும் வரிக்கு வரி தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியது அருள்மொழிவர்மனின் 'விபரீத வெற்றிகள்' சிறுகதை.

திருத்துறைப்பூண்டி, வி. என். ஜீவா.

◆ ஆர்ப்பாட்ட அரசியல் நடத்தும், எதிர்க்கட்சிகளின் மூக்கை உடைத்தது போல், 'பாரதம் உயர ஒரு பட்ஜெட்' தலையங்கம், மிக அற்புதமாக இருந்தது! அதோடு எல்லா சலுகைகளையும் ஒரே சமயத்தில் அறிவித்து விட்டு வருவாய் போதாமல் அரசு கைகளைப் பிசைந்து கொண்டு நிற்க முடியாது என்ற, வரிகளும் சிந்திக்கத் தூண்டின.

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

◆ மன்மோகன் சிங்கின் வரியில்லாத பட்ஜெட்டை வரிவரியாய்ப் புகழ்ந்த தலையங்கம், அடுத்த பட்ஜெட் (1994-95) வரை ஆட்சி நிலைக்குமா என்று வயிற்றில் புளியைக் கரைக்கும் கேள்வியையும் எழுப்பி விட்டதே!

கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்.

◆ பளபளப்பும் மினுமினுப்புமாக இருப்பவர்களையே பேட்டி கண்டு, அறைத்த மாவையே அறைக்காமல், ஒரு வித்தியாசமான பேட்டிக் கட்டுரை அளித்தீர்கள். அமைதியும் எளிமையும் உறையும் நாட்டின் உயிர்நாடியான கிராமத்து இசையையும், அதிசயமாக அந்த இசையையே பயின்ற வட இந்திய மங்கையையும் ஒருசேர மணந்து, கிராமிய இன்னிசையைத் தமிழகமெங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் குப்புசாமி - அவர் மனைவி அனிதா தம்பதியருக்குக் கல்கி அளித்திருக்கும் சிறப்பு, அதன் வாசகி என்ற தகுதியில் என்னைப் பெருமிதம் கொள்ளச் செய்தது.

இருச்சி, கண்ணம்மா இராமசாமி.

◆ இசை கற்க தடங்கல், போராட்டம், வெற்றி; காதலிலும் தடங்கல், போராட்டம், வெற்றி. ம்... ம்.. புஷ்பவனம் குப்புசாமி ஜெயிக்கப் பிறந்தவர்தான்.

தோட்டப்பாளையம், பாற்கடல் வேந்தன்.

◆ 'குவாலிடி கண்ட்ரோல்' சிறுகதையில் சொந்த ஆசாபாசங்களினால் கட்டுப்பட்ட மானேஜர் ராமசேஷன், ரிஜெக்ட் பண்ண வேண்டிய 'ரீல்'களுக்கு ஓ.கே. போடுவது மனமுடையச் செய்யும் யதார்த்தம்!

கொளப்பாடு, ப. வெங்கடேசன்.

◆ என்னதான் கண்டிப்பாகவும், நேர்மையாகவும் உயர் அதிகாரிகள் இருந்தாலும் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் தங்களின் சொந்த விருப்பங்களுக்கு அடிமையாகி மாறிப் போய் விடுகிறார்கள் என்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டியுள்ளது "குவாலிட்டி கண்ட்ரோல்" சிறுகதை.

வயலோகம், எஸ். குருசேகர்.

◆ சேதி கேட்டோ பகுதியின் இறுதியில் நீங்கள் கேட்டது போல் ஒரு போலீஸ் அதிகாரி தமிழக அமைச்சர் ஒருவரைத் தெரியாத்தனமாகப் பிடித்துத் தள்ளி இருந்தால் அந்த இடத்திலேயே மந்திரி 'வேசாக' கவனிக்க, பின் மந்திரி தலைமையில் இரத்தத்தின் இரத்தங்கள் 'வலுவாக' கவனிக்க, அப்புறம் இருக்கவே இருக்குது தண்ணி இல்லாக் காடு!

அரசரடி, வி. சிவா.

◆ கல்கி 28.2.93 இதழில் 18-ம் பக்கத் துணுக்கில் சவஹாபி என்றிருப்பது தவறு. சஹாபா என்பதுதான் சரியானதாகும். சஹாபா என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களைக் குறிப்பிடுவதாகும்.

பொதக்குடி, கே. எம். நூர்முகம்மது.

பரிசுக் கடிதம்!

◆ "முதல்வரின் சொத்து மதிப்பு ஆறு கோடியாமே?" என்று சந்தேகத்துடன் கேள்வி எழுப்புபவர்களுக்கு நீங்களும், "ஒருவேளை நியாயமான காரணம் இருக்கலாம்" என்று சந்தேகத்துடனேயே பதில் அளித்திருக்கிறீர்கள். நம் முதல்வருக்கு அதிர்ஷ்டம் அதிகம் என்பது எல்லோருக்குமே தெரியும். லாட்டரியில் பம்பர் பரிசு (கோடிக்கணக்கில்) அவருக்கு விழுந்திருக்கக் கூடாதா? அதில் அவர் இந்திரவிகாஸ் பத்திரங்கள் வாங்கியிருந்தால் இரண்டு மடங்காகப் பெருகியிருக்காதா? இருந்தாலும் நம் முதல்வர் மீது எல்லோருக்கும் இவ்வளவு சந்தேகம் கூடாது!

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

23

பாக்காரின் கனவுகள்

அன்புள்ள திரு. லக்ஷ்மிநாராயணன் அவர்களுக்கு,

வணக்கம். எங்கள் 'திரைத் துளிர்' வார இதழ் வாசகர்கள் சார்பாக 'திரு. கமல்ஹாசன் அவர்களுடன் ஒரு நாள்' பகுதிக்குத் தாங்கள் அனுப்பிய கூப்பன், குலுக்கல் முறையில் எங்களின் இந்த மாத விருந்தினர் பேபி ஷாம்லி அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உடனடியாக எங்கள் அலுவலகத்துக்குத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு விவரங்களை அறியும்படி வேண்டுகிறோம். மனமார்ந்த வாழ்த்துக்கள்,

ஒப்பம்
(ஆசிரியர்)

தபாலில் வந்த அந்தக் கடிதத்தை லக்ஷ்மிநாராயணன் மீண்டும் ஒரு முறை படிக்கிறான். மகிழ்ச்சியில் துள்ளுகிற போதெல்லாம் மேலே தலை இடிக்கிற வாசல் நிலைப்படி. வழக்கம் போல் தேய்த்துக் கொண்டு லக்ஷ்மிநாராயணன் கிணற்றடிக்கு வருகிறான். அவன் சந்தோஷத்தில் மனம் நிறைந்து, துவைக்கிற கல்லில் விஜயலக்ஷ்மி சோப்புக்கையை நீட்டுகிறாள். பற்றிய கைகளில் இருவரும் தட்டாமாலை சுற்றுகிறார்கள். இரண்டு கைகளையும் உதட்டின் முன் குவித்து விஜயலக்ஷ்மி ஊதுகிறாள். சிறிது நேரம் வர்ணங்களில் ஜாலம் காட்டி உடைந்து போகிற சோப்புக் குமிழொன்று காற்றில் பறக்கிறது. துணையாய் உடன் பறக்க லக்ஷ்மிநாராயணன் கரம் குவிக்கிறான். இரண்டு குமிழ்களும் உயரே உயரே பறந்து மோதி மறைகிறதைக் கிணற்றடியில் இருவரும் கைத்தட்டி ரசித்து, கண்களில் நீர் திரள்கிற அளவுக்கு மகிழ்ச்சியில் வாய் விட்டுச் சிரிக்கிறார்கள்.

லக்ஷ்மிநாராயணன் சட்டையெடுத்து அணிந்து கொள்கிறான். வில்லிவாக்கம் ஃபார்மஸியில் மருந்து வாங்க வருகிறவர்களை விட, டெலிபோன் பேச வருகிறவர்களே அதிகம். பொறுமையாய் நம்பர் கேட்டு, தடித்த விரல்களில் நிதானமாய்ச் சுற்றி ரிஸீவரை நீட்டுகிற பவ்யத்துக்கும் சேர்த்துக் கடைக்காரர் பின்னால் காசு வாங்கி விடுவார்.

அண்ணா சாலையில் 'திரைத் துளிர்' அலுவலகம். கமல்ஹாசன் அவுட்டோர் படப் பிடிப்பில் பொள்ளாச்சியில் இருக்கிறார். குலுக்கலில் அதிர்ஷ்ட சாலிகள் மொத்தம் பதினைந்து பேர். தவிரவும் சில பத்திரிகையாளர்கள், ஒரு புகைப்படக்காரர். மறுநாள் கோவை எக்ஸ் பிரஸில். கோச் நம்பர் எழுதிக் கொள்ள உபரியாய்க் கடைக்கார் பேனா வையும் நீட்டுகிறார்.

பச்சைப் பசேலென்று பொள்ளாச்சி வருகிறது. வயல்களின் நடுவே தார்ரோடு வளைந்து ஷூட்டிங் நடக்கிற அந்தப் பெரிய ஜமீன் வீட்டின் முன் அனைவரும் இரண்டு வேன்களில் இறங்குகிறார்கள். உள்ளே தகவல் தெரிந்து கமல்ஹாசன் வருகிறார். பளிச், பளிச் என்று கேமிராக்கள் மின்னுகின்றன. அன்று காலையிலிருந்து காத்திருக்கிற ரசிகர் கும்பல் ஆரவாரிக்கிறது. அறிமுகப்படலம் முடிகிறது. கமல்ஹாசன், லக்ஷ்மிநாராயணனைக் கண்களில் பார்க்கிறார்.

''லைட்டிங் ஆயிட்டிருக்கு. வாங்க, சிவாஜி சாரைப் பார்க்கலாம்.''

தடித்த தூண்களைத் தாண்டி நடந்து வேனில் வந்தவர்கள் முற்றத்தில் இறங்குகிறார்கள். அனைவரின் வணக்கங்களையும் ஏற்கிற கம்பீரத்தில் கிராமத்துப் பெரியவராக சிவாஜி உட்கார்ந்திருக்கிறார். படத்தின் பெயர், மற்றும் கதைச் சுருக்கத்தைப் பத்திரிகையாளர்கள் எழுதிக் கொள்கிறார்கள். அவர்களிடம் தன் பழைய நாட்களை சிவாஜி கணேசன் நினைவு கூர்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு மகனாக கமல்ஹாசன் நடிக்கிறார். கிராமத்துத் தகப்பனும், வெளி நாட்டிலிருந்து வந்த அவரது மகனும் பேசிக்கொள்கிற அறிமுகக் காட்சி.

''இது பி.சி. ஸ்ரீராம்.''

''ஹலோ.''

''இது டைரக்டர் பரதன்.''

''ஹலோ.''

ம.வே.சிவகுமார்

வேறு நாற்காலியில் கௌதமி சிரிக்கிறார். அனைவருக்கும் சிற்றுண்டி வருகிறது. படத்தின் பாடலை டேப் ரெக்கார்டரில் கமல்ஹாசன் போட்டுக் காட்டுகிறார். இன்னமும் பதிவு செய்யப்படாத வேறொரு பாடலை அவர் பாடிக் காட்டுகிறதைத் தொலைவில் சிவாஜி ரசித்துக் கேட்கிறார்.

''எலேய்!''

லக்ஷ்மிநாராயணன் குரல் கேட்டுத் திரும்புகிறான்.

''நாம இதுக்கு முன்னாடி பார்த்திருக்கோமா?''

கிட்டத்தில் சிவாஜி கணேசன் புருவம் நெளிக்கிறார்.

பதிலுக்கு லக்ஷ்மிநாராயணன் வாயில் வார்த்தைகளே வருகிறதில்லை.



லைட்டிங் • முடிந்து ஷூட்டிங் தொடங்குகிறது. நாற்காலியில் சிவாஜி கணேசன் உட்கார்ந்திருக்கிறார். எதிரே அவர் மகனாகத் தயங்கி நகர்ந்து, அசைவுகளில் மரியாதை காட்டி கமல் வந்து நிற்கிறார்.

''அந்தப் பொண்ணுக்கு எந்த ஊரு?''

''சீராளா.''

''என்னாளா?''

''து.... சீராளா. விஜயவாடா பக்கத்துல ஒரு அழகான கிராமம்.''

''தெலுங்கா?''

''ஆமாம்.''

''உனக்கெப்படி தெரியும்?''

''அது... கூடப் பேசிப் பேசித் தெரிஞ்சுக்கிட்டேன்... ஓ.... அந்தப் பொண்ணை எப்படித் தெரியும்னு கேக்கறீங்களா? அது.... வந்து....''

மூத்தவரின் கணீரென்ற கேள்விகளுக்கு, இளையவரின் பதில் சரியாகக் குரல் நடுங்கி வருகிறது. கேமிரா ஓடுகிற சப்தம் தவிர வேறு சப்தங்கள் இல்லை. பி.சி. ஸ்ரீராம், டிராலியில் நகர்கிறார். முடிந்த அளவு நெருங்கியமர்ந்து டைரக்டர் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். கடவுளே, இத்தனை நாள் கஷ்டப்பட்டதற்கு இன்றைக்கு ஒரு நாள் பெரும் திறமைகள் நடுவே நிற்க வைத்திருக்கிறாய். வாழ்க்கையில் நினைக்காததையெல்லாம் குலுக்கலில்

தந்திருக்கிறாய். நினைந்து வருந்திக் கேட்டதை என்றேனும் தராமலா போய் விடுவாய்?

மாலையில் தேநீர் முடிந்து 'நிரைத் துவிர்' வாசகர்களுடன் புகைப்படம் எடுக்கிற படலம் துவங்குகிறது. ஒரு பக்கம் சிவாஜி. ஒரு பக்கம் கமல். நடுவே சந்தோஷத்தில் அசடு தட்டி லக்ஷ்மிநாராயணன். கடவுளே, வரவேற்பறையில் பெரிது செய்து மாட்டுவதற்குக் கூடுதலாய் ஆயுளுக்கும் ஒரு புகைப்படம் கொடுத்திருக்கிறாய். சோப்புக் குமிழ்களை இன்னும் எவ்வளவு உயரத்துக்கு அனுமதிக்கப் போகிறாய்?

ரிசல்ட் வந்ததும் மகிழ்ச்சியில் மாமனார் லக்ஷ்மிநாராயணனைத் தூக்கி மூன்று சுற்றுசுற்றி இறக்கி விடுவதை விஜயலக்ஷ்மி சந்தோஷத்தில் முகம் மலர்ந்து பார்க்கிறாள். சூழ்நிலை உற்சாகத்தில் குழந்தைகள் புரியாமல் சிரிக்கின்றன. கங்குடி புடவையில் மாமியார் முகம் மூடி, சிவந்து போகிறாள். விஷயம் தந்தியில் மதுரைக்குப் போகிறது. பதிலுக்கு அப்பாவிடமிருந்து வாழ்த்துத் தந்தி வருகிறது. வாரக் கடைசியில் லக்ஷ்மிநாராயணன் பம்பாய் போக வேண்டும். அங்கே மத்திய அலுவலகத்தில் இந்தப் பரந்த பாரத தேசத்தின் வடக்குப் பகுதியில் ஏதோ ஒரு குக்கிராமத்தில் அவன் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும். உள்ளுக்குள் செய், செய் என்று ஒரு குரல் ஒலிக்குமே, அது அங்கே என்ன செய்யப் போகிறதோ? தனிமையில் அவர்கள் இருக்கிற சமயம் அவன் மனம் அழுகிற மௌனம் விஜயலக்ஷ்மிக்குக் கேட்கிறது. லட்சியத்துக்கும், பொறுப்புக்கும் நடந்த சண்டையில் லக்ஷ்மிநாராயணன் காயப்பட்டிருக்கிறான். இது தோல்வியில்லை. தாற்காலிகப் போர் நிறுத்தம். வடக்கே மூன்று வருடங்கள் அக்ஞாத வாசம் அவசியம். பிடித்தாலும், பிடிக்கா விட்டாலும் ராமர் காட்டுக்குப் போய்த் தான் ஆக வேண்டும். எனினும் தமிழன் திரும்பி வருவான். வெண்சங்கு மீண்டும் முழங்கும். முயற்சி உள்ளவனுக்குக் காலம் ஒரு பொருட்டல்ல. இலட்சியம் உள்ளவன் முதலில் பொறுமை பழக வேண்டும். யானைக்குக் கர்ப்ப காலம் அதிகம். தொடர்ந்து போரிடு வதில்தான் எல்லாமே இருக்கிறது. மனத்தில் சுடர் எரியும் வரை தோல்வியென்பதே இல்லை.

ஆயிற்று. நகர்ந்தது தெரியாமல் பிரிகிற நேரம் வரும். ஸ்டேஷனுக்கு மதுரையிலிருந்து அப்பாவும், அம்மாவும் வந்து விடு



ஒரு மாற்றம் வரும்

முப்பத்தைந்து வருடங்களாக ஆபீசுக்காக உழைத்தவர் தோபதி. அவர் ஓய்வு பெறும் வயது வந்து விட்டது என்று முதலாளி சொன்னதும் தாங்க முடியாத சோகம் + கோபத்தில் ஆழ்ந்து போகிறார். இத்தனை சின்சியராக உழைத்த ஒருவரை எப்படி நிர்வாகம் அவ்வளவு சுலபமாகக் கழற்றி விடப் போயிற்று என்று ஆத்திரம். ரிடையர் ஆகி விட்டால் வீட்டில் ஒரு மூலைக்குத் தள்ளி விடுவார்கள், யாரும் மதிக்க மாட்டார்கள் என்ற அநாவசிய பயம். மொத்த பிராவிடண்ட் ஃபண்ட் பணமும் கடன் கொடுத்துத் திரும்பி வராமலே போக, கிராசுவிடி பணத்தையும் நண்பர் தேவாரத்திடம் இழக்க - வீட்டில் அப்படி ஒன்றும் மரியாதை இழப்பதில்லை தோபதி.

வி. கோபாலகிருஷ்ணன் தோபதி யாக, கொஞ்சம் பூர்ணம் பாணியில் இயல்பாகப் பேசுகிற மாதிரி இழுத்து இழுத்துப் பேசினாலும், சில சீன்களில் அவர் போடுகிற கூச்சலில் அரங்கமே அதிர்ச்சி அடைகிறது. ஆபீஸில் அவர் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் கேசவன் (ஏ. வீரப்பன்) அடிக்கிற கூத்து கலகலப்பு ரகம் என்றால், இரண்டாம் மகன் வேது புன்னகை வருவிக்கிற ரகம்.

கடைசியில் கேசவன் மோசடி செய்து விட்டார் என்று, தோபதியை மறுபடி, பதவி ஏற்க முதலாளி அழைக்க வரும் பொழுது 'டேய் எம்.டி.' என்று அழைத்து(!) அதை ஏற்க மறுக்கிறார் தோபதி. இப்படி அவர் மனம் மாற வலுவான காரணம்? தேட வேண்டியிருக்கிறது.

ராது ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு புது நாடகம் எழுதியிருக்கிறார். அதனால் வசனத்தில் கவனம் தெரிகிறது. ஆனாலும் நாடகத்தனம், நாடகத்தனம் என்பார்களே அது இப்படியா ஒரு நாடகம் முழுக்க இருக்கணும்? இதில் மாற்றம் வரவில்லையே!

- சித்தார்த்

வார்கள். கேஷ் டிப்பார்ட்மெண்ட் நண்பர்கள், ஆளுக்கு மூன்று ரூபாய் போட்டு மாலை வாங்கி அணிவிப்பார்கள். மகிழ்ச்சிப் பூரிப்பில் மாமனார் சிரிப்பார். வாய் நிறையப் பேசிக் கொண்டே கன்னத்தில் திருஷ்டி கழித்து நவகோடி அம்மாள் வழியனுப்புகிறதை, நலமடைந்து விட்ட அவளின் கணவர் பார்த்து ரசித்து நிற்பார். டேய் குட்டி, டேய் ஜிங்கு என்று பையன்களைக் கொஞ்சி முடியும். ஜன்னலில் விஜயலக்ஷ்மி அவன் விரல்களைப் பிடித்துக் கொள்வாள். வன்னி மரத்தில் கிழவி சடலம் போல் காண்டீபம் ஒளிந்து கொள்ளும். மனமில்லாமல் வடக்கிருக்கத் தமிழன் புறப்படுவான். தங்குவதற்கு அங்கே ஒரு வீடு பார்க்க வேண்டும். மூத்தவனுக்குத் தோதாக ஒரு பள்ளிக் கூடம் தேட வேண்டும். ரேஷன் கார்டு, கேஸ் கனெக்ஷன் என்று அவன் இயல்புக்கு ஒவ்வாத அலுப்பூட்டும் ஆயிரம் அலுவல்கள் காத்திருக்கும்.

''ஒரே ஒரு ஆறுதல்....''

தலையணையில் இரவு விளக்கில் லக்ஷ்மிநாராயணன் கரகரக்கிறான்.

''என்ன?''

விஜயலக்ஷ்மி ஆவலாய்க் கேட்கிறாள்.


''பம்பாய் போனா கரண்ட் அக்கவுண்ட் வனஜாவைப் பார்க்கலாம்.''

''உதை!''

(முற்றும்)

TVமர்சனம்

"செம்மங்குடி ப்ரோக்ராம் பார்த்தியோ...?"



1. டாட்டா! நான் 'முதியோர் இல்லம்' போறேன்! வயசானவங்களெல்லாம் அங்க எவ்னோ ஜாலியா இருக்காங்க! செய்தி விமர்சனத்துல பார்த்தேன். எனக்கும் தான் வயசாயிடுச்சி. சேர்த்துக்கறாங்களான்னு கேக்கப் போறேன்!

2. அடிக்கடி அறிவொளி, அறிவொளிங்கறாங்க. அறிவொளி கல்யாணமாம். அறிவொளி ஓட்டப் பந்தயமாம். போற போக்குல அறிவொளி சமையல், அறிவொளி குளியல்தான் பாக்கி!

3. சன்டே, செம்மங்குடி ப்ரோக்ராம் சூப்பர் இல்ல? நீ பார்த்தியோ?

நாம பார்த்து என்ன பிரயோஜனம்? மூணு வௌவாலுக்கு முன்னூறு ரூபா பிடுங்கற பாட்டுக்காரங்கன்னா பார்த்திருக்கணும்! மனுஷர் சொல்லிக் கொடுக்க பைசா வாங்க மாட்டாராமே!

4. ஹைதராபாத் 'வயலும் வாழ்வும்'ல காய்ந்த திராட்சை தயாரிப்பு பத்தி காட்டினாங்க. பார்க்க சகிக்கலே. என்னென்னமோ கெமிகல்லெல்லாம் போட்டு சேறு மாதிரி ஊறவைச்சி... உவ்வே! அதைப் பார்த்தப்புறம் யார் தொடுவா பழத்தை?

5. மெட்ரோ சானல்ல Best Songs நிகழ்ச்சி ரொம்ப இன்ட்ரஸ்டிங் இல்ல?

பாட்டு கிடக்கட்டும்.. நடுநடுல அந்தப் பொண்ணு ப்ரியா அடிச்ச கமென்ட்ஸ் இருக்கே... வாவ்! செகண்ட் சானலோட மடிசஞ்சித் தனமெல்லாம் போயே போச்சு! போயிந்தே!

6. 'கரென்ட்' – ஹிந்திப் படம் யார் பார்த்தது?

நான் பார்த்தேன். அம்மாடியோவ்! தத்தை ஸ்பீட். ரெண்டு சீனுக்கு நடுல ஒரு நீள தூக்கம் போட்டு எழுந்திருக்கலாம்!

– கிச்சா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED No. M. 4362
Registered as Newspaper in Sri Lanka